YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
Regested No. QD/130/News/2011
ஓசை : 01 | நாதம் : 28 | வெள்ளிக்கிழமை 13.05.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

யாழ்., கிளிநொச்சி உள்ளூராட்சி தேர்தல்

# நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை ஏற்குமாறு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 19 வேட்புமனுக்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளருக்கும் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஏராளமான (6ஆம் பக்கம் பார்க்க)



மல்லாகம் நீதிமன்ற கட்டடம் அமைக்கப்பட்டுவரும் காணியில் அத்திபாரம் வெட்டும்போது சிதைவடைந்த நிலையிலுள்ள எலும்பின் எச்சங்கள் மீட்கப்பட்டன. இவை மனிதஎச்சங்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் மீண்டும் நேற்று தோண்டப்பட்டது.இதனை மல்லாகம் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜே. கஜநிதிபாலன் பார்வையிடுவதை படத்தில் காணலாம். (படம்- வண்ணார்பண்ணை)

# செனட்சபை அமைப்பது தொடர்பில் அரசு - கூட்டமைப்பு கலந்துரையாடல்

## பேச்சு சிறப்பாக நடைபெறுகிறது என்கிறது அரசு

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் செனட் சபை ஒன்றை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் இந்த விடயம் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, இதற்காக அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமானகெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் (6ஆம் பக்கம் பார்க்க)

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை

# அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பான் கீ மூன் ஆலோசனை

இலங்கை விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன என்பது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தீவிரமாக ஆலோசித்து வருகிறார் என்று அவரது (6ஆம் பக்கம் பார்க்க)

# சரணடையும் புலிகளின் முக்கியஸ்தர்கள் பட்டியல் எமக்கு கிடைக்கவில்லை

அமைச்சர்கெஹெலிய

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் புலிகளின் முக்கியஸ்தர்கள் சரணடைவது தொடர்பான கோரிக்கை அமெரிக்க தூதுவர் ஊடாக நோர்வேயினால் முன்வைக்கப்பட்டபோது நாங்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் சரணடைபவர்கள் தொடர்பான பட்டியலை கேட்டோம். (6ஆம் பக்கம் பார்க்க)

# ராதிகா சிற்சபேசனுக்கு ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து



கனடாவின் முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள ராதிகா சிற்சபேசனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி கனடாவில் நடைபெற்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ள கன்சர்வேடிவ் கட்சி மற்றும் அதன் பிரதமர் (6ஆம் பக்கம் பார்க்க)

# எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் மீள்குடியேற அனுமதி மறுப்பு

கொடிகாமம்

யாழ்ப்பாணம் தென்மராட்சி எழுதுமட்டுவாள் தெற்குப் பிரதேசத்தில் மீள்குடியேறி வாழ்வதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் தற்போது மக்கள் அங்கு செல்வதற்கு படையினர் அனுமதி மறுப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இப்பகுதி மக்கள் தங்கள் வாழ்விடங்களை துப்புரவு செய்வதற்காக சென்ற போது எழுதுமட்டுவாள் முன் காவலரணில் உள்ள படையினரே இவ்வாறு மக்களை திருப்பி (6ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீள்குடியேறியுள்ளவர்களின் பிரச்சினைகளை தீர்க்க நீதியமைச்சர் நடவடிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் -முஸ்லிம் கிராமங்களில் வசிக்கும் மீள் குடியேறிய மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத் தருவதாக நீதியமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சர் ஹக்கீம் வன்னி மாவட்டத்திற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டபோது முல்லைத்தீவுக்குச் சென்று மீள் குடியேறிய மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்ததோடு மாவட்ட செயலாளர் பத்திநாதன், பிரதேச செயலாளர் திரு. தயானந்தன் ஆகியோருடனும் ஏனைய ஊர்ப் பிரமுகர்களுடனும் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

முல்லைத்தீவு நகரம், தண்ணீரூற்று, ஹிஜ்ராபுரம், வண்ணான்குளம், வட்டாரப்பனை போன்ற மீள் குடியேறிய மக்கள் வாழும் கிராமங்களில் மீள்குடியேறி வாழும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அடிப்படை வசதிகள் இன்றி தற்காலிக ஓலைக் கொட்டில்களில் மின்சாரம், மலசலகூட வசதி என்பன அற்ற நிலையில் காலத்தைக் கழிக்கின்றனர்.

பெருமளவிலான மீள்குடியேறிய மக்கள் வாழும் ஹிஜ்ராபுரத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. நீராவிப்பிட்டியில் வீதிகளுக்கு மட்டும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீள்குடியேறிய மக்கள் வாழும் தமிழ், முஸ்லிம் கிராமங்கள் பெரும்பாலும் இருளில் மூழ்கியுள்ளன. ஓலைக் குடிசைகளில் குப்பி விளக்கு ஒளியில் ஆபத்தா ன சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பொதுவாக யுத்த காலத்தில் முல்லைத்தீவு பெரிதும் பாதிக்கப்பட்ட போதிலும் அம்மாவட்டம் இறுதிக் கட்டப் போரின் போது முற்றாகச் சேதமடைந்துள்ளது என அமைச்சர் ஹக்கீம் அண்மையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

1981 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முறிப்பு, கொட்டியாகும்பம் என்னுமிடத்தில் நூறு பேருக்கு காணி வழங்கப்பட்ட போதிலும் அவற்றிற்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. அவற்றை விரைவாக வழங்குவதாக மாவட்டச் செயலாளர் பத்திநாதன், அமைச்சர் ஹக்கீமிடம் உறுதியளித்துள்ளார். காணி அற்றவர்களுக்கு புதிதாக காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அவர் அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

ஹிஜ்ராபுரம் பள்ளிவாசலுக்கான காணி, பாடசாலைக் காணி, நீராவிப்பிட்டி பாடசாலைக் காணி ஆகியவற்றிற்கான எல்லைகளை வரையறுத்து அவற்றைப் பெற்றுக் கொடுப்பதாகவும் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஹக்கீமிடம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் போர் உக்கிரமமாக நடந்து கொண்டிருந்த 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கோப்பாபுலவு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வட்டாரப்பளையில் தற்பொழுது இன்னல்களுக்கு மத்தியில் வசித்து வரும் தமிழ் மக்களை சந்தித்த அமைச்சர் ஹக்கீம் அவர்களது விவசாய, மேய்ச்சல் நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களையும் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். அதிஉயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட காணிகளில் இராணுவத்தினரும் கடற்படையினரும் நிலை கொண்டுள்ளதால் அதில் சில நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டம் மீண்டும் புத்தெழுச்சி பெற்று வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், மின்சாரம் வழங்குவது தொடர்பில் தாம் மிக விரைவில் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் கூறினார்.

## லங்கா ஈ நியூஸ் மீதான தடை நீக்கப்பட்டது

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை பூகொடை நீதிவான் நீதிமன்றம் நேற்று நீக்கியுள்ளது. அத்துடன் கைது செய்யப்பட்டிருந்த இணையத் தளத்தின் ஊடகவியலாளர் சாந்த விஜேய சூரியவையையும் நீதிமன்றம் விடுவித்தது.

இதேவேளை லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தியமை மற்றும் ஊடகவியலாளர் சாந்த விஜேய சூரிய கைது செய்யப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து அண்மையில் கொழும்பு புறக்கோட்டையில் ஆர்ப்பட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடல் நீர் சிவப்பு நிறமாக மாற்றம்

யாழ்ப்பாணம் வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் இருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் கடல் நீர் சிவப்பு நிற நீராகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியின் தாக்கமே இவ்வாறு கடல் நீர் சிவப்பு நிறமாக இருப்பதற்கு காரணமாக அமையலாம் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்துள்ளார்.

கடல் நீர் சிவப்பாக மாறியதற்கான காரணத்தை அறிவதற்காக தற்போது அந்தக் கடற்பரப்பில் உள்ள நீர் எடுத்துச் செல்லப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 30 ஆயிரம் பேரை அரச சேவையில் உள்ளீர்க்க திட்டம்

இலங்கை அபிவிருத்தி அதிகாரிகள் சேவை மற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் சேவை என்ற அடிப்படையில் 30 ஆயிரம் பேரை அரச சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் அமைந்த 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட யோசனைக்கு அமையவே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அந்த வகையில் பட்டதாரிகள் 15 ஆயிரம் பேரும் க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரண தரம் சித்தியடைந்தோர் 15 ஆயிரம் 2011 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

மேலும் சில அமைச்சரவை முடிவுகள் வருமாறு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நீர்வழங்கல் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள அரசாங்கம் 164 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியும் இதற்கு உதவி வழங்குகின்றது. இதன்மூலம் இரண்டு மாவட்டங்களினதும் சுமார் மூன்று இலட்சம் மக்கள் நன்மையடைவார்கள். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த திட்டம் நிறைவேற்றப்படும்.

இலங்கையில் பெற்றுக்கொள்ளப்படும் சாரதி அனுமதிப் பத்திரங்களை இத்தாலியில் பணிபுரியும் இலங்கையர்கள் அந்நாட்டில் நேரடியாகவே பயன்படுத்தும் வகையிலான இருதரப்பு உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இலங்கையில் பெறப்படும் சாரதி அனுமதிப்பத்திரங்களை இத்தாலியில் நேரடியாக பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

கந்தளாய் ஆதார வைத்தியசாலையை புனரமைக்கவும் நோயாளர் விடுதிகளை அதிகரிக்கவும் 37 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அங்குலானையில் 384 வீடுகளைக் கொண்ட வீட்டுத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## நாட்டில் சகல இன மக்களும் ஏற்கும் தீர்வுத்திட்டம் முன்வைக்கடவேண்டும்

### ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு

தேசிய பிரச்சினைக்கு நாட்டின் சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றுக்கு அரசாங்கம் செல்ல வேண்டும். சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் என அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டமே தற்போது அவசியமாகும். இது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரவி கருணாநாயக்க எம்.பி. மேலும் குறிப்பிடுகையில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் ஆளும் தரப்புக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின்போது அரசியல் தீர்வு தொடர்பான இணக்கப்பாடு எட்டப்படவேண்டும்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இந்நிலையில் அரசியல் தீர்வின் தேவை அதிகளவில் வலியுறுத்தப்பட்டுவருகின்றது. இதனை நாங்கள் ஆரம்பத்திலிருந்தே வலியுறுத்திவருகின்றோம்.

தேசிய பிரச்சினைக்கு சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் என அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படவேண்டும் என்பது ஐக்கிய தேசிய கட்சி ஆரம்ப காலத்திலிருந்து கொண்டுள்ள நிலைப்பாடாகும்.

எமது அந்த நிலைப்பாட்டில் தற்போதும் எந்த மாற்றமும் இல்லை. சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம். சர்வதேச மட்டத்தினர் அரசியல் தீர்வை வலியுறுத்தும் முன்னர் நாம் அதனை செய்துவிடவேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

இதேவேளை தேசிய பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வுத்திட்டத்தை முன்வைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று அறிவிக்கப்படவேண்டும். அப்போது தான் எமது நிலைப்பாட்டை நாங்கள் அறிவிக்கலாம் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தடம் பதிக்கும் ஜே.வி.பி.



**ஜே.ஜி. ஸ்டீபன்**

> "வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் கட்சிகள் ஒருபுறமிருக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய சிங்கள கட்சிகளும் வடக்கில் காலூன்றி விட வேண்டும் என்ற தூர நோக்கு சிந்தனையுடன் செயற்பட்டு வருகின்றன. இதில் முக்கிய இடத்தை வகிக்கும் கட்சியாகவே ஜே.வி.பி. இருக்கின்றது."

வன்னித் தமிழர்கள் உட்பட வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களின் மீது புதிதாக பாசத்தையும் பரிவையும் காட்டி அந்த மக்களின் தற்கால பிரச்சினைகள் சம்பந்தமாக முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்ற ஜே.வி.பி. யானது தனது அரசியல் இருப்பினை வடக்கில் ஊன்றிக் கொள்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது என்று கூறுவதில் தவறு இருப்பதாக தெரியவில்லை.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் நிறுத்திவிடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தங்களை பிரயோகித்து பூரண ஆதரவை வழங்கியிருந்த இந்த கட்சியின் அன்றைய நிலைப்பாட்டை எவரும் மறந்து விடவில்லை. ஜே.வி.பி. கட்சி தற்போது கூறுவதைப் போல், தாம் யுத்தத்தை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியதானது விடுதலைப் புலிகளையும் அவர்களது பயங்கரவாதத்தையும் ஒழித்துக் கட்டுவதற்காகவேயன்றி தமிழ் மக்களை கொலை செய்வதற்கு அல்ல என்றும் யுத்தமானது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் கூறுகின்றது. இதனையே இரண்டு வருடங்களுக்கு முன்னரும் கூறி வந்தது. எது எவ்வாறிருப்பினும் நடந்து முடிந்த கொடிய யுத்தத்தால் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும் இலட்சக்கணக்கானோர் அகதிகளாகியும் ஒட்டுமொத்த வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தமது சொத்துக்களை, சுகங்களை இழந்தது மாத்திரமே எஞ்சியிருக்கிறது.

யுத்தம் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் எட்டிவிட்ட நிலையில் யுத்த பாதிப்புக்கள் பூரணப்படுத்தப்படாமையானது பாதிக்கப்பட்ட மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. இது ஒருபுறமிருக்க காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் மற்றும் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டோரின் உறவுகள் தாங்கொணா துயரங்ளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் இறுதிக் கட்ட யுத்தத்தின்போதும் அதன் பின்னரும் கைது செய்யப்பட்ட முன்னால் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களது விபரங்களை அறிய முடியாத காரணத்தினால் அவர்களது உறவினர்களின் துன்ப, துயரங்கள் பன்மடங்காக அதிகரித்திருக்கின்றன. இந்நிலைமையில் அரசாங்கத்தினால் உரிய பதில் கொடுக்கப்படாதிருக்கின்றது.

இந்நிலையில் அரசாங்கத்தின் இயலாமையும் வடக்கில் துன்பபப்படுகின்ற தமிழ் மக்களின் நிலைமைகளையும் நன்றாக உணர்ந்து கொண்ட ஜே.வி.பி. யானது தனது தூர நோக்கு சிந்தனையை வட பகுதியில் பதித்து விடுவதற்கு எத்தனித்திருக்கின்றது. அந்த வகையில் அண்மைக் காலமாக ஜே.வி.பி. யின் தலைவர் உட்பட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்துக்கும் வன்னி நிலப்பரப்புக்கும் பயணங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதேவரிசையில் ஜே.வி.பி. யின் நாம் இலங்கையர்கள் என்ற அமைப்பு வடக்கு கிழக்கில் காணாமல் போனோரை தேடித் தருவதாக கூறியும் வடக்கின் நிலைமைகளையும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் காட்டுவதாக கூறியும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்ற அதேவேளை, செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

ஜே.வி.பி. யின் மே தினக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது காணாமல் போனோரின், கடத்தப்பட்டோரின் உறவினர்களை அழைத்து வந்து சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி. மீதான நல்லெண்ணத்தை அதிகரித்துக் கொண்டது. இது துன்பபடுகின்ற அந்த தமிழ் உறவினர்கள் மீதான பாசத்தின் அறிகுறியா அல்லது கடந்த பல தேர்தல்களில் பாரிய பின்னடைவை கண்டு வருகின்ற தமது கட்சியின் எதிர்கால அரசியல் கனவா என்றும் கேட்கத் தோன்றுகிறது. அது மட்டுமல்லாது கொழும்பிலுள்ள சிறைச்சாலைகளுக்கும் அழைத்து வந்து அந்த மக்களுக்கு சிறிதளவானதொரு ஆறுதலையும் பெற்றுக் கொடுத்துள்ளது என்பதை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னதாக தமிழ் மக்களால் இனவாதக் கட்சியென்று வர்ணிக்கப்பட்ட ஜே.வி.பி. பிற்காலத்தில் தமது கட்சியிடம் இனவாதப் போக்கு என்பதை நிரூபித்தும் வருகின்றது. யுத்தத்துக்கு ஆதரவாக செயற்பட்ட ஜே.வி.பி. யுத்தம் நிறைவடைந்த கையோடும் வடக்கு கிழக்கின் தேவை குறித்தும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்தும் அதேவேளை, அபிவிருத்தி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஆகியவை தொடர்பிலும் நல்ல பல கருத்துக்களை அரசாங்கத்துக்கு வலியுறுத்து வந்ததை எவராலும் மறுக்கமுடியாது.

ஜே.வி.பி. யின் தற்கால ஆமைவேக அரசியல் நகர்வானது எதிர்காலத்தில் பாரியதொரு முன்னேற்றத்தை பெற்றுக் கொடுப்பது உறுதியாகும். இது உணரப்பட்டதன் அடிப்படையிலேயே கடந்த காலத்தில் ஜே.வி.பி. எம்.பி. க்கள் யாழ்ப்பாணத்தில் தாக்கப்பட்டனர். அது மட்டுமல்லாது தென் பகுதியிலும் அக்கட்சிக்கு பாரிய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தது.

> "ஜே.வி.பி. யின் மே தினக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றபோது காணாமல் போனோரின், கடத்தப்பட்டோரின் உறவினர்களை அழைத்து வந்து சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி. மீதான நல்லெண்ணத்தை அதிகரித்துக் கொண்டது. இது துன்பபடுகின்ற அந்த தமிழ் உறவினர்கள் மீதான பாசத்தின் அறிகுறியா அல்லது கடந்த பல தேர்தல்களில் பாரிய பின்னடைவை கண்டு வருகின்ற தமது கட்சியின் எதிர்கால அரசியல் கனவா?"

வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் கட்சிகள் ஒருபுறமிருக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய சிங்கள கட்சிகளும் வடக்கில் காலூன்றி விட வேண்டும் என்ற தூர நோக்கு சிந்தனையுடன் செயற்பட்டு வருகின்றன. இதில் முக்கிய இடத்தை வகிக்கும் கட்சியாகவே ஜே.வி.பி. இருக்கின்றது. ஜே.வி.பி. யின் தற்கால போக்குகள், தமிழ் மக்கள் மீதான கரிசணை மற்றும் அரசியல் ரீதியிலான நோக்கு ஆகியவற்றைப் பார்த்து வடக்கில் கணிசமான ஆதரவு அக்கட்சிக்கு திரண்டு வருகின்றமையை காணக் கூடியதாக இருக்கின்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களது பிரச்சினைகள் விடயத்திலும் ஜே.வி.பி.யின் மாணவ சங்கம் தலையீடு செய்திருக்கின்றது. இவ்வாறு சகல விதத்திலும் தமது தூர நோக்கு சிந்தனையை வடக்கில் பதித்து வருகின்ற ஜே.வி.பி. எதிர்காலத்தில் தமது கட்சியின் சார்பில் மாகாண சபைக்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ உறுப்பினர்களை பெற்றுக் கொள்ளும் ஒரு திட்டத்தை மிகக் கட்சிதமாக மேற்கொண்டு வருகின்றது.

இதனை தவறு என்றோ அல்லது சிங்களக் கட்சியான ஜே.வி.பி. யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டால் வடக்கில் தடம் பதிக்கக் கூடாது என்று கூறுவதற்கோ எந்தத் தரப்பினருக்கும் உரிமை கிடையாது. ஜனநாயக நாட்டில் அதன் உரிமை சகலருக்கும் பொறுத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 மே 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## யுத்தம் விதைத்த கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஏற்படும் காலதாமதம்

வட பகுதியில் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை முற்றாக அகற்றுவதற்கு இன்னும் எட்டு ஆண்டுகள் தேவை என கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள சுவிற்சர்லாந்து அமைப்பின் திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இவரது கணிப்பு உண்மையாகும் பட்சத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றப் பணிகள் பூர்த்தியடைவதற்கு இன்னும் குறைந்தது 8 ஆண்டுகள் எடுக்கும் என்பது கவனிக்கத்தக்க விடயமாகும்.

யுத்த காலத்தில் மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரும் பரஸ்பரம் கண்ணி வெடிகளை புதைத்தனர். இவ்வாறு வடக்கு கிழக்கில் மாத்திரம் சுமார் மூன்றரை இலட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாக முன்னர் கணக்கெடுக்கப்பட்டிருந்தது. கண்ணி வெடிகளில் சிக்குண்டு நூற்றுக்கணக்கனோர் உயிரிழந்தனர்; மேலும் பலர் அவயவங்களை இழந்தனர். இதனால் யுத்தம் முடிவடைவதற்கு முன்பே கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அதாவது, வடக்கின் ஒவ்வொரு பிரதேசமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து சில நாட்களுக்குள் கண்ணி வெடியகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பணிகளில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. உள்நாட்டு பணியாளர்களும் கண்ணிவெடியகற்றும் பயிற்சிகளைப் பெற்று அந்நடவடிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் மாத்திரம் கண்ணி வெடிகளில் சிக்குண்டு 49 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே கண்ணி வெடிகளை கூடிய விரைவில் அகற்றி முடிக்க வேண்டியது அவசியமாகவுள்ளது.

எனினும், அப்பணி என்பது நினைத்த மாத்திரத்தில் ஒரு நாளிலோ அல்லது ஒரு வாரத்திலோ செய்து முடிக்கக்கூடிய ஒன்றல்ல என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

முதலில், கண்ணி வெடி புதைக்கப்பட்டுள்ள பிரதேசத்தை அடையாளம் கண்டு, அப்பிரதேசத்தில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு பல தரப்பினரிடமிருந்தும் அனுமதியைப் பெற வேண்டும். அதன்பின்னர் அங்குலம் அங்குலமாக வெடிகளை அகற்றி, அப்பகுதியில் கண்ணி வெடிகள் எதுவுமில்லை என்ற உறுதியை வழங்க வேண்டும். இவ்வாறான நீண்டதொரு நடைமுறையை துரிதப்படுத்துவது அவசியம்.

இவ்வாறு கண்ணி வெடி அகற்றப்பட்ட பல பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஆயினும் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்தும் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியுள்ளது. கண்ணி வெடி அகற்றப்பட்ட பின்னரே மீள் குடியேற்றத்தை மேற்கொள்ள முடியும் என அரசாங்கமும் கூறிவருகின்றது.

இந்நிலையிலேயே கண்ணிவெடியகற்றும் சுவிற்சர்லாந்து நிறுவனத்தின் அதிகாரி மேற்படி கருத்தினை தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 2 வருடங்கள் பூர்த்தியடைந்த போதும் இன்னும் மீள் குடியேற்றப்படாத மக்கள் நாளாந்தம் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது இப்படியிருக்க கண்ணிவெடிகளை முற்றாக அகற்றுவதற்கு இன்னும் 8 வருடங்கள் எடுக்கும் எனத் தெரிவித்துள்ளமையானது மீள்குடியேற்றத்திற்காக மக்கள் அதைவிடக் கூடுதலான காலத்திற்குக் காத்திருக்க வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

எனவேதான் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டிய பகுதிகளில் கண்ணி வெடி அகற்றலை துரிதப்படுத்துவதற்கு சர்வதேச நாடுகளினதும் நிறுவனங்களினதும் உதவியைப் பெற்றுக் கொள்வதுடன் கண்ணிவெடியகற்றும் பணிகளில் காணப்படும் தடைகள் மற்றும் நடைமுறைச் சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கு அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவதன் மூலம் கண்ணி வெடியற்ற தேசத்தைக் கட்டியெழுப்ப பங்களிப்பு நல்க வேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## அன்று தொடக்கம் இன்று வரை துரோகம் இழைக்கும் கருணாநிதி

**தமிழக முதலமைச்சர்கருணாநிதி அன்று முதல் இன்றுவரை ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்து வருகிறார் என்று சாரப்பட பழ. நெடுமாறனால் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

3

### பிரபாகரன், உமா மகேஸ்வரன் கருணாநிதியை சந்திக்கவில்லை

கருணாநிதி விடுத்த அழைப்பினை ஏற்று ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகிய இயக்கத் தலைவர்கள் அவரைச் சந்தித்தனர். ஆனால், புலிகளின் தலைவர் பிரபாகரனும், புளோட் இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரனும் அவரைச் சந்திக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவர் பத்மநாபா, ஈரோஸ் தலைவர் பாலகுமாரன் ஆகியோரை தி.மு.க. தலைவர் கருணாநிதியைச் சந்திக்க அழைத்துவந்து புகைப்படம் எடுக்க வைத்ததில் சிறீ சபாரத்தினத்தின் பங்கு மிகப்பெரியதாகும். இந்தப் படத்தை கருணாநிதி அனைத்துப் பத்திரிகைகளிலும் வெளியிடவைத்தார். இதன் மூலம் ஈழத்தமிழ் போராளிகள் தனது பக்கமும் இருக்கிறார்கள் என்பதை நிலைநிறுத்த முயன்றார்.

போராளி இயக்கத் தலைவர்களை தான் சந்திப்பதற்குக் குறித்த நாளிற்கு முதல் நாளிலேயே கருணாநிதி மூன்று இயக்கத் தலைவர்களைச் சந்தித்து ஓர் அரசியல் நாடகத்தை மேடையில் ஏற்றி அதனை ஒரு முக்கிய அரசியல் நிகழ்வாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது கண்டு எம்.ஜி.ஆர். கடுங்கோபம் அடைந்தார். நல்ல நோக்கத்துடன் தான் மேற்கொண்ட ஒற்றுமை முயற்சியை தன்னல அரசியல் நோக்கத்திற்காக கருணாநிதி குழப்ப முயன்றதைக் கண்டு அவர் சினமடைந்தார்.

இதற்குப் பின்னர் தமிழகப் பொலிஸாரின் உயர் அதிகாரிகளில் ஒருவரான அலெக்சாண்டர் புலிகளின் அலுவலகத்திற்குச் சென்று பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசினார். தனது உன்னதமான முயற்சியை சீர்குலைப்பதற்காக கருணாநிதி விரித்த வலையில் பிற போராளி இயக்கத் தலைவர்கள் சிக்கியது குறித்து முதலமைச்சர் பெரும் வேதனை அடைந்துள்ளார் எனவும், புலிகள் இயக்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச அவர் ஆர்வமுடன் உள்ளார் எனவும் கூறினார்.

அலெக்சாண்டர் கூறிய விவரங்களை பாலசிங்கம் பிரபாகரனுக்குத் தெரிவித்தார். இந்த அழைப்பையும் ஏற்க மறுப்பது நல்லதல்ல என பிரபாகரன் முடிவுசெய்தார். ஆனாலும் பிரபாகரன் சார்பில் பாலசிங்கம், இளங்குமரன், கேணல் சங்கர், மு. நித்தியானந்தன் ஆகியோர் முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்தித்துப் பேசுவது என்றும் பின்னர் பிரபாகரன் சந்திப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அதற்கிணங்க பாலசிங்கம் தலைமையில் புலிகளின் குழுவினர் முதலமைச்சர் எம்.ஜி.ஆரைச் சந்தித்துப் பேசினர். புலிகளின் கோட்பாடு, செயற்பாடு ஆகியவை குறித்து எம்.ஜி.ஆர். எழுப்பிய கேள்விகளுக்கு பாலசிங்கம் திருப்திகரமான பதில் அளித்தார். சுமார் ஒரு மணி நேரத்திற்குமேல் நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் இறுதியில் புலிகள் இயக்கத்தின் மீது எம்.ஜி.ஆருக்கு இருந்த மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. அதன் விளைவாக புலிகள் இயக்கத்திற்கு இரண்டு கோடி ரூபா வழங்க அவர் முன்வந்தார். பிரபாகரனைச் சந்திக்கவும் அவர் விருப்பம் தெரிவித்தார். அந்தக் காலக்கட்டத்தில் எம்.ஜி.ஆர். அளிக்க முன்வந்த இரண்டு கோடி ரூபா என்பது மிகப்பெரிய தொகையாகும். பணப்பற்றாக் குறையினால் பெரிதும் அவதிப்பட்டுக்கொண்டிருந்த புலிகள் இயக்கத்திற்கு எம்.ஜி.ஆரின் உதவி பேருதவியாகும். புலிகளின் உறுப்பினர்களுக்கு தமிழ்நாட்டில் இராணுவப் பயிற்சி அளிக்கவும் அவர்களுக்கு ஆயுதங்கள் வாங்கவும் இந்த உதவி பெரிதும் பயன்பட்டது. புலிகள் இயக்கம் வலிமை வாய்ந்த இயக்கமாக உருவெடுத்தற்கும் இந்த உதவியே அடிப்படை ஆகும்.

தன்னைச் சந்தித்த 3 போராளி இயக்கத் தலைவர்களோடு புகைப்படம் எடுத்து பத்திரிகைகளில் வெளியிட வைத்து விளம்பரம் தேடிக்கொண்ட கருணாநிதி அவர்களுக்கு உதவவோ, ஒற்றுமைப்படுத்தவோ முன்வரவில்லை. அவர்கள் எம்.ஜி.ஆரையும் சந்திக்க இயலாதபடி செய்ததுதான் கருணாநிதியின் சாதனையாகும்.

### உடன்பாட்டிற்கு ஆதரவு

1987ஆம் ஆண்டு ஜீலை 29 ஆம் திகதி இந்திய பிரதமர் ராஜீவ் இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனா ஆகியோர் ஒரு உடன்பாட்டில் கையெழுத்திட்டனர். ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து இந்தியாவும் இலங்கையும் செய்துகொண்ட உடன்பாடு அடிப்படையிலேயே தவறானதாகும். ஈழத்தமிழர் பிரதிநிதிகளும் இலங்கை அரசப் பிரதிநிதிகளும் செய்து கொள்ளவேண்டிய உடன்பாட்டில் இந்தியா நடுவராக விளங்கியிருக்க வேண்டும். ஆனால், இந்தியாவே ஒரு தரப்பாக மாறி இலங்கை அரசுடன் உடன்பாடு செய்தது என்பது ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

ஆனால், இந்த உடன்பாட்டினை தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளரான அ.அமிர்தலிங்கம் வரவேற்று அறிக்கை வெளியிட்டதைக்கண்டு நான் அதிர்ச்சியடைந்தே... உடனடியாக அவரைச் சந்தித்து இந்த உடன்பாட்டில் ஈழத் தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறைகள் எதுவும் காணப்படாத போது இந்த உடன்பாட்டை ஆதரித்தது ஏன் என்று கேட்டேன். அப்போது அவர் சொன்ன பதில் என்னைத் திடுக்கிட வைத்தது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியபடி தான் அறிக்கை வெளியிட்டதாக அவர் கூறினார். மேலும் அத்தகைய அறிக்கையை வெளியிட்டதற்கான பின்னணியையும் அவர் விளக்கிக் கூறினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும் அமெரிக்க தூதரக துணை தலைமை அதிகாரி பேட்டி

**சென்னை:**
தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொள்ளும் என்று சென்னை வந்த அமெரிக்க தூதரக உயர் அதிகாரி டோனால்டு தெரிவித்தார்.

டில்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் துணை தலைமை அதிகாரி டோனால்டு லூ நேற்று சென்னை வந்தார். இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திமோத்தி ரோமர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ள நிலையில், அந்த பதவிக்கு டோனால்டு லூவின் பெயர்தான் பலமாக அடிபடுகிறது. இந்த சூழ்நிலையில், அவரது சென்னை வருகை முக்கியத்துவம் பெறுகிறது.

இந்நிலையில் தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய பிராந்திய மொழி பத்திரிகைகளின் நிருபர்களுக்கு பேட்டியளித்த அவர்,

பின்லேடனுக்கு எதிரான அதிரடி தாக்குதலை பாகிஸ்தானுக்கு தெரியாமல் அமெரிக்கா எப்படி கச்சிதமாக முடித்தது என்று எல்லோருமே கேட்கிறார்கள். இந்த தாக்குதல் நடவடிக்கை பற்றி மிகக்குறைந்த பேருக்கே தகவல் தெரியும். தாக்குதலின்போது அமெரிக்க வீரர்களுக்கும், அப்பாவி மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் அமெரிக்கா மிகவும் கவனமாக இருந்தது.



பின்லேடனை தொடர்ந்து, மேலும் சில தீவிரவாத தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தீவிரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் கடும் நடவடிக்கை தொடரும். இதற்கு இந்தியா உட்பட உலக நாடுகளின் ஒத்துழைப்பை அமெரிக்கா கோரும்.

சர்வதேச பயங்கரவாதியான தாவூத் இப்ராகிம் பாகிஸ்தானில் இருப்பதாக சந்தேகிக்கும் இந்தியா, அமெரிக்கா பின்பற்றிய வழிமுறையை பின்பற்றலாமா? என்பது குறித்து நான் எதுவும் சொல்ல முடியாது. பின்லேடன் விஷயத்தில் பாகிஸ்தானின் ஒத்துழைப்பை அமெரிக்கா நாடியது. அதேபோல், வேண்டுமானால், இந்தியாவும் நாடலாம்.

பின்லேடன் மரணத்திற்கு பின்னரும் அமெரிக்கா-பாகிஸ்தான் இடையேயான நல்லுறவு வழக்கம்போல் சீராகவே இருந்து வருகிறது. இதேபோல், அமெரிக்கா-இந்தியா இடையேயான உறவும் நன்றாக உள்ளது.

இந்தியாவில் அமெரிக்க தொழில்நிறுவனங்கள் நிறைய முதலீடுகள் செய்து வருகின்றன. அமெரிக்காவில் இந்திய மாணவ-மாணவிகள் 1 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் படிக்கிறார்கள். உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களுடன் ஒப்பிடும்போது சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம்தான் அதிகமான விசாக்களை வழங்குகிறது. இந்தியர்களுக்கு விரைவாக விசா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே, இராணுவ தொழில்நுட்பம், அணு ஆயுத தொழில்நுட்பம் உள்ளிட்ட இனங்களில் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. மேலும் இணைந்து செயற்படுவது தொடர்பாக 21 இனங்களை அடையாளம் கண்டுள்ளோம். அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. வங்கி, காப்பீடு, சில்லறை வணிகம் ஆகிய துறைகளில் உள்ள சில விதிமுறைகள் காரணமாக அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவுக்கு வரமுடியவில்லை. இந்த விதிமுறைகள் சரிசெய்யப்பட்டுவிட்டால் இந்தியாவுக்கு நிறைய அமெரிக்க நிறுவனங்கள் வரும். இதனால், ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று தெரிவித்தார்.

## இலங்கைக்கு உதவி செய்து வரலாற்று தவறுக்கு ஆளாகிவிடக் கூடாது: பா.ஜ.க.

**கோவை:**
ஐ.நா.வின் நடவடிக்கையில் இருந்து தப்புவதற்கு ஏதுவாக இலங்கைக்கு மத்திய அரசு உதவி செய்து வரலாற்றுத் தவறுக்கு ஆளாகிவிடக்கூடாது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார். இது பற்றி கோவையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது



ஐ.நா. விசாரணை அறிக்கையில் இலங்கையில் இனப்படுகொலை நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. உலக நாடுகள் பல இலங்கை அரசை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் எந்த காரணத்தைக் கொண்டும் இலங்கைக்கு இந்தியா ஆதரவு தெரிவிக்கக் கூடாது. இத்தகைய வரலாற்றுத் தவறைச் செய்ய மத்திய அரசு எப்போதும் தயாராக இருக்கக் கூடாது என்றார்.

## அமுலாக்கத் துறையிடம் கனிமொழி கோரிக்கை

**புதுடில்லி:**
2ஜி ஊழல் தொடர்பாக மே 13 ஆம் திகதியான இன்று டில்லியிலுள்ள அமுலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என கனிமொழிக்கு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், விசாரணையை வேறொரு திகதிக்கு மாற்றுமாறு அமுலாக்கத்துறைக்கு கனிமொழி கோரிக்கை விடுத்தார்.

2ஜி ஊழல் வழக்கில் டில்லி பாட்டியாலா சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் கனிமொழி தினமும் ஆஜராகி கையெழுத்திட்டு வரும் நிலையில், கனிமொழி எம்.பி.யும், கலைஞர் டி.வி.யின் நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் டில்லியில் உள்ள அமுலாக்கத்துறை இயக்குநரகத்தில் நேரில் ஆஜராகி மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

சென்னையில் வருமான வரி அலுவலகத்தில் ஆஜராக வேண்டியிருப்பதால், மே 13 ஆம் திகதிக்குப் பதிலாக வேறு திகதியில் ஆஜராக அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆதிவாசிப் பெண்களால் ஓட ஓட அடித்து விரட்டப்பட்ட தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ.



**நகரி:**
ஆதிவாசிகளின் நிலத்தை குத்தகைக்கு விட்டதால் ஆத்திரம் அடைந்த ஆதிவாசி பெண்கள் தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ.வை சாணத்தை வீசி, ஓட ஓட விரட்டி அடித்தனர்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச் சம்பவத்தின் விபரம் வருமாறு:-

ஆந்திர மாநிலத்தில் அரக்குலோயா தொகுதியின் தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ.வாக இருப்பவர் சிவேரு சோமா. இவர் விசாகப்பட்டினத்தில் களிமண் சுரங்கம் தொடர்பாக நேற்று நேரில் ஆய்வு நடத்த சென்றிருந்தார்.

இது தொடர்பாக சயாரி கிராமத்தில் அவர் பொதுமக்களின் கருத்தை கேட்க முயன்றபோது, அங்கு திரண்டிருந்த பெண்கள் அவரை விரட்டியடித்தனர். சிலர் அவரைத் தாக்கியதோடு அவர் மீது சாணத்தையும் அள்ளி வீசினர்.

இதனையடுத்து அவருடன் வந்திருந்த அந்த பகுதியின் மண்டல தலைவர் தன்னோராவ் அந்த இடத்தை விட்டு வெளியேறினார்.

களிமண் சுரங்கத்துக்கான உரிமை சயாரி கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு வழங்கப்பட்டதாகவும், ஆனால் அதை சுரங்க நிறுவனம் ஒன்று எடுத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கூறப்பட்டு வந்த தங்கள் புகாரை, நீண்ட நாட்களாக எம்.எல்.ஏ. கண்டுகொள்ளாததால் அவரை பொதுமக்கள் விரட்டியடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தால் சயாரி கிராமத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

## வெளிநாட்டுக்குச் செல்ல தயாராகும் ரஜனிகாந்த்

**சென்னை:**
குளிர் பிரதேசங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கும் படி நடிகர் ரஜனிகாந்திற்கு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

சென்னையில் அக்னி நட்சத்திர வெயிலுக்கு அவரது உடல் தற்போது இருக்கும் நிலையில் ஒத்துப்போகாது என்பதாலேயே வைத்தியர்கள் இத்தகைய ஆலோசனையை அவருக்கு வழங்கியுள்ளனர்.

இந்நிலையில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற பகுதிகளுக்கு சென்று ஓய்வெடுத்துக் கொள்ள நடிகர் ரஜனிகாந்த் முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு ரசிகர்கள் தொல்லை இருக்கும் என்ற கருத்து வலுத்ததையடுத்து அமெரிக்கா, சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளுக்கு அவர் செல்ல இருப்பதாக கூறப்படுகிறது. இதற்காக தூதரகங்களில் விசா பெறுவதற்கான பணிகளும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி கடலில் மீன்வளம் குறைய இந்திய மீனவர்களே காரணம்

## கடற்றொழிலாளர் சங்க தலைவர் குற்றச் சாட்டு

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையே வடபகுதிக் கடலில் மீன்வளம் குறைவடைவதற்கு காரணம் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதன் காரணமாக மீன்வளம் குறைவடைந்து செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தென்மேல் பருவக்காற்று வீசுவதனால் காலப்பகுதியில் வழமையாகவே மீன்வளம் அதிகரித்துக் காணப்படும். ஆனால் காலநிலை மாற்றத்தினால் இந்த நிலை ஏற்படவில்லை.

இலங்கையின் கடல்வளம் குன்றியதன் காரணமாக மீன்கள் ஓரிடத்தில் தங்கியிருப்பதில்லை. அவை வளம் உள்ள இடங்களைத் தேடிச் செல்வதனாலேயே இலங்கையின் மீன்வளம் குறைந்து செல்கின்றது.

வடபகுதிக் கடற்பரப்பில் மீன்வளம் குன்றியுள்ளதனால் மீன்பிடித் தொழிலைச் மேற்கொள்ளமுடியாத நிலை உருவாகியுள்ளதுடன் மீனவர்கள் பல்வேறு வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் தெரிவித்தார்.

### சௌட்சபை... (தொடர்ச்சி)

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இந்த விடயத்தை கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் சிறந்த முறையில் இடம்பெற்றுவருகின்றன. பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுவிட்டன. தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெறும்.

தற்போதைய நிலைமையில் செனட் சபை ஒன்றை அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுவருகின்றது. அந்த வகையில் செனட் சபையின் கட்டமைப்பு அதன் வடிவம் மற்றும் அது எவ்வாறு அமையவேண்டும் என்பன தொடர்பில் தற்போது கூட்டமைப்புடன் பேச்சுநடத்தப்பட்டுவருகின்றது.

அதாவது அமையவுள்ள செனட் சபையில் எத்தனை பிரதிநிதிகள் இடம்பெறுவார்கள் மற்றும் பிரதிநித்துவம் எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் விரிவான பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் இந்த விடயம் முன்னெடுக்கப்படுகின்றது. 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்வதால் இதற்கு அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. அதன்மூலமே செனட் சபையை அமைக்க முடியும்.

ஆனால் ஒரு விடயத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டும் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் அல்ல. மாறாக இன்னும் கட்சிகள் உள்ளன. எனவே அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தவேண்டியுள்ளது. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரதான கட்சி என்ற வகையில் அதனுடன் பேசிவருகின்றோம்.

### எழுதுமட்டுவாள்... (தொடர்ச்சி)

அனுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலிடத்திலிருந்து தமக்கு உத்தரவு கிடைக்கவில்லை எனவும் அதுவரை அங்கு பொது மக்கள் செல்ல முடியாது எனவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்ற முடியும் என கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினால் சான்றிதழ் வழங்கப்பட்டு அரச அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாள் தெற்கு பிரதேசத்திற்கே தற்போது மக்கள் செல்ல முடியாது என படைத்தரப்பால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ராதிகா... (தொடர்ச்சி)

ஸ்டீவன் ஹார்ப்பர் ஆகியோருக்கும், அத்தேர்தலின் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ராதிகா சிற்சபேசனுக்கும் ஜனாதிபதி வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்திகளை கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் திருமதி சித்ராங்கனி வாகீஸ்வர உரியவர்களிடம் கையளித்துள்ளதாக கனடாவின் இலங்கைத் தூதரக கொன்சியூலர் அதிகாரி கருணாரத்ன பரணவித்தான தெரிவித்துள்ளார்.

கனடாவின் சமஷ்டி பாராளுமன்றத்திற்கு இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண்ணொருவர் முதன்முதலாகத் தெரிவாகியுள்ளமை குறித்து பெரும் மகிழ்ச்சியடைவதாக ராதிகா சிற்சபேசனுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### அடுத்த... (தொடர்ச்சி)

பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

ஐ.நா செய்திகளை வழங்கும் "இன்னர் சிற்றி பிரஸ்" நிறுவனத்தின் செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே பர்ஹான் ஹக் இவ்வாறு தெரிவித்தார்.

நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் பொதுச் செயலாளர் சிபார்சு செய்தால் ஐ.நா பாதுகாப்புச் சபையில் அல்லது பொதுச் சபையில் இலங்கை மீதான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமா என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படுமா என்று பேச்சாளரிடம்

"இன்னர் சிற்றி பிரஸ்" கேட்டதற்கு "நாங்கள் செய்வதை பொருத்திருந்து பாருங்கள்" என்றார் ஹக்.

நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஐ.நா.வில் என்ன செய்ய முடியும் என்று ஐ.நாவின் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடுகள் தொடர்பான ஆலோசகர் ராதிகா குமாரசுவாமியிடம் "இன்னர் சிற்றி பிரஸ்" கேட்டதற்கு "இந்த விவகாரத்தை உறுப்பு நாடுகளில் ஒன்று கையில் எடுத்தால் அதனடிப்படையில் பொதுச்செயலாளர் நடவடிக்கை எடுப்பார்" என்று தெரிவித்தார்.

அதேவேளை எந்தவொரு சபையிலும் இலங்கை பிரச்சினை பற்றிய விவகாரம் விவாதத்துக்கு வந்தால் தான் ஒரு இலங்கையர் என்ற வகையில் அதிலிருந்து தள்ளியே இருப்பார் என்று ராதிகா கூறினார்.

### நிராகரிக்கப்பட்ட... (தொடர்ச்சி)

வழக்குகள் கட்சிகளாலும், சுயேச்சைக் குழுக்களாலும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே அவற்றை விசாரித்த மேன் முறையீட்டு நீதிமன்றம் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களில் பெரும்பாலானவற்றை மீள ஏற்றுக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

இதற்கமைவாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் தாக்கல் செய்யப்பட்டவற்றில் நிராகரிக்கப்பட்ட 33 வேட்பு மனுக்களும் ஐ.தே.க.வின் இரண்டு வேட்பு மனுக்களும் மீள ஏற்றுக் கொள்ளப்படும் நிலை உருவாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட பத்தொன்பது வேட்பு மனுக்களும், அக்மீமன, அக்குரஸ்ஸ, நவகத்தேகம, வென்னப்புவை, பொல்கஹவெல, பலாங்கொடை, கல்நேவ, மொனராகலை, ராஜாங்கன, ஹிங்குராகொடை, தலவாக்கலை, லிந்துலை, எம்பிலிப்பிட்டிய, யட்டிநுவர ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டிருந்தன.

அத்துடன் ஐ.தே.க.வின் பத்தேகம மற்றும் எம்பிலிப்பிட்டிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களும் சுயேச்சைக் குழுக்கள் பலவும் தாக்கல் செய்திருந்த வெவ்வேறு இடங்களுக்கான வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டிருந்தன.

அவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் காரணமாக குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சரணடையும்... (தொடர்ச்சி)

பட்டியல் எமக்கு கிடைக்கவில்லை. இந்நிலையில் பட்டியலை வழங்குவதே முதற்கட்ட நடவடிக்கையாக இருக்கவேண்டும். பட்டியல் கிடைக்காத நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் பேசுவதில் அர்த்தம் இல்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இந்த விடயத்தை கூறினார்.

புலிகள் யுத்தத்தின்போது சரணடைய முன்வந்ததாகவும் ஆனால் அந்த கோரிக்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டதாகவும் விக்கிலீக்ஸ் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்றும் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் :-

விக்கிலீக்ஸ் என்பது ஒரு இணையதளம். எனவே அடிப்படையில் ஒரு இணையளத்தின் செய்திக்கு அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் பதிலளித்துக்கொண்டிருக்கவேண்டியதில்லை.

இராஜதந்திர ரீதியில் அரசாங்கங்கள் அல்லது நாடுகள் ஏதாவது விடயத்தை முன்வைத்தால் அது தொடர்பில் அரசாங்கம் என்ற வகையில் இராஜதந்திர அடிப்படையில் பதிலளிக்கலாம். இந்த விடயத்தில் நாங்கள் மிகவும் தெளிவுடன் புரிந்துகொள்ளவேண்டிய அவசியமாகும்.

எனினும் விக்கிலீக்ஸ் இணையதளத்தில் உள்ள விடயம் குறித்து ஒன்றைக் கூறவேண்டும். அதாவது அப்போதைய அமெரிக்க தூதுவர் ஊடாக நோர்வே புலிகளின் சரணடைதல் தொடர்பில் அரசாங்கத்துக்கு அறிவித்ததாகவே விக்கிலீக்ஸில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் கட்டத்தில் அரசாங்கம் சரணடையப்போகின்றவர்களின் பட்டியலை வழங்குமாறு சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் கோரிக்கை விடுத்தது. எனினும் செஞ்சிலுவை சங்கம் எமக்கு பட்டியலை வழங்கவில்லை. பட்டியலை வழங்குவதே முதற்கட்ட நடவடிக்கையாகும். அதனை வழங்காத நிலையில் அடுத்தக்கட்ட நடவடிக்கை தொடர்பில் பேசுவதில் அர்த்தமில்லை என்றார்.

**கேள்வி** ஐரோப்பிய ஒன்றியத்தில் ஐ.நா. அறிக்கை குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக (நேற்று) கூறப்படுகின்றமை தொடர்பில்?

**பதில்** ஐரோப்பிய ஒன்றியம் இதற்கு முன்னரும் இவ்வாறான நகர்வுகளில் ஈடுபட்டுள்ளது. நாங்கள் எமது நிலைப்பாட்டை மிகவும் தெளிவான முறையில் முன்வைத்துள்ளோம்.


ஐரோப்பிய ஒன்றியம் என்பது ஒரு கட்டமைப்பாகும். அதனுள் எமக்கு ஆதரவான நாடுகளும் உள்ளன. எனவே அவற்றைக் கொண்டு எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவோம்.

**கேள்வி** ஐ.நா. அறிக்கை விடயத்தில் அரசாங்கம் இரட்டை வேடம் போடுவதாக கூறப்படுகின்றதே?

**பதில்** ஒரு இரட்டை வேடமும் இல்லை. மக்களின் பிரதிநிதிகள் ஜனநாயக நாட்டில் கருத்துக்கூறும் உரிமையுடையவர்கள். அவர்கள் பல கருத்துக்களை கூறலாம். ஆனால் அரசாங்கம் என்ற வகையில் ஒரு நிலைப்பாட்டையே முன்னெடுக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குளிர்காலத்தில் இதய நோயாளிகளே உஷார்!



**வெ**யில் காலத்தில் கூட தாங்கி விடலாம் ஆனால், மழைக்காலம் தான் யாரையும் பாடாய்படுத்தி விடும். மூக்கை சிந்துவது முதல் காய்ச்சல் வரை வலம் வரும். அதையும் தாண்டி, குளிர்காலத்தில் தான் 'வீக்'கான பலரும் முழு உஷாரில் இருக்கவேண்டும். அதிகாலையில் 'வோக்கிங்' போவது முதல், உணவுக் கட்டுப்பாடு வரை கவனத்தில் இருந்து சிதறி விடக்கூடாது. வைத்தியரின் சொற்படி கேட்டு நடந்துகொள்வதே நல்லது. இல்லாவிட்டால்...? நிலைமை மோசமாகி விடும், மருத்துவமனையில் ஏகப்பட்ட பணம் இழக்க வேண்டியிருக் கும்.

### இதய நோயாளியா...?

குளிர் காலத்தில்தான் பலருக்கும் அலர்ஜி சுலபமாக, உடலில் கோளாறுகளை ஏற்படுத்திவிடும். குறிப்பாக, ஆஸ்துமாவுக்கு குளிர் காலம் தான் ரொம்பவும் பிடித்தமானது. சுவாசக்குழாய் சுருங்கி மூச்சுவிட முடியாமல் ரொம்பவும் கடுப்பை ஏற்றிவிடும். சுவாசக்கோளாறு களை விட, இதயப் பாதிப்பு உள்ளவர்களுக்குத்தான் குளிர் காலம் 'பரம எதிரி'யான பருவம். இவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலகட்டம் இது தான். கோடைகாலத்தைப் போல நினைத்து குளிரில் வெளியில் சென்றுவர முடியாது.

### ஏன் ஆபத்து மிகுந்தது?

குளிர் காலத்தில் இதய ரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுகின்றன் சுரப்பிகள் வேலை செய்வது மாறுபடுவதால், இதய பாதிப்புக்குக் காரணமாகிறது.

குளிர்காலத்தில் பகல் நேரத்தைவிட, இரவு நேரம் அதிகம். அதனால், வெப்பம் குறைவது இயல்பானது. வெப்பம் குறைந்தால், உடலில் சுரப்பிகள் வேலை செய் வதில் மாறுபாடு ஏற்படும். இரத்தத் தில் முக்கியமாக உள்ள 'கோர்டி சோல்' சுரப்பது குறையும்.

வெப்பம் குறைவாக இருக்கும் என்பதால், குளிர்காலத்தில், இதய நோயாளியின் இரத்தக்குழாய் சுருங்கியும் இறுக்கமாகவும் இருக் கும். இதனால், இதயத்துக்கு இரத்த ஓட்டம் பாதிக்கப்படும்.

உடலுக்கு வெப்பசக்தி தேவை. இந்த வெப்பத்தைத் தருவதற்கு இதயம் வேலைசெய்வது முக்கியம். இதய வால்வுகள் வேலைசெய்தால் தான் அங்கிருந்து இரத்தம் மற்றைய பாகங்களுக்கு அனுப்பப்படும். இரத்தத்தில் ஒக்சிசன் இருப்பது அவசியம். குளிர்காலத்தில் இது குறைந்துவிடும்.

அதிகாலை இரத்த அழுத்தம் ஆபத்தானது. குளிர்காலத்தில் அதிகாலையில் 'வாக்கிங்' போவது, வெளியே போவது போன்றவற்றால் ஒருபக்கம் ஒக்சிசனும் குறைந்து, இரத்த அழுத்தமும் மாறுபடும்.

# உருளைக்கிழங்கு அல்வா



**தேவையான பொருட்கள் :**

உருளைக்கிழங்கு -1/4 கிலோகிராம், சீனி - 1/2 கிலோகிராம், தேங்காய் - பாதி, ஏலப்பொடி - ஒரு தேக்கரண்டி, மாஜரீன் - 50 கிராம், சிறிதாக வெட்டிய கஜூ - 3 மேசைக்கரண்டி, மஞ்சள் கலரிங் - 1/2 தேக்கரண்டி.

**செய்முறை:**

உருளைக்கிழங்கை அவித்து கட்டியில்லாமல் நன்றாக மசித்துவைத்துக் கொள்க. தேங்காயைத் துருவி ஓரளவாக வறுத் தெடுத்து, மசித்துவைத்துள்ள உருளைக்கிழங்கிலிட்டு சீனியை யும் சேர்த்து நன்றாகப் பிசைந்துகொள்க. பின்பு தாச்சியை அடுப் பில் வைத்து, 25 கிராம் மாஜரீனையிட்டு உருகவைத்து, அதனுள் சிறிதாக வெட்டிய கஜூ வையிட்டு பொன்னிறமாகப் பொரித்து வடித்தெடுத்து பின்பு, மிகுதியாகவுள்ள மாஜரீனை பிசைந்துவைத்துள்ள உருளைக்கிழங்குக் கலவையினுள் கொட்டி இடைவிடாது நன்கு கிள றுக.

கலவை ஓரளவாகத் திரளத்தொடங்கும் போது மிகுதியாகவுள்ள 25 கிராம் மாஜரீனும் ஏலப் பொடியும் சேர்த்து, இடைவிடாது கிளறி கலவை உருண்டுதிரளும் பதத்தையடைந்ததும் உட னடியாக அடுப்பிலிருந்து இறக்கி கலரிங், பனானா எசன்ஸ் சேர்த்து, மாஜரீன் பூசிய தட்டில் கொட்டி ஒரு அங்குலத் தடிப்பாகப் பரவி 2" X 2" அளவான துண்டுகளாக வெட்டியெடுத்து பரி மாறாலாம்.

# மரவள்ளி வடை

**தேவையான பொருட்கள்:** மரவள்ளிக்கிழங்கு - ஒரு கிலோகிராம், கோதுமை மா - ஒரு மேசைக்கரண்டி, சிறிதாக வெட்டிய வெங்காயம் - 2 மேசைக்கரண்டி, சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் - 2 மேசைக்கரண்டி, தனி மிகாய்த்தூள் - ஒரு தேக்கரண்டி, உப்புத்தூள் - தேவையான அளவு, தேங்காயெண்ணெய் - 1/4 போத்தல்



**செய்முறை:** மரவள்ளிக்கிழங்கை தோலுரித்துக் கழுவி ஸ்கிரேப்பரில் துருவி எடுத்துகொள்க,. இத் துருவ லைப் பாத்திரத்தில் இட்டு அரித்த கோ துமை மாவு, வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், மிளகாய்த்தூள், உப் புத்தூள் என்பனவற்றைப் போட்டு நன்கு பிசைந்து குழைத்துக்கொள்க. தாச்சியில் எண்ணெயைக் கொதிக்கவைத்து குழைத்துவைத்துள்ள கலவை யை எலுமிச்சம் பழமளவு உருண்டைகளாகப் பிடித்து உள்ளங்கையில் வைத்து மெதுவாக அமர்த்திய பின் எண்ணெயில்போட்டு பொரித்து எடு த்துக் கொள்க.

இவ் வடை களைச் சூடா கப் பரிமாறும் போது அதிக சுவையாக இருக்கும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி.கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சுவேலி பொது சந்தையின்

## அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்யப்படுமா?

அச்சுவேலி நகரமயமாக்கலுக்கு வசதியான நிலைய முக்கியத்துவம் வாய்ந்த மையத்தில் அமைந்துள்ளது அச்சுவேலி பொதுச் சந்தை. அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து ஐந்து பிரதான வீதிகள் பொதுப் போக்குவரத்து வசதிகளைக் கொண்டதாக பிரிந்துசெல்கின்றன. வடக்கே செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்துக்கு குறுகிய தூரத்தில் செல்லக் கூடிய அச்சுவேலி - சந்நிதி வீதி, வடமராட்சி பெரும் பிரிவுக்குச் செல்லும் அச்சுவேலி - பருத்தித்துறை பிரதான வீதி, மேற்கு நோக்கி வலிகாமம் பொரும் பிரிவுக்குச் செல்லும் அச்சுவேலி - சங்கானை வீதி, தென்மேற்கு நோக்கிச் செல்லும் அச்சுவேலி - இராச வீதி, யாழ். நகரத்தை நோக்கிச் செல்லும் அச்சுவேலி - யாழ்ப்பாணம் பெரும் வீதி.

இந்த நிலைய முக்கியத்துவம் அச்சுவேலியின் வளர்ச்சிக்கு கட்டியம் கூறும் வகையில் அமைந்துள்ளதை கருத்தில் கொண்டு இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்த வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, யூனியன் வங்கி, செலான் வங்கி ஆகிய ஆறு வங்கிகள் செயற்படுகின்றன. புதிய இரண்டு வங்கிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டட நிர்மாணப் பணிகள் மிகத் தீவிரமாக முன்னெக்கப்பட்டு வருகின்றன. அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி உட்பட பத்து பாடசாலைகளில் அண்மைக் காலத்தில் மூன்று பாடசாலைகள் மூடப்பட்ட போதிலும் தரம் 1 - ஏ.பி பாடசாலை ஒன்று, தரம் - சீ பாடசாலை இரண்டு உட்பட ஏழு பாடசாலைகள் செயற்படுகின்றன. அத்துடன், நகரக் கட்டுமானத்திற்குரிய வகையில் புதிய கட்டுமானங்களுடன் வளர்ந்துவருகின்றன.

வலி. கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்தில் அச்சுவேலி உப - அஞ்சலகப் பிரிவாக உள்ளது. வலி. கிழக்கு பிரதேச சபையின் 5 உப - அலுவலகங்களிலும் பிரதேச சபைக்குக் கிடைக்கும் வருவாயில் 90 வீதத்திற்குக் குறையாத தொகை அச்சுவேலி உப - அலுவலகம் மூலம் ஈட்டப்படுகின்றது. ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாவை பொதுச் சந்தை மட்டும் குத்தகைப் பணமாக பெற்றுவருகின்றது. இந்த வருடம் ஏலம் கூறல் மூலம் 35 லட்சம் ரூபாவுக்கு அச்சுவேலி பொதுச் சந்தை குத்தகைக்கு விடப்பட்டது.

அதிக வருமானம் ஈட்டிக்கொடுக்கும் பொதுச் சந்தையில் மக்கள் எதிர்பார்க்கும் வசதிகள் எதுவும் இல்லை. 2011 ஆண்டுக்கு ஏனைய நான்கு உப - அலுவலகங்களிலும் பார்க்க சந்தைக்கு குத்தகை ஒரு லட்சம் ரூபாவுக்குக் குறைவான தொகையாகும். அச்சுவேலி பொதுச் சந்தை குத்தகை பெரிய தொகையாக இருந்தபோதிலும் அதில் குறிப்பிட்ட வீதம் ஆண்டுதோறும் அச்சுவேலி பொதுச் சந்தையின் அபிவிருத்திக்கு பிரதேச சபை நிர்வாகம் பயன்படுத்தத் தவறிவிட்டது என வரியிறுப்பாளர்களும் பொது மக்களும் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

### வாகனத் தரிப்பிடம்

சந்தைக்குச் செல்லும் வாகனங்களுக்கு வரி அறவிடப்படுகின்றது. ஆனால், வாகனத்தரிப்பிடம் இல்லை. மழை, வெயில் எதுவானாலும் பாதுகாப்பற்ற நிலையிலேயேவாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. சந்தையின் வரலாற்றில் இதுவரைக்கும் வாகனத் தரிப்பிடத்துக்கு இடம் ஒதுக்கப்படவே இல்லை. வாகனத் தரிப்பிடம் இல்லாமல் வாகனங்கள் சந்தை முழுவதும் சிதறிக் காணப்படும். இந்த வகையில், வாகனச் சொந்தக்காரன் படும் பாடு சொல்லும் தரமன்று. அதேநேரம், சந்தைக்கு வரும் பல நூற்றுக்கணக்கான பாவனையாளர்கள் நாளாந்தம் அனுபவிக்கும் நெருக்கடிகள் - நெருடல்கள் வார்த்தையில் அடங்காது. பொருத்தமான வாகனத் தரிப்பிட வசதியை ஏற்பாடுசெய்வதில் சம்பந்தப்பட்ட நிர்வாகம் ஏன் பொருத்தமான நடவடிக்கைகளை இதுவரை எடுக்கவில்லை என வரியிறுப்பாளர்களும் நுகர்ச்சியாளர்களும் விசனத்துடன் கேள்வி எழுப்புகின்றனர்.

### சந்தையின் தரை அமைப்பு

அச்சுவேலி பஸ் நிலையத்தில் கிழக்குப் புறமாக வடிந்துசெல்லும் நீர் சந்தை வளாகத்திலேயே தேங்கிநிற்கிறது. இந்த வகையில், மழைக்காலத்தில் சந்தையின் தரை சதுப்பு நிலமாகக் காணப்படும். வெள்ளம் தேங்கிநிற்பதால் சுற்றுச் சூழல் பாதிப்படைவதோடு உணவுப்பொருள் விற்பனை நடைபெறும் பகுதியில் சுகாதாரச் சீர்கேடும் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக சந்தைக் குத்தகைக்காரர்கள் பல தடவைகள் முறையீடு செய்தபோதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சந்தைக்கு வரும் நாளாந்த வாடிக்கையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சந்தைப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்காது உடனடியாக சீர்செய்யப்பட வேண்டும். சதுப்பு நிலமாக மாறும் தரைப்பகுதி தார் இடப்பட்டோ அல்லது சீமெந்து இடப்பட்டோ சீர்செய்யப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றனர்.

### மீன்சந்தை இட நெருக்கடி

மீன்சந்தை குறிப்பிட்ட இட அளவைக் கொண்டதாக 50து20 இருப்பதால் சந்தை நேரத்தில் மீன்கொள்வனவு செய்பவர்கள் சந்திக்கும் இடர் சொல்லில் அடங்காது. ஆண்களும் பெண்களும் நெருக்குப்படுவதும் உரியமுறையில் நடமாடமுடியாமல் இடர்படுவதும் நாளாந்தம் நடைபெறும் துன்ப நிகழ்வுகளாகிவிட்டன.

### நீர் விநியோகம்

சந்தையில் பாவனையாளர்களின் பாவனைக்கோ குடிநீர் விநியோக வசதி இல்லை. குழாய் நீர் விநியோகம் இல்லை. இரண்டு கிணறுகள் சந்தை வளாகத்தில் உள்ளபோதிலும் அவற்றை உரியமுறையில் சேமித்துப் பயன்படுத்துவதற்காக தற்காலிய பிளாஸ்ரிக் நீர்த்தாங்கியை அமைத்து குடிநீர் மற்றும் நீர்ப்பாவனை வசதி செய்யப்படாமையால் மீன் உட்பட உணவுப் பொருட்களைக் கையாள்வோர் மற்றும் உணவுப் பொருட்களின் சுத்திகரிப்புப் பணி உரிய முறையில் மேற்கொள்ளப்படாத நிலைமை இருந்துவருகின்றது.

சந்தையின் உட்கட்டுமானங்கள் மற்றும் பொது வசதிகள் உரியமுறையில் நிவர்த்திசெய்யப்பட வேண்டும். வரியிறுப்பாளர்கள், நுகர்ச்சியாளர்களுக்கான வாய்ப்புக்கள் வசதிகள் மற்றும் பொதுச் சுகாதார வசதிகள் காலத்துக்கு ஏற்ப செய்துகொடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோருகின்றனர். பொது மக்களின் கோரிக்கையை உரிய முறையில் வலி. கிழக்குப் பிரதேச சபை நிர்வாக நிறைவுசெய்ய வேண்டும்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை' என நினைத்து செயற்படவேண்டும்'.

அச்சுவேலி நிருபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்

உலக சிரிப்பு தினம் - ஜனவரி 10
உலக நன்னீர் தினம் - மார்ச் 22
தொழிலாளர் தினம் - மே 01
உலக செஞ்சிலுவை தினம் - மே 08
உலக முஸ்லிம் தினம் - மே 8
உலக தாதியர் தினம் - மே 12
உலக குடும்ப தினம் - மே 15
பொதுநலவாய தினம் - மே 24
உலக அன்னையர் தினம் - மே 13

செ. மதுஷா தரம்-07
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி



ஜெ.ஆசிஷ்
தரம் 2B
யா/மாணிக்க வாசகர் வித்தியாலயம்



செ.இலக்கியா
தரம் 6
யா/சுண்டிக்குழி மகளிர் கல்லூரி.

# இளவரசி வேணும்



பொர்ஷியாவின் சுல்தான் எப்போதும் விந்தையான பொருள்களைக் கண்டால் அவற்றைத் தாம் அடையவிரும்புவார். ஒரு நாள் ஒரு இளவரசன் மாயக்குதிரை ஒன்றில் ஏறி அரண்மனை உப்பரிகை மேல் பறந்துகொண்டிருந்தான்.

''இந்த அற்புதமாதன குதிரையின் விலை என்ன?'' என்று கேட்டார் சுல்தான். அந்த இளவரசன், ''இளவரசியைக் கை பிடிப்பது'' என்று கூறினான். சுல்தானும் ஒத்துக்கொண்டார்.

''ஆனால், என்னுடைய மகன் முதலில் இந்தக் குதிரை மீது அமர்ந்து பறப்பதை நான் பார்க்க விரும்புகிறேன்'' என்று சுல்தான் கூறினார். சுல்தானின் மகன் அந்தக் குதிரை மீது அமர்ந்ததும் அது பறந்துசென்று எல்லாருடைய பார்வையிலிருந்தும் மறைந்துவிட்டது. சுல்தானின் மகன் திரும்பி வராததால் சுல்தானும் அமைச்சர்களும் கவலைகொண்டனர். அவர்கள் இளவரசனைக் குற்றம் சாட்டிச் சிறையில் அடைத்தனர்.

சுல்தானின் மகன் காற்றில் மேலே மேலே கொண்டுசெல்லப்பட்டான். அவனால் அந்த மாயக் குதிரையை கட்டுப்படுத்த இயலவில்லை. அவன் அந்தக் குதிரையை வலப்பக்கம் இழுத்தான். இடப்பக்கம் இழுத்தான். ஆனால், எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

பல நாட்கள் பயணம் செய்த பிறகு அவன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான். அரண்மனையில் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். அவன் திரும்பிவந்ததால் அந்த இளவரசனும் விடுவிக்கப்பட்டான். ஆனால், அந்த இளவரசனோ, அவர்கள் தன்னை அவமானப் படுத்தி விட்டனர். ஆதலால், அவர்களைப் பழிவாங்க வேண்டும் எனச் சபதமிட்டான்.

சுல்தானின் அரண்மனையிலே இளவரசிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இளவரசியைக் குணப்படுத்துபவர்களுக்கு சிறந்த வெகுமதி அளிக்கப்படும் என்று சுல்தான் உறுதியளித்தார். இளவரசன் மருத்துவன் போன்று மாறுவேடம் அணிந்து சுல்தானின் அரண்மனையை அடைந்தான்.

''முதலில் மந்திரக் குதிரையையும் இளவரசியையும் என்னிடம் அழைத்துவாருங்கள்'' எனக் கூறினான். மந்திரக் குதிரையும் இளவரசியும் வந்த பின்பு தன் மந்திரசக்தியைப் பயன் படுத்தி இளவரசியைக் குணப்படுத்திவிட்டான்.

அதேநேரத்தில், அவளை இழுத்து தன்னுடைய மாயக்குதிரை மீது அமர்த்திக்கொண்டு பறந்து சென்றுவிட்டான். ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. தனக்குச் சொந்தமான பொருளை தானே அடைந்தான்.

## அன்பு

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' அன்பிற்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அருமையான உயிருக்கு உடம்போட பொருந்தி இருக்கிற உறவு, அன்போடு பொருந்தி வாழும் பயன் என்று கூறுவர். நாம் எல்லோரினதும் மீது அன்பு செலுத்தவேண்டும். அன்பு, பிறருடன் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அது எல்லோரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவிற்கேற்ப சிறப்பைத் தரும். உலகத்தில் இன்பமுற்று வாழ்கின்றவர்கள் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்திவாழும் பயன் என்பர். அறியாதவர் அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்த்தால் அது வீரத்திற்கே துணையாக நிற்கிறது. எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயிலில் காயவைத்து வருவது போல அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும். அன்பு என்கின்ற நிலைமை போல் செல்வம் இல்லை. வேறு எங்கும் அதற்கு நிகரான பொருளும் இல்லை. 'ஆரா இயற்கை அவா நீப்பின் அன்னிலையே பேரா இயற்கை தரும்' என்று வள்ளுவர் திருக்குறளில் விளக்கி கூறியுள்ளார்.

அகத்தில் அன்பு இல்லாமல் உயிர் வாழும் உயிர்வாழ்க்கை வளமற்ற பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது. ''அன்பின் வழியது உயிர்நிலை அது இல்லார்க்கு என்பு தோல் போன்ற உடம்பு.'' அன்பிற்கு இணையானவர்கள் சிலர் உள்ளனர். அதில் அன்னை திரேசாவின் அன்பிற்கு ஈடு இணையேதும் இல்லை. அது போல், மகாத்மா காந்தியடிகள் அன்புவழியில் நின்று நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்தார். அதுபோல், சிபிச் சக்கரவர்த்தி தன்னிடம் அடைக்கலமாக வந்த புறாவிற்காக தன் உயிரையே கொடுக்கத் துணிந்தார். இம் மூன்று பேர் போலவும் வாழ்ந்து வளம் பெறுவோம்.

செ.இலக்கியா, தரம்-06, யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
**அனுப்பவேண்டிய முகவரி**
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வாழ தகுதியற்ற நாடாக பெயர் பெற்றுள்ள கொங்கோ



ஆபிரிக்க கண்டத்தை சேர்ந்த கொங்கோ நாடு பெண்கள் வாழ தகுதியற்ற நாடு என்ற பெயரை பெற்றுள்ளது. இந்நாட்டில் வாழும் பெண்கள் நாள் ஒன்றுக்கு ஆபிரத்து 152 என்ற எண்ணிக்கையில் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாவதாக ஆய் வில் தெரியவந்துள்ளது.

அதாவது ஒரு மணி நேரத்தில் சுமார் 48 பெண்கள் பாலியல் வல்லுறவுக் குட்படுகிறார்கள்

அதேசமயம் ஐ.நா.வின் கணக்கின்படி ஆண்டு ஒன்றிற்கு 16 ஆயிரம் பேர் என தெரிவித்துள்ளது.

70 மில்லியன் மக்கள் தொகை கொண்ட கொங்கோ நாடு மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளின் பரப்பளவிற்கு ஈடானதாக உள்ளது. 2006-07 ஆம் ஆண்டுகளில் மட்டும் 4 லட்சம் பெண்கள் இச்சம் பவத்திற்கு பலிகடாவாகியுள்ளனர்.

இருப்பினும் உள்நாட்டு அரசியல் குழப்பம் மற்றும் துப்பாக்கி கலாசாரம், கல்வியறிவு குறைவு காரணமாக இச் செயல் இடம் பெறுவதாக கூறப்படுறது.

# வில்லியம்ஸ் - கேட்டை ஓவியமாக வரைந்த யானை



தாய்லாந்து நாட்டின் 1996 ஆம் ஆண்டு பிறந்து வளர்கின்றது பூன் மீ என்கிற ஆண் யானை. உலலேயே ஓவியங்கள் வரையும் திறமை உடைய ஒரே ஒரு யானை இதுவே ஆகும். பிரித்தானிய இளவரசர் வில்லியம்ஸ், அவரின் காதல் மனைவி கேட் மிடி ல்டன் ஆகியோரை ஓவியமாக வரைந்து உள்ளது இந்த யானை.

# திபெத் பிரச்சனையில் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு சீனா வலியுறுத்தல்

திபெத் பிரச்சினையை கையாள்வதில் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அமெரிக்காவை சீனா வலியுறுத்தியுள்ளது. அமெரிக்கா, சீனா இடையே வாஷிங்டனில் இரண்டு நாள் இருதரப்பு பேச்சு வார்த்தை நடந்தது.

அதுபற்றி சீன துணை வெளியுறவு அமைச்சர் ஜாங் ஜிஜூன் கூறுகையில், சீனாவின் ஒருங்கி ணைந்த பகுதியாகவே திபெத்தை கருதுவதாக இருதரப்பு பேச்சின்போது அமெரிக்கா தெரிவித்தது. அந்த வாக்கை அமெரிக்க அரசு காப்பாறும் என்று நம்புகிறோம். திபெத் தொடர்பான பிரச்சனைகளில் கூடுதல் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். திபெத் ஆதரவு குழுக்களை ஆதரிக்காமல் வாக்குறுதியை அமெரிக்கா காப்பாற்ற வேண்டும் என்றார்.

சீன அரசால் பிரிவினைவாதியாக கருதப்படும் புத்தமத தலைவர் தலாய் லாமாவுக்கு அமெரிக்க மக்களிடம் அதிக மரியாதை உள்ளது. இப்போது அவர் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்

## பான் கீ மூன் வலியுறுத்தல்

'பொதுமக்கள் மீது கடாபி தரப்பு நடத்தும் தாக்குதல், உடனடியாக நிறுத்த ப்பட வேண்டும்' என, ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார். இந்நிலையில், டிரிபோலி மீதான, 'நேட்டோ ' வின் தாக்குதல் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

லிபியாவில் நடந்து வரும் மோதல் குறித்து, ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், 'முதலில் மிஸ்ரட்டா நக ரில் நடந்து வரும் மோதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அப்போது தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி களை நாம் மேற்கொள்ள முடியும்' என தெரிவித்தார்.

இந்நிலையில், தலைநகர் டிரிபோலியில் கடாபி குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில், 'நேட்டோ' விமானப் படைகளின் தாக்குதல் நேற்றும் தொடர்ந்தது. எனினும், 'நேட்டோ'வின் தாக்குதல், கடாபியை தனிப்பட்ட முறையில் குறிவைத்து நடத்தப்படவில்லை என, அந்த அமைப்பு விளக்கம் அளித்துள்ளது. இதற்கிடையில், மிஸ்ரட்டா நகரில் இருந்து, 25 கி.மீ. மேற்கில் உள்ள ஜாரீக் நகரத்தை எதிர்த் தரப்பினர் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

# அமெரிக்கா மீது விரைவில் தாக்குதல் நடத்துவோம்

## அல்கொய்தா மீண்டும் எச்சரிக்கை

பின்லேடன் கொல்லப்பட்டதால் அல் கொய்தா இயக்கத்தினர் பழிக்கு பழி வாங்க விரைவில் தாக்குதல் நடத்தப்போவதாக அறிவித்தனர்.

இந்த நிலையில் அல்கொய்தா இயக்கத்தின் யேமன் பிரிவு மீண்டும் ஒரு எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

அல்கொய்தா மூத்த தலைவர்களில் ஒருவரான நசீர் - அல் - வகிஷி இணையத்தளம் ஒன்றில் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறி இருப்பதாவது:- எங்களது புனித போர் ஓய்ந்து விடவில்லை. இதுவரை இல்லாத அளவுக்கு அமெரிக்கர்களுக்கு எதிராக மிகப்பெரிய போர் நடத்தப்படும். பின்லேடனை கொன்றுவிட்டதால் எல்லாம் முடிந்து விட்டதாக அமெரிக்கர்கள் முட்டாள்தனமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

விரைவில் நாங்கள் நடத்தப்போகும் புனிதப் போர் மிகப் பெரியதாகவும் மோசமானதாகவும் இருக்கும்.

இதற்காக அமெரிக்கா காத்திருக்கிறது. இதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

அதன் பிறகு புனிதப் போர் தாக்குதல்கள் அணிவகுத்து வரும். பின்லேடன் மரணம் மூலம் எங்களது புனிதப் போர் பணி தீவிரம் அடைந்துள்ளது.

இவ்வாறு அந்த எச்சரிக்கை தகவலில் கூறப்பட்டுள்ளது.

# ஒசாமா இறப்பை கொண்டாட விரும்பாத அமெரிக்கர்கள்



அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடனின் இறப்பை தாங்கள் கொண்டாட விருப்பம் இல்லை என்று பெரு பாலான அமெரிக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பப்ளிக் ரிலீஜன் ரிசர்ச் இன்ஸ்ட் டியூட் சார்பில் நடந்த கருத்துக் கணிப்பின் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

பைபிளில் தெரிவித்துள்ளபடி எதிரியின் மரணத்தை வெற்றி விழாவாகக் கொண்டாடக் கூடாது என்று 60 சதவீத அமெரிக்கர்களும் 10 இல் 6 அமெரிக் கர்கள் ஒசாமா வின் இறப்பை கொண் டாடுவது தவறு என்றும் இஸ்லாம் மரபை மீறியவர் ஒசாமா என்றும் இதனால் இறப்பை கொண்டாடுவது தவறு அல்ல என்றும் ஒருதரப்பினர் தெரிவித்துள்ளதாக அந்த முடிவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# ஆளணி வெற்றிடத்திற்கு ஏற்ப சிற்றூழியர்களை நியமிக்குக

## பிரதம செயலாளர் அறிவுறுத்து

கோப்பாய்,

வட மாகாண சபையிலுள்ள திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்களில் கடமையாற்றும் சிற்றூழியர்களை வெளிவாரியாக நியமிக்கும்போது அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு மட்டும் சிற்றூழியர்களை நியமிக்குமாறு வட மாகாண சபையின் பிரதம செயலாளர், திணைக்களங்கள் மற்றும் அமைச்சு அலுவலகங்களிலுள்ள செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் அமைச்சுக்கள், திணைக்களங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக உள்ள சிற்றூழியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் போது அதற்கான கொடுப்பனவுகளை அந்தந்த அமைச்சின் செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர்களே ஏற்கவேண்டும் எனவும் ஒப்பந்த காலத்தின் அடிப்படையில் சிற்றூழியர்களை நியமிக்கும்போது அக்காலத்திற்கு மட்டுமே ஊழியர்களை நியமிக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




## மீன் பிடிப்பதற்கு அனுமதி

கிளிநொச்சி,

ஆனையிறவு கடல்நீர் ஏரியில் நீண்ட காலத்திற்குப் பின்னர் மீனவர்கள் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். ஏ-9 வீதியை அண்டியுள்ள இராணுவத் தடை முகாமிற்கு எதிராக அதிக அளவிலானோர் இக் கரைவலை மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல், தட்டுவன்கொட்டிப் பகுதியிலும் மீனவர்கள் கடற்றொழில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர்.

யுத்த காலத்திலும் அதற்குப் பின்பும் ஆனையிறவுப் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படாத நிலையில் தற்போது சிறிய அளவு தூரத்திற்கு மீன்பிடிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

## வருடாந்த உற்சவ பெரு விழா இன்று ஆரம்பம்

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம், திருவண்ணை நகர் - அருள்மிகு மகாமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவப் பெருவிழா இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணிக்கு பூச்சப்பறத் திருவிழாவும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 25 ஆம் திகதி புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு குதிரை வாகனத் திருவிழாவும், 26 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவ நிகழ்வும், 28 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு சங்காபிஷேகமும், மாலை 5.30 மணிக்கு திருவூஞ்சல் பாடலும் இடம்பெறும். 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் வைரவர் மடை உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

# நாம் பிறருக்குச் செய்யும் சேவை ஊடாக இறைவனை காணலாம்

## வைத்தியக்கலாநிதி சராபவன்

தெல்லிப்பழை,

உலகம் ஒரு பாடசாலை போன்றது. இங்கு நாம் அனைவரும் பாடம் படிக்கவருகின்றோம். எங்கள் வாழ்க்கை நீடித்த பயணத்தைக் கொண்டது. இப்போது என்ன செய்கின்றோமோ அது தொடர்ந்துவருகின்றது. இத்தகைய வாழ்விலே இறைவழிபாட்டின் மூலம் தைரியம், சாந்தி, சத்தியம் என்பவற்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் கொள்கின்ற சுயநல அன்பிற்கு மீட்சி இல்லை. நாம் பிறருக்குச் செய்யும் சேவையூடாக இறைவனைக் காணலாமென சத்தியசாயி பாபாவின் நெருங்கிய பக்தரான வைத்தியக்கலாநிதி சராபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற உலகமயமாக்கலில் ஆன்மிகம் எனும் தலைப்பிலான ஆன்மிகச் சொற்பொழிவினை நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அன்புதான் தெய்வம். பிள்ளைகளுக்கு அன்பைக் காட்டுங்கள். மதம் மனிதனால் உருவாக்கப்பட்டது. எங்களிடம் உள்ள மதங்கள் எங்களையும் கடவுளையும் பிரித்து வைக்கின்றன. நான் வேறு என்பதை விடுத்து தெய்வத்துடன் ஒன்றாக வாழ வேண்டும். தெய்வத்துவம், பிரேமை, சக்தியைக்கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும். உலக மயமாக்கலில் இருந்து விடுபட ஆன்மிக உண்மைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வெறுப்பை வெறுப்பால் வெல்லமுடியாது. அன்பால் தான் வெல்லமுடியும்.

தெய்வத்தைப் பொறுத்தவரை நல்ல பக்கம், கூடாத பக்கம் என்று இல்லை. மனதில் தான் இது உள்ளது. இறைவனைப் பொறுத்தவரை நன்றும் தீதும் ஒன்றுதான். தெய்வம் இருப்பது இதயத்தில்தான். இதயத்தில் அன்பு ஊற்றெடுக்கின்றது. அந்த அன்பு தலைக்கு வருகின்ற போது பாசமாகின்றது. நான் யார்? கடவுள் யார்? எனக்கும் கடவுளுக்கும் என்ன சொந்தம் என்பவற்றை அறியவேண்டும்.

எதைப் பார்க்கின்றோமோ அதன் வெளிப்பாடானது எமது மனம் சார்ந்து உள்ளது. உண்மையை கண்ணாலோ காதாலோ பார்க்கவோ, கேட்கவோ முடியாது. உண்மை தூய்மையானது. மனத்துள் ஆன்மிகம் தூய்மைப்படுத்தல் வழிப்படுத்தலுக்கான வழி எங்களை தூய்மைப்படுத்துவதன் மூலம் பெறப்படும். உலகம் யாது? தெய்வம் யாது? உலக மயமாதல் யாது? அனுபவ ரீதியாகப் பார்க்க வேண்டும். மனிதர்களை பொறுத்தவரை எல்லோரும் சமமாகும். சாதி உயர்வு, தாழ்வு இவை கிடையாது. இவையெல்லாம் மனிதனால் உருவாக்கப்பட்டவை. மனிதர் எல்லோரும் கடவுளிடம் இருந்துவருகின்றோம்.

புத்தகத்தை மட்டும் படிப்பதன் ஊடாக ஞானத்தைப் பெறமுடியாது. உலகத்திலுள்ள மதங்கள் அனைத்தும் போராட்டமாக இருக்கின்றன. வெறும் புத்தக ஞானம் மூலம் மனங்களை மாற்றுகின்றோம். தெய்வம் ஒன்றுதான் உள்ளது. மனித சாதி ஒன்றுதான் உள்ளது. தெய்வ அன்பு பேரன்பாகும். இந்த அன்பு அனைவருக்கும் சமமாகும். எல்லாம் தெய்வத்தினுடைய உருவாக்கமாகும். நாம் பார்க்கும் அனைத்திலும் தெய்வத்தைப் பார்க்கிறோம்.

தன்நம்பிக்கை இல்லாதவனுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. தெய்வம் எனக்குள் இருக்கின்றது என்ற நிலை வரவேண்டும். சத்தியம் , தர்மம், எதுவும் இல்லாத கலியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாமே நமக்கு எதிரி. எமது மனமே எமக்கு எதிரியாக விளங்குகின்றது - என்றார்.

# பிரபாகரக்குருக்களின் மறைவுக்கு அனுதாபம்

வேலணை,

அமரர் சிவஸ்ரீ யோ. பிரபாகரக் குருக்களின் மறைவு சைவ உலகிற்கு ஒரு பேரிழப்பாகும் என மண்டைதீவு - அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய ஆலய முன்னாள் பிரதம குரு சிவஸ்ரீ யோ. பிரபாகரக்குருக்களின் மறைவு குறித்து ஆலய அறங்காவலர் என். இராமச்சந்திரா வெளியிட்ட அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எமது ஆலயத்தில் பிரதம அர்ச்சகராக குறுகிய காலம் கடமையாற்றினாலும் அவர் சிறப்பாக விசேட பூசைகள், நித்திய பூசைகளைத் திறம்பட நடத்தினார். அத்துடன், ஆலய வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பை செய்தார்.

போர்க்காலச் சூழலிலும் பாதுகாப்புக் கெடுபிடியிலும் முருகனின் மீது நம்பிக்கை வைத்து அச்சமின்றி தினசரி யாழ். நகரில் இருந்து வந்து தனதுகடமைகளைப் பொறுப்புடன் செய்துவந்தார்.

இவர் மறைந்தாலும் இவரது பணிகளை - தொண்டுகளை மண்டைதீவு மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

இறைவனுக்குத் தொண்டுசெய்வதில் பேரின்பம் கண்ட அமரர் சிவஸ்ரீ யோ. பிரபாகரக் குருக்களின் மரணம் சைவ உலகுக்கு ஓர் பேரிழப்பாகும்.

மிகவும் இளம் வயதில் இவர் மரணிப்பார் என எவரும் எதிர்பார்க்கவில்லை. இறைபக்தியோடு எமது ஆலயத்தில் நித்திய பூசைகள், கிரியைகள் மேற்கொள்வதில் இவர் என்றுமே பின்நின்றது இல்லை - எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் நடைபெறும் பல நிகழ்வுகள் எந்த நோக்கமும் இல்லாமலே நடந்தேறுகின்றன

## துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம்

கோப்பாய்,

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக பல நிகழ்வுகள் நடக்கின்றன. அந்த நிகழ்வுகள் எதற்காக? என்ன நோக்கத்திற்காக நடத்தப்படுகின்றன என்பதே தெரியாமல் நடந்தேறுகின்றன என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'உலகமயமாக்கலில் ஆன்மிகம்' எனும் தொனிப்பொருளில் அமைந்த நிகழ்வொன்றில் தலைமையுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வித்துறையை இன்று பணமே நிர்ணயிக்கின்றது. பணமிருந்தால் என்னவும் செய்யலாம் என்ற நிலை காணப்படுகின்றது. இன்று மருத்துவம் மற்றும் தொழில்நுட்பத்துறையில் வளர்ச்சி ஏற்பட்டாலும் மனித விழுமியங்களைப் பேணுவதிலிருந்து தவறிவிடுகின்றது.

எனவே, ஆன்மிகத்துடன் சேர்ந்த எமது வாழ்வைக் கட்டமைக்கும்போது பல சவால்களை வெற்றிகரமான முறையில் அணுகமுடியும் என்றார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்வியல் முறைகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன. எந்த நோக்கத்திற்காக இங்கு வந்தோம்? எதற்காக வாழ்கிறோம் என்று தெரியாமல் மனம் போன போக்கில் வாழ்ந்துவருகிறோம். உலக மாந்தர்களிடையே இன்று ஆன்மிகக் கல்வி அருகிக்கொண்டு செல்கின்றது. இதனால், பல அழிவுகளுக்கு மனித மனங்களே காரணமாக அமைகின்றன.

எனவே, ஆன்மிகத் தேடலை வளர்க்க இன்றைய இளம் சந்ததி ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய இந்தியாவிலிருந்து வருகைதந்த வைத்திய கலாநிதி சராபவன் தனதுரையில்,

''இன்று ஆன்மிக நாட்டம் இளைஞர்களிடையே இல்லை. முன்னர் கல்விக்கும் ஒழுக்கத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. ஆனால், இன்றைய கல்வி ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியாக இல்லாமல் வெறும் பட்டங்களுக்காகவும் பதவிகளுக்காகவும் மற்றும் பணத்தை சம்பாதிக்கவுமே கல்வியைப் பயன்படுத்துகின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரை பணத்தை வழங்கி பட்டங்களைப் பெறலாம் என்ற நிலை காணப்படுகின்றது. இன்றைய இளைஞர்கள் பட்டம் பெறுவதற்காக அலைகின்றனர். ஒன்று இரண்டல்ல, ஏராளமான பட்டங்களைப் பெற்றாலும் பெறுமதியற்றவையாகவே இருக்கின்றன. காரணம், புலமைசார் கல்வி இன்று அருகிவருகிறது.



உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடலுக்காக யாழ். மாவட்ட இராணு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை யு.என்.எச்.சி.ஆரின் கள அலுவலக தலைமை அதிகாரி இந்துமதி மோகன்தாஸ், சிறுவர் பாதுகாப்புப் பிரிவின் சிறப்புப் பிரதிநிதி ஆல்பிரட் மோட்டி, ஐ.நா. அலுவலகத்தின் யாழ். மாவட்டத்திற்கான பாதுகாப்பு இணைப்பாளர் டாம் கோஸ் ஆகியோர் சந்தித்தபோது.....

(படம்: வண்ணார்பண்ணை)

# அரசியல் தலைவர்கள் எதிர்ப்பு அரசியலை கைவிட்டு அரசுடன் கைகோர்த்து செயற்பட முன்வர வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வரணி,

இலங்கை அரசின் கொள்கைத்திட்டங்களின் மூலம் 'நெல்சிப்' வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்காக இலங்கை அரசாங்கம் உலக வங்கியிடமிருந்து 3626.44 மில்லியன் ரூபாவைக் கடனாகப் பெற்றுள்ளது. அரசின் கொள்கைத் திட்டத்திற்கு அமைய மக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டங்களை முறையாக செயற்படுத்தும் போது உள்ளூராட்சி அமைப்புக்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தமுடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'நெல்சிப்' வேலைத்திட்டங்கள் தொடர்பான அறிமுகக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறியதாவது:

இத்திட்டங்களை யார் முன்னெடுத்துச் செல்கிறார்களோ அவர்களின் ஆலோசனைகளை கவனத்தில் எடுப்போம். அரசியல் தலைவர்கள் எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டு அரசுடன் கைகோர்த்து செயற்பட முன்வர வேண்டும். 'நெல்சிப்' வேலைத்திட்டம் 'வடக்கின் வசந்தத்தின்' ஒரு பகுதியாக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் பொருளாதார அமைச்சினூடாக செயற்படுத்தப்படுகின்றது.

இக்கூட்டத்தில் சுமார் 24 வேலைத்திட்டங்கள் தொடர்பில் உரிய அனுமதிக் கடிதங்கள் உள்ளூராட்சிச் செயலாளரிடம் வழங்கப்பட்டன. அதேவேளை பிரதேச நகர சபைகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றும் பிறிதொரு இடத்தில் இடம்பெற்றது.

# சித்திரம்,கவிதைப் போட்டிகள்

நல்லூர்,

'பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானம்' என்ற தலைப்பிலான இவ்வாண்டுக்குரிய மாணவர்களுக்கான சித்திரம், கவிதைப் போட்டி கோட்ட மட்டத்தில் இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்தில் வெற்றிபெறும் முதல் மூன்று ஆக்கங்களுக்கான வலய மட்டப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறும். வலய மட்டப் போட்டியில் தெரிவாகும் ஆக்கங்கள் மாகாணப்போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும்.

மாகாண மட்டத்தில் வெற்றிபெறும் ஆக்கங்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி நடைறெும் 'மதர் ஒப் ஸ்ரீலங்கா' நிகழ்வில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும் என வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# கல்வி வலய நடத்தும் சைவ சமய பரிசில் நாள் நிகழ்வு இன்றாகும்

சாவகச்சேரி,

தென்மராட்சிக் கல்வி வலயத்தினரால் நடத்தப்படும் சைவசமய பரிசில் நாள் 2011 நிகழ்வு இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு. சிவானந்தன் கலந்து சிறப்பிக்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர்கள் நா. அருட்ஜோதி, திருமதி சி. ஜெயக்குமார், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன், திருக்கணிதப் பதிப்பக ஆலோசகர் கி. பாலசுப்பிரமணியம், ஆலோசனை வழிகாட்டி திருமதி ச. கோகிலதாசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி வி. விஜிதாவின் நெறிப்படுத்தலில் நடன நிகழ்வும், மாணவர்களின் சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது.

## கலந்துரையாடல் நாளை

சாவகச்சேரி,

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள், மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நகராட்சி மன்றச் செயலாளர் கொ. ஜக்கீல் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும் கலந்துகொள்ளவுள்ளார்.

எனவே, குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வடமராட்சிக் கல்வி வலய சிறுவர் சித்திரப்போட்டிகள்

வடமராட்சி,

வடமராட்சி கல்வி வலயப் பிரிவில் கோட்ட மட்ட சிறுவர் சித்திரப் போட்டி நாளை 14 ஆம் திகதியும், நாளை மறுநாள் 15 ஆம் திகதியும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி நாளை 14 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை - வடஇந்து மகளிர் கல்லூரியிலும் கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கிகு இடையிலான போட்டி 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லிய - மெதடிஸ்த பாடசாலையிலும் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

## இன்னிசைக் கச்சேரி

வடமராட்சி,

தொண்டைமானாறு - சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி இடம்பெறும். இக்கச்சேரியை பக்கவாத்தியங்கள் சகிதம் செல்வன் ஜெகதீஸ்வரன் மதுசிகன், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ. அகிலதாசனின் நெறிப்படுத்தலில் நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபராதப்பணத்தை செலுத்த முடியவில்லை குற்றவாளிக்கு 75 மணித்தியால சமூகசேவை

பதுளை,

நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அபராதப் பணத்தை செலுத்த முடியாத குற்றவாளியை 75 மணித்தியாலங்களுக்கு கட்டாய சமூக சேவையில் ஈடுபடுத்துமாறு வெலிமடை நீதவான் துமிந்த முதுன்கொட்டுவ வெலிமடை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்பனை செய்து வந்த நபரை வெலிமடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஏக்கநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் அண்மையில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்நபர் வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதியினால் குற்றவாளியாக இனங்காணப்பட்ட அந்நபருக்கு ஐயாயிரம் ரூபாயினை அபராதமாக விதித்து நீதிவான் தீர்ப்பு வழங்கினார். எனினும் குற்றவாளி தான் வறுமையில் இருப்பதால் அபராதப் பணத்தை கொடுக்க முடியாத நிலையிலுள்ளதாக நீதிபதியிடம் கூறவே நீதிபதி அந்நபரை பொது இடமொன்றில் பகிரங்க சமூக சேவையில் 75 மணித்தியாலங்களுக்கு ஈடுபடுத்துமாறு வெலிமடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பணித்தார்.

## அபராதமாக அறவிடப்பட்ட தொகை அரசுக்கு வருமானமாக ஒப்படைப்பு

பதுளை,

2011 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பதுளையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து, அவர்களுக்கு அபராதமாக விதிக்கப்பட்ட ஏழு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நானூறு ரூபா அரசுக்கு வருமானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோத கசிப்பு தயாரிப்பு மற்றும் விற்பனை, கஞ்சா கலக்கப்பட்ட லேகியங்கள் விற்பனை, ஹெரோயின் போதைவஸ்து பாவனை மற்றும் விற்பனை, அனுமதிப் பத்திரமற்ற நிலையில் சாராயம் விற்பனை செய்தமை, மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறுகள் செய்தமை, ஆபாச வீடியோக்கள் விற்பனை, அனுமதிப்பத்திரமற்ற நிலையில் வாகனங்கள் செலுத்தப்பட்டமை, அத்தியாவசியப் பொருட்களின் விலைப் பட்டியல் குறிப்பிடப்படாமை, எடை குறைத்து விற்பனை செய்தமை போன்ற இன்னோரன்ன குற்றச் செயல்கள் புரிந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி முன்னிலையில் இவர்கள் தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதையடுத்தே, நீதிபதி இவர்களுக்கு மேற்கண்ட அபராதத்தொகையை விதித்து, அத்தொகை அரசுக்கான வருமானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தேசிய இளைஞர் மன்றத்தின் விருதுக்கான விண்ணப்பம் கோரல்

இறத்தோட்டை,

தேசிய இளைஞர் மன்றத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான இளைஞர் விருது வழங்கலுக்குரிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. தமிழ், சிங்கள மொழிகளிலான கட்டுரை, நாவல், சிறுகதை, கவிதை, பாடல் மற்றும் நடனம், நாடகம், குறுநாடகம், கீழைத்தேய, மேலைத்தேய இசை போன்ற பல்வேறு அம்சங்களுக்கே இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் மாத்தளை செயலகத்தில் இயங்கும் தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலகத்தில் உரிய விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வேடுவர் சமூகத்தினருக்கான ஊடக இணைப்பாளராக சம்பத்

பதுளை,

வேடுவர் சமூகத்தினருக்கான ஊடக இணைப்பாளராக சம்பத் சத்துரங்க நியமிக்கப்பட்டுள்ளார். வேடுவர் சமூகத்தின் தலைவர் ஊருவரியவாகே வன்னியலத்தோ பதுளை மாவட்ட அரச அதிபர் ரோகண கீர்த்தி திசாநாயக்கவிற்கு விடுத்த வேண்டுகோளையடுத்தே இவ் ஊடக இணைப்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வேடுவர் சமூகத்தின் தேவைகள், விருப்புகள், அபிலாசைகள் ஆகியவற்றை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் சென்று அவற்றிற்கு தீர்வுகளை ஏற்படுத்தவும், அத்துடன் வேடுவர் சமூகத்தின் கலை கலாசார விழுமியங்களை மென்மேலும் வளர்ச்சியடைய வைக்கவுமே இந்த ஊடக இணைப்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் கஞ்சி குடிச்சாறு தங்க வேலாயுதபுரம் மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர்

**- திருக்கோவில் பிரதேச செயலர்**

திருக்கோவில்,

அம்பாறை மாவட்டத்துக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மற்றும் தங்கவேலாயுதபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 800 குடும்பங்களையும் மீள்குடியேற்ற அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்தவுடன் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ். அழகரத்தினம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் பி. தயாரத்ன கஞ்சிகுடிச்சாறு மற்றும் தங்க வேலாயுதபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுமாறு விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், மீள் குடியேற்றத்துக்கான துரித நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் கண்ணி வெடிகளும் அகற்றப்பட்டுள்ளன. அதேவேளை சகல அடிப்படை வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் மீள் குடியேற்ற அமைச்சில் நாம் கோரியுள்ள நிதியை, குடியேற்றத்துக்காக ஒதுக்கீடு செய்யும்போது அவர்கள் உடன் மீள்குடியமர்த்தப்படுவர் எனவும் தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தமிழ் மொழி புறக்கணிப்பு

சம்மாந்துறை,

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தனிச் சிங்களத்தில் மாத்திரம் நிகழ்ச்சி நிரல்கள் நடைபெறுவதனால் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் சமகால தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.பியசேன குழுத் தலைவர் சரத் வீரசேகர எம்.பி.யிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த குழுக்களின் தலைவர் சமகால மொழி பெயர்ப்பு செய்யும் போது காலதாமதம் ஏற்படும் என்று கூறியதையடுத்து அப்படி என்றால் கூட்டத்தை இரண்டு நாட்களுக்கு நடத்துங்கள் என்று பியசேன எம்.பி. கேட்டுள்ளதாக தெரிவித்தார்.

## எமக்குள் ஒற்றுமை, உத்வேகம், உணர்வு இருக்கின்றதா? என ஆய்வு செய்தால் எதிர்மறை பதிலே கிடைக்கும்

**-வைத்தியர் ரட்ணதேவ்**

பெரியகல்லாறு,

பருத்தித்துறை தொடக்கம் பொத்துவில் வரை எமக்குள் ஒற்றுமை, சமூக மேம்பாட்டுக்காக உழைக்கும் உத்வேகம் மற்றும் உணர்வு இருக்கின்றதா என ஆய்வு செய்வோமானால் அதற்கு எதிர்மறையான பதிலையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என வைத்தியர் கி. ரட்ணதேவ் கூறினார்.

றோகாலயா கலை, கலாசார, பொது சேவை நிலையத்தின் பொறியியலாளர் ச. தவேந்திராவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வை அண்மையில் நடத்தியது. அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கழகத்தின் தலைவர் எஸ். எஸ். சௌந்தர நாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்தியர் ரட்ணதேவ் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இவ் கௌரவிப்பு நிகழ்வானது மிகவும் தேவையானதும் பொருத்தமானதுமாகும். ஆனால் இது ஒரு தனி மனித முயற்சிக்கான கௌரவிப்பாகும். இது வரவேற்கத்தக்க வரலாற்றில் நிலைத்திருக்கும் நிகழ்வாகும். ஒரு சமூகம் முன்னேற வேண்டுமானால் கௌரவிக்கப்படும் பொறியியலாளர் எவ்வாறு தனது இலக்கை அடைவதற்கு முயற்சித்து வெற்றி பெற்றாரோ அதேபோல் சமூகத்தில் பல குழுக்கள் தமது இலக்குகளை அடையும் நோக்கில் செயற்பட வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் இது பற்றி ஆழமாகச் சிந்திக்கின்றார்கள் என்றால் இது ஆய்வுகள் மூலம் இல்லை என்ற பதிலையே தரும். இன்றைய நிகழ்வானது இன்னும் பத்து வருடங்களின் பின்னர் நடைபெறுமா என்பதற்கான உத்தரவாதத்தை அளிக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களையே சாரும் எனத் தெரிவித்தார்.

## மீள்குடியேற்ற அமைச்சர் நேரடி விஜயம்

புதிய காத்தான்குடி

மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 வருட யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட வெல்லாவெளி மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேச பிரிவுகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் நேற்று முன்தினம் காலை நேரடி விஜயம் செய்தார்.

அவரது விஜயத்தின் போது யுத்தம் காரணமாக சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இப்பிரதேசங்களில் சேதமடைந்த 96 வீடுகளைப் புனரமைப்புச் செய்ய சுமார் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் வீரக்கோன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

வியாபார நிலையங்களில் நடைபெறும் சில சம்பவங் களைப் பார்ப்போம்.

சீனி என்ன விலை?
சீனி மில கீயத?

சீனி ஒரு கிலோ 100 ரூபாய்
சீனி கிலோ எக்காக் ரூபியல் சீயாய்

இவ்வளவு விலையா?
மெச்சர (மிலத)?

ஆம். சரியான விலைதான்.
ஒவ். ஹரிமில தமாய்

பொருட்களின் விலைகள் அதி கம் தான்.
படுமில கணாங் தமாய்.

அரிசி என்ன விலை?

ஹால் மில கீயத?

அரிசி ஒரு கிலோ 65 ரூபாய்.
ஹால் கிலோ எக்காக் ரூபியல் எட்ட பகாய்.

பஸ் கட்டணங்களும் கூடிட்டு.
பஸ் காஸ்துத் வெடிவுனா.

இப்பொழுது எல்லாமே விலை தான்.
தென் ஒக்கம மிலவெடி தமாய்.

உங்களுக்கு என்ன வேணும்?
ஒயாட்ட மொனவத ஒனே?

அழகான பந்து.
போலே லஸ்ஸனாய்.

பெரிய பந்து.
லொக்கு போலயக்.

விளையாடுவதற்கு நல்லது.
செல்லங்கரண்ட ஹொந்தாய்.

நானும் தம்பியும் போவட்டுமா?
மமய் மல்லிய் யன்டத?

ஆம். போகலாம்.
ஒவ் யன்ட. புலுவன்

உங்கள் அம்மாவும் அப்பாவும் எங்கே?
ஒயாகே அம்மா தாத்தா கொஹேத?

அம்மாவும் அப்பாவும் கடைக்குப் போய்விட்டார்கள்.
அம்மாத் தாத்தாத் கடேட்ட கியா.
அப்படியா! ஆம்?
ஏஹமத! ஒவ்.

உங்களது தங்கையுமா?
ஒயாகே நங்கித்த?

ஏன் நீர் போகவில்லையா?
எய் ஒயா கிய நெத்த?
நானும் போகவேண்டும்.
மமத் யன்ட ஒனே.

மீண்டும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்

●வேலு. ஜீவராஜா

## எங்களின் பிஞ்சுகளின் எதிர்காலம் ஒளியாக...

யாழ்ப்பாணக் கல்வி நிலை பாழாகிப்போகுதென்று
கூப்பாடு போடுவோரே குறிப்பாகச் சிந்திப்பீர்
கற்பிக்க வந்தோரில் கணவனை இழந்ததாலும்
மனைவியொடு மழலை மற்றும் மாடி மனையிழப்பினாலும்
வஞ்சகரால் வதைபட்டு வாழ்வுக்காய் ஏங்கலாலும்
குறிவைத்த பதவி குலைந்துமே போனதாலும்
ஊனமொடு பானத்தால் உளநிலை பாதித்தோர்
எங்களது பள்ளிகளில் ஏராளம் அவர் தாராளம்.

இத்தகைய பாதிப்புள்ளோர் எவராற் தான் ஐயா
எம் பள்ளிகளின் பிஞ்சுகளுக்கு ஏற்றபணி செய்யமுடியும்
கதைக்காவிட்டால் இவர்கள் கடவுளுக்கும் புத்திசொல்வர்
கண்ணாகப் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டுமென்பர்
கடமையே கடவுளென்பர் காலத்தைப் பொன்னென்பர்
தன் பிள்ளையை நல்ல பேர் பெற்ற பள்ளியிலே
பின்கதவாற் தள்ளிவிட்டு பேசாது தன் வகுப்பிலிருப்பர்
கூசுவீர் இவர் வகுப்பின் கொப்பிகளைப் பார்த்தால்

வேஷங்கள் போடுவோரை விரைந்துமே களையெடுத்து
அவரவர்க்கேற்ற வண்ணம் அவர்க்கான பிணி நீக்கி
வகுப்பிற்குள் நுழைய வாய்ப்பளித்தால் மட்டுமே
எங்களின் பிஞ்சுகளின் எதிர்காலம் இனிதாகும்.(ஒளியாகும்)

கவிமணி அன்னைதாஸன் ஊரெழு.

# SPOKEN ENGLISH

## Aunt and her Niece are talking at home.


## அத்தையும் மருமகளும் உரையாடுதல்

N:- Good Morning. How are you Keeping Aunt?
மருமகள்: - காலை வணக்கம். எப்படி இருக்கிறீங்கள் அத்தை.
A:- Good Morning. I am fine. Where is your brother, I haven't seen him for months.
அத்தை: - காலை வணக்கம். நான் நன்றாய் இருக்கிறேன். எங்கே உனது சகோதரன் ஒரு மாதமாக காணவில்லை.
N:- He went for Musical Show.
மருமகள்: - அவன் சங்கீத கச்சேரிக்கு போயிட்டான்.
A:- Where is the Musical Show?
அத்தை: - எங்கு சங்கீத கச்சேரி நடக்கிறது?
N:- Thuraiyappa Stadium at Jaffna.
மருமகள்: - துரையப்பா விளையாட்டரங்கில்.
A:- With Whom he went?
அத்தை: - யாருடன் அவன் சென்றான்?
N:- He went with his Friends.
மருமகள்: - அவன் அவனுடைய நண்பர்களோடு சென்றான்.
A:- Why didn't you go there?
அத்தை: - நீர் ஏன் செல்லவில்லை?
N:- I didn't like you know aunt.
மருமகள்: - எனக்கு விருப்பமில்லை. உங்களுக்கு தெரியும்தானே அத்தை.
A:- Yes, I knew.
அத்தை: - ஓம் ஓம். எனக்குத் தெரியும்.
N:- Aunt, Here is a tin of chocolate biscuits.
மருமகள்: - அத்தை இந்தாங்கோ சொக்லட் பிஸ்கற்.
A:- Thanks. Who gave it.
அத்தை: - நன்றி. யார் தந்தது?
N:- My mother gave for you.
மருமகள்: - என்னுடைய அம்மா தந்தார் உங்களுக்கு.
A:- Thanks Niece, shall we make glasses of milk.
அத்தை: - நன்றி. நாங்கள் பால் தயாரிப்போமா?
N:- Ok, Aunt I wish to Prepare it.
மருமகள்: - ஓம் அத்தை நான் தயாரிக்கிறேன்.
A:- Ok, but less sugar.
அத்தை: - சரி. சீனி குறைவாகப் போடும்.
N:- Why Aunt do you have any illness.
மருமகள்: - ஏன் அத்தை ஏதும் வருத்தமோ?
A:-No, Prevention is better than cure. By the way what about your brother's studies.
அத்தை: - இல்லை. வருமுன் காப்போம். அதோடு உன்னுடைய சகோதரன் படிப்பு எப்படி?
N:- He didn't like is study.
மருமகள்: - அவன் படிக்கவிரும்புகிறானில்லை.
A:- Why does he hate to study?
அத்தை: - ஏன் படிப்பை வெறுக்கிறான்?
N:- He likes to play games in computer.
மருமகள்: - அவன் கணினியில் ஒரே விளையாடுகிறான்.
A:- Oh, what can we do?
அத்தை: - அப்படியா? நாங்கள் என்ன செய்வம்?
N:- My mother was angry with my brother she needs help to heal this.
மருமகள்: - எனது அம்மாவும் அதனை வெறுக்கிறார். அவர் இதை குணப்படுத்த விரும்புகிறார்.
A:- Bring him. We shall discuss with him.
அத்தை: - அவனை கூட்டி வாரும். நாம் கலந்து உரையாடுவோம்.
N:- Okay Aunt, I will bring him next Sunday.
மருமகள்: - ஓம் அத்தை. அடுத்த ஞாயிற்றுக்கிழமை கூட்டிவருகிறேன்.
A:- Okay, come on Sunday evening. I will wait for you.
அத்தை: - சரி. ஞாயிற்றுக்கிழமை பின்நேரம் உங்களுக்காகக் காத்திருப்பேன்.
N:- Thanks, Aunt bye.
மருமகள்: - நன்றி அத்தை போய் வருகிறேன்.
A:-bye, take care.
அத்தை:- சரி. சென்று வா.

S.Uthayabalan (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறிய மக்களைத் தொடரும் ஆபத்துக்கள்



மாதகல் - சகாயபுரம் பகுதியில் 3.00 மணியளவில் குண்டு வெடித்த சத்தம் கேட்டது. வீட்டினுள் இருந்து வெளியில் வந்து பார்த்தபோது எனது மகளும் இரண்டு சிறுவர்களும் இரத்தம் வழிந்தோட விழுந்துகிடப்பதை க் கண்டேன் என தெவித்தார் குண்டுவெடிப்புச் சம்ப வத்தில் காயமடைந்த சிறுமியின் தாயார்.

நீண்ட காலத்திற்குப் பின்னர் மாதகல் பகுதியில் குண்டுவெடித்த சத்தத்தைக் கேட்டுள்ளதாக அப்பகுதி யில் உள்ள மக்கள் அச்சத்துடன் தெரிவிக்கின்றனர். மாதகல் - சகாயபுரத்தைச் சேர்ந்த செல்லத்துரை சுரேன் தனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் கூலிவேலை செய்து வாழ்க்கையை நடத்திவருகின் றார். இவர் காட்டுப்பன்றிகளை சுட்டுப்பிடிப்பதற் காக கருங்கற் கள், போல்ஸ்கள், ஈயக் குண்டுகள் போன்ற வற்றைக் கொண்டு கட் டுத் துப்பாக்கிக்கான வெடிகுண்டுகளை சட் டத்திற்கு முரணான வகையில் தயா ரித்தவருகின்றார்.

இதனால் தான் அன் றைய தினம் அவர் தயா ரித்த குண்டை சிறார் கள் எடுத்து விளையாடி யுள்ளார்கள்.

அந்த வெடிபொருள் வீட்டினுள் வீழ்ந்து வெடித்ததில் இவரு டைய பிள்ளைகளான ஆறு வயதுடைய சுரேன் சதுசன் மற்றும் இரண்டு வய துடைய சுரேன் சனுசன் மற்றும் இவர்களது அயல்வீட் டுப் பெண்ணான நான்கு வயதுடைய ஸ்ரீவேந்தன் ஹம்சிகா ஆகிய மூவரும் காயமடைந்தனர். இவர்கள் மூவரும் உடனடியாக யாழ். போதனா வைத்தியசா லைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் நடந்த வீட்டைச் சுற்றியுள்ள பகுதியானது மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்கள் வாழும் இடமாக உள்ளது. மின்சார வசதி இல்லாத இட மாகவும் இப்பகுதி உள்ளது. இச்சம்பவம் தொடர்பாக அயலவர்களிடம் கேட்டபோது, நாம் குறித்த வீட்டாரு டன் கதைப்பதில்லை. இவர்கள் என்ன செய்கிறார்கள்? எங்கு போகிறார்கள் என்று எமக்குத் தெரியாது என்கின்றனர்.

இவரின் வீட்டுக்கருகில் வசிக்கும் அண்மையில் புனர்வாழ்வு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட குடும் பஸ்தர் ஒருவர் தெரிவிக்கையில், முகாமில் இருந்து புனர்வாழ்வு பெற்று ஒரு மாதம் முழுமையாக முடிவ டையாத நிலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடியால் இவரைப் போன்ற சில குடும்பஸ்தர்கள் இவ்வாறான ஆபத்தான தொழிலைச் செய்கிறார்கள். இதனால், தற்செயலாகப் பாதிக்கப்படு வது ஒன்றும் அறியாத அவர்களின் குழந்தைகள் தான். நானும் முகாமிலிருந்து வந்து ஒரு மாதமாகிறது. இன்ன மும் என் வாழ்வில் முன்னேற்றம் காணமுடியவில்லை. இங்கு தொழில்கள் இல்லை. நாளாந்தா சீவியத்திற்கே கஸ்ரப்படுகிறோம் என்றார்.

தமது வாழ்வாதாரத்துக்காக இக்குடும்பம் சட்ட விரோதமாகக் குண்டைத் தயாரிக்கிறது என்றால் இக்கு டும்பம் அல்லது இக் கிராமம் எந்தளவிற்கு வறுமைக் குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை ஊகிக்க முடியும்? எந் தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் இ க் குடும்பம் இருப்பதனால் இவர்களுக்கான வாழ்வாதார நிலைகளை யார் கவனிப்பார்கள்? இங்கு கிராம அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் எவ்வகையி லான பங்களிப்பைச் செய்கிறார்கள் என்பது கேள்விக்கு றியாகவே உள்ளது.

✱ வண்ணார்பண்ணை நிருபர்

# பெண்கள் வாழ்வைச் சிதைக்கும் சீதனம்

யாழ். குடாநாட்டில் சீதனம் என் னும் கொடிய அரக்கனால் எத்தனை யோ இளம் பெண்கள் 35 வயதைத் தாண்டியும் வாழாவெட்டியாக விரக் தியின் விளிம்பில் வாழ்வதா? சாவதா என்ற ஏக்கப்பெருமூச்சுடன் வாழ்ந்து வருகின்றார்கள். பெண்களைப்பெற்ற தாய், தந்தையர்கள் ஆலயங்களில் அரச மரத்தைச் சுற்றுவதோடு, தமது குமர் கரை சேரவேண்டும் என தங்கள் குல தெய்வங்களை விழுந்து விழுந்து வணங்குவதைக் காணமுடிகின்றது.

ஆரம்பத்தில் தங்கள் பெண்கள் திருமணம் செய்கின்ற இடத்தில் இடர் கள் இன்றி மகிழ்ச்சியாக வாழவேண் டும் என்று ஒரு தொகை பணம், வீடு, நகை என கொடுக்க ஆரம்பித்தார்கள். இன்று இது ஆலமரமாக விழுதுவிட்டு வளர்ந்து, சீதனம் இல்லையேல் திரும ணம் செய்யமறுக்கும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலை யில் உள்ளது. அண்மையில் பத்தி ரிகை ஒன்றில் மணமகன் தேவை என் னும் எமது யாழ். அலுவலகத்தில் விளம்பரம் செய்த தாய் ஒருவரை சந் தித்து உரையாடும் சந்தர்ப்பம் எனக் குக் கிடைத்தது. அப்பெண்மணி கூறு வது எனக்கு நியாயமாகப் பட்டது. சீத னம் வாங்குவதை சட்டரீதியான குற்ற மாகக் கருதி அரசு சட்டம் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்ய முன் வந்தால் சீதனம் வாங்குவதை ஓரள வுக்குக் கட்டுப்படுத்தலாம். ஆனால், அப்பெண்மணி கூறுகையில், எனக்கு 5 பிள்ளைகள். அவர்களில் இரண்டு ஆண்கள், மூன்று பெண்கள். எனது கணவர் ஒரு சாதாரண கூலித்தொழி லாளி. அவரது நாளாந்த வருமானம் எமது சாப்பாட்டுக்கே போதாது. பெண் பிள்ளைகளுக்கு வயது 30 தாண்டிவிட்டது. திருமணம் என்று பேசினால் வீடு, நகை, காசு என்று கேட்கிறார்கள். நாங்கள் தீவுப்பகு தியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். நகருக்கு வந்தவர்கள். இந்த நிலை யில், எனது பெண் பிள்ளைகளுக்கு திருமணமே இல்லையா? இது விட யத்தில் சமய நிறுவனங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மௌனம் சா திப்பது ஏன்? யாழ். மகளிர் அபிவி ருத்தி நிலையம் போன்ற அமைப்புக் கள் சீதனம் வாங்குவதைத் தடைசெய் வதற்கு கோரிக்கை விடவேண்டும். சீதனக்கொடுமையால் பல இளம் பெண்கள் குடும்ப வாழ்க்கையை அனுபவிக் காது இருக்கின்றார்கள்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்ச யிக்கப்படுகின்றது. ஆண் ஒருவ ருக்கு பெண் ஒருவர் எங்கோ பிறந்து இருப்பார்; காலம், நேரம் சரியாக வரும்போது எல்லாம் சரியாக வரும் என இன்னும் பழம்கதை பேசி காலத் தைக் கழிப்போர் எம் சமூகத்தில் உள் ளார்கள்.

கண்டதும் காதல்; பின்பு விவாக ரத்து என பல பிரச்சினைகளை நாம் காண்கிறோம். திருமணம் பொருத்தம் பார்த்துச் செய்யும் பழக்கம் நம் மத்தி யில் ஆரம்பத்தில் இருந்துவந்தது. ஆனால், கால மாற்றத்தில் அது இல் லாது போனது. காதல் திருமணம் செய்தவர்கள் கூட சீதனக் கொடுமை யால் ஆசை 60 நாள் மோகம் 30 நாள் என்று முடிவுற்று நீதிமன்றங்களில் குழந்தைகளுடன் வந்து நிற்பதைக் கண்டு அழுவதா? சிரிப்பதா?

வேலணை நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகம்





ரா ரா

# கோ வெ

மிக்கவைக்

யுள்ளது. ரசிகர்களிடத்தில் திரு
இவ்வளவு கலெக்ஷனை அள்
பெயரை இனிவரும் 'ரௌத்தி
வாரா ஜீவா? இரு படங்களுமே
கும் அடுத்த படம் என்ன? இப்

திருட்டு விசிடி விஷயத்தில்
அடுத்த படம் என்னவாக இருக்
நது. 'இயற்கை', 'ஈ', 'பேராண்
கியமான இயக்குநர் இடத்தை
ராம் ஜீவா. அப்போது இவருக்கு
தஞ்சை பெரிய கோவிலை பின்
இது. நீங்கள் நினைப்பது போல
''யாரெங்கே?'' கட்டளைகளோ
அது. கேட்ட மாத்திரத்திலே அ
சில வாரங்களில் இந்த அறிவிப்
கோலாகலமாக வெளிவரலாம்.

கொஞ்சும் மைனாக்களே



# சினி பிட்ஸ்

- தமிழில் உருவாகும் 'தபங்' ஹிந்தி ரீ-மேக்கில் ஹிந்தியில் இடம்பெற்ற பாடல் டியூன்களை பயன்படுத்தாமல் புதிய டியூன்களை உருவாக்குகிறார் இசையமைப்பாளர்.
- தந்தைக்கு அடங்காத பிள்ளையாக நடித்துவந்த தனுஷ், ஹரி இயக்கும் 'வேங்கை' படத்தில் தந்தைக்கு அடங்கிய பிள்ளையாக நடித்துவருகிறார்.
- பிரபுதேவா இயக்கத்தில் விஷால் - சமீரா ரெட்டி நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு 85 சதவீதம் முடிந்துவிட்டது. இப்படத்துக்கு விஜய் அன்டனி இசையில் ஒரே பாடலில் குத்து, மெலடி என இரண்டு மெட்டுக்களுடன் பதிவாகிய பாடல் காட்சியில் இருவரும் நடித்தனர்.
- ராதாவின் மகள் கார்த்திகாவின் செல்லப் பெயர் 'கார்த்து'.
- பிருத்விராஜ் திருமணம் முடிந்ததால் அவருடனான தனது கிசுகிசுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்று சந்தோஷப்படுகிறார் பிரியாமணி.
- நடிகர் அஸ்வின் சேகர் - கோபி செட்டிபாளையத்தைச் சேர்ந்த ஸ்ருதி நிச்சயாதார்த்தம் நடந்தது. வரும் ஓகஸ்ட் 24ஆம் திகதி திருமணம் நடக்கிறது.
- 'ஓம்' படத்தில் அர்ஜுன் ஜோடியாக புதுமுகம் பல்லவி நடிக்கிறார்.
- 'வந்தான் வென்றான்' படத்தின் பாடல் காட்சியை பிரான்ஸில் படமாக்க உள்ளார் இயக்குநர் கண்ணன். எடிட்டிங்கின் போது 'தெய்வத் திருமகள்' படம் பார்த்து கிளைமாக்சில் அழுதுவிட்டதாக நெகிழ்கிறார் எடிட்டர் ஆண்டனி.

வா



# ஸ்பெஷல் ம

மருத்துவமனையிலிரு
கழித்து 'ராணா' படப்பிடிப்புக்
விவாதம் நடந்துவருகிறதாம்.
எடுக்க விரும்புகிறார்களாம் கு

அதுவரைக்கும் 'ராணா'வை
வைத்து எடுத்துக்கொண்டிருக்
ஜூலையில் தான் அவர் படப்
கின்றன.

இதற்கிடையில் மருத்துவம
ளுக்குப் போய் பேஷண்டுகளை
கலந்துரையாடுவது என்றும் 
களுக்கு ஸ்பெஷல் மருந்தாகி

இன்னொரு முக்கிய செய்தி
ஏதாவது பிரச்சினை வந்தால்
லது சித்தா, ஹோமியோபதி ம
தொடவே மாட்டாராம். முதன்
வேண்டியிருக்கிறது தான் இப்
கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற்றி

**'கோ' படத்தின்** பிர
...ற வெற்றி ஏராளமான கேள்விகளை எழுப்பி
...டு விசிடி வெளிவந்த பின்னும் இந்த படம்
...கிறதே எப்படி? 'கோ' படத்தில் பெற்ற நல்ல
..., 'வந்தான் வென்றான்' படங்களில் அடை
...முடிந்த நிலையில் அவர் ஒப்புக்கொண்டிருக்
...டி ஏராளமான கேள்விகள்?
...மது பதில் எதுவுமில்லை. ஆனால், ஜீவாவின்
...ம் என்பதை நம்மால் விசாரித்து அறியமுடிந்
...' படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் முக்
...டுத்திருக்கும் எஸ்.பி. ஜனநாதனை சந்தித்தா
...ஒரு கதை சொல்லியிருக்கிறாராம் ஜனநாதன்.
...ணியாகக் கொண்ட சரித்திரக் கதையாம்
...ன்னர் மகுடம் போன்ற பில்டப்புக்களோ,
...ல்லாத யதார்த்த சினிமாவாக இருக்குமாம்
...ா என்று துள்ளிக்குதித்தாராம் ஜீவா. இன்னும்

...ம் சூட வா



# ...ந்து கொடுக்கும் ரஜனி

...து வீடு திரும்பிய ரஜனி எத்தனை வாரங்கள்
... கிளம்ப வேண்டும் என்பது குறித்துத் தான் கடும்
...ண்டிப்பாக அவர் ஒன்றரை மாதங்களாவது ரெஸ்ட்
...ம்பத்தினர்.
...தொடர்வது என்றும் மற்ற நட்சத்திரங்களை
...லாம் என்றும் முடிவாகியிருக்கிறதாம். அனேகமாக
...டிப்பில் கலந்துகொள்வார் என்றும் செய்திகள் கசி

...னயில் இருக்கும் ரஜனி அக்கம் பக்கத்து வார்டுக
... பார்த்து ஆறுதல் சொல்வது, அவர்களோடு
...த்தைச் செலவிடுகிறாராம். இதுவே நோயாளி
...ருப்பது தான் தனி சந்தோஷம்.
...இத்தனை ஆண்டுகளாக தனது உடலில்
...ாகா மூலம் சரி செய்துவிடுவாராம். அல்
...ந்துகளை தவிர வேறு மருந்துகளை
...றயாக ஆங்கில மருத்துவத்தை ஏற்க
...பாது அவரது கவலையும் என்கிறார்



# தகராறு நாயகி

**லக்கச்சக்கமான** அட்வான்ஸ் வாங்கிக் கொண்ட பிறகும் படத்துக்கு திகதி தராமல் இழுத்தடித்த நடிகை இலியானாவுக்கு தெலுங்கு மற்றும் தமிழில் தொழில் ரீதியான தடையை விதிக்க வேண்டும் என்று பிரபல தயாரிப்பாளர் மோகன் நடராஜன் புகார்கொடுத்துள்ளார்.

மோகன் நடராஜன் தயாரிப்பில் உருவாகியுள்ள விக்ரமனின் 'தெய்வ திருமகள்' படத்தில் நாயகியாக நடிக்க ரூ. 35 இலட்சம் கொடுத்து இலியானாவை ஒப்பந்தம் செய்திருந்திருந்தாராம். ஆனால், இந்தப் படத்துக்கு கொடுத்த அதே திகதிகளை ஷங்கர் இயக்கும் '3 இடியட்ஸ்' தமிழ் ரீ-மேக் நண்பனுக்கு கொடுத்து சொதப்பினாராம் இலியானா.

இதனால், கடுப்பான மோகன் நடராஜன், சென்னையில் உள்ள தென்னிந்தியா திரைப்பட வர்த்தக சபையில் ஒரு புகார்கொடுத்துள்ளார். அதில் பேசிய சம்பளத்திற்கு ஒப்புக்கொண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகும் இலியானா கால்ஷீட் தராமல் இழுத்தடித்தார். எனக்குக் கொடுத்த கால்ஷீட்டை 'நண்பன்' படத்துக்குக் கொடுத்துள்ளார். இதனால், எனக்கு ஏகப்பட்ட நஷ்டம். வாங்கிய அட்வான்ஸையும் திருப்பித் தரவில்லை. போன் செய்தால் அதை எடுக்கக் கூட மறுக்கிறார். எனவே, இவருக்கு தமிழ் மற்றும் தெலுங்கில் நடிக்க தடை விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையே இலியானா நாயகியாக நடித்த தெலுங்குப் படங்கள் 'சக்தி' மற்றும் 'நேனு நா ராக்ஷஸி' ஆகியவற்றின் விளம்பரம் உள்ளிட்ட எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்க மறுத்துவிட்டாராம் இலியானா. இதில் 'சக்தி' படம் சில வாரங்களுக்கு முன் வெளியாகி படுதோல்வியைத் தழுவியது. இந்தப் படத்தின் ஹீரோ ஜூனியர் என்டி ஆருக்கும் இலியானாவுக்கும் படப்பிடிப்பின் போதே கடும் தகராறு ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள். மேலும், படம் ரிலீஸானாலும் 'சக்தி' ஒரு மோசமான படம் என்று வேறு இலியானா கமெண்ட் அடித்தாராம்.

இதனால், படத்தின் தயாரிப்பாளர் வைஜெயந்தி மூவிஸ் சார்பிலும் இலியானா மீது தெலுங்குப் பட தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் தரப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்கு இலியானா வாங்கிய சம்பளம் ரூ 1.40 கோடி.

நிதினுடன் இவர் நடித்த 'ரெச்சிபோ' என்ற தெலுங்குப் படத்தின் தயாரிப்பாளருடனும் இலியானா தகராறு செய்ய அவரும் இப்போது தயாரிப்பாளர் சங்கத்தில் முறையிட்டுள்ளார்.

எனவே, இலியானவுக்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது. ஆனால், இது பற்றியெல்லாம் கவலைப்படாமல் 'நண்பன்' படத்தில் விஜய்யுடன் நடித்துக்கொண்டுள்ளார். தயாரிப்பாளர் சங்கம் தடைபோட்டால் முதல் பாதிப்பு விஜய்யின் 'நண்பன்' படத்துக்குத்தான் என்பது குறிப்பிடத்தக்கது

'சிங்கம்' படம் ஹிந்தியில் ரீ-மேக் ஆகிறது. இதில் நடிக்க அனுஷ்காவிடம் கேட்டனர். அதிக சம்பளம் கேட்டதால் அவரைத் தேர்வுசெய்யவில்லை. அந்த வாய்ப்பு இப்போது காஜல் அகர்வாலுக்குச் சென்றுவிட்டது. அஜய் தேவகனுடன் அவர் டூயட் பாடிவருகிறார். இந்நிலையில், மீண்டும் அனுஷ்காவுக்கு ஹிந்திப் பட வாய்ப்பு வந்துள்ளது. 'சிங்கம்' ரீ-மேக்கை இயக்கும் அதே ரோஹித் ஷெட்டியின் அடுத்த படத்தில் நடிக்க அனுஷ்காவைக் கேட்டுள்ளனர். இம்முறை அனுஷ்கா கேட்கும் சம்பளத்தைக் கொடுக்கவும் தயாரிப்புத் தரப்பு ஓகே சொல்லியுள்ளதாம். இதனால், இதில் அனுஷ்கா நடிப்பார் என கூறப்படுகிறது. படத்துக்கு இதுவரை ஹீரோ கூட முடிவாகவில்லையாம். அதேநேரம், ஹீரோயினாக அனுஷ்காதான் நடிக்கவேண்டும் என ரொஹித் ஷெட்டி வற்புறுத்தியதால் அனுஷ்காவுக்கு அதிக சம்பளம் தரவும் தயாரிப்பாளர் சம்மதித்துவிட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

# கலாபூஷணம் வீ.கே.பஞ்சமூர்த்தி இவரைப் பற்றி 25



**ஈழத்து தமிழர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று விளங்கும் நாதஸ்வரக் கலையில் தன்னிகரில்லா வித்துவான்களாக திகழ்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி என்பவர்கள். சகோதரர்களான இவர்கள் 33 வருடங்கள் இணைந்து நாதஸ்வரம் வாசிப்பதில் ஒப்பற்ற கலைஞர்களாக தமிழர் வாழும் இடமெங்கும் புகழ்பெற்று விளங்கியுள்ளனர். இவர்களின் ஒருவரான பஞ்சமூர்த்தி பற்றி சில குறிப்புக்கள்........**

- 1948 ஆம் ஆண்டு வீ. கோதண்டபாணி - இராஜராஜேஸ்வரி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் பஞ்சமூர்த்தி.
- ஏழு தலைமுறையாக நாதஸ்வரம் வாசிப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ள குடும்பத்தில் பிறந்த இவருக்கு நாதஸ்வரம் வாசிப்பதில் ஆர்வம் சிறுவயதிலேயே ஏற்பட்டுவிட்டது எனலாம்.
- இவர் தனது ஆரம்பக் கல்வியை இணுவில் ஆரம்ப பாடசாலையில் கற்றுக்கொண்டார்.
- 1958ஆம் ஆண்டு தனது 10ஆவது வயதில் மூளாய் ஆறுமுகப்பிள்ளை என்பவரிடம் முறைப்படி நாதஸ்வரக் கலையை கற்றுக் கொள்ளத் தொடங்கினார்.
- அண்ணன் கானமூர்த்தி நாதஸ்வரக் கச்சேரி செய்யும் இடங்களுக்குச் சென்று அதனை ரசித்துவந்த இவர் அதில் உள்ள ஆர்வமிகுதியால் அவருடன் இணைந்து கச்சேரி செய்ய ஆரம்பித்தார்.
- இவரின் திறமையைக் கண்ணுற்ற அண்ணன் தொடர்ந்து தன்னுடனேயே கச்சேரிகளுக்கும் விழாக்களுக்கும் நாதஸ்வரம் வாசிக்க அழைத்துச் சென்றார்.
- இவ்வாறு பஞ்சமூர்த்தி 1963ஆம் ஆண்டு முதல் அண்ணன் கானமூர்த்தியுடன் இணைந்து 1995ஆம் ஆண்டு வரையான சுமார் 33 ஆண்டுகள் இக்கலைப் பணியை செய்துள்ளார்.



- கானமூர்த்தி - பஞ்சமூர்த்தி என இவர்கள் இணைந்து இரட்டையர்களாக நாதஸ்வரக் கலையில் தமிழர் பிரதேசமெங்கும் ஒரு கலக்கு கலக்கினார்கள் என்று சொல்லலாம்.
- பஞ்சமூர்த்தியின் அபார திறமையைப் பார்த்த அண்ணன் அவரை இந்தியாவுக்கு அனுப்பி இக்கலையை கற்பதற்கு வழியமைத்துக் கொடுத்தார்.
- 1967 இல் இந்தியாவில் ஆண்டார் தேவஸ்தானத்தில் ஏ.வி. செல்வரத்தினம்பிள்ளை என்பவரிடம் 1968 இல் கே.எஸ். பிச்சையப்பா பிள்ளையிடம் முறைப்படி நாதஸ்வரத்தைக் கற்றுக் கொண்டார்.
- இலங்கை வந்த இவர் மீண்டும் அண்ணனுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலய விழாக்களிலும் மங்களமான நிகழ்வுகளிலும் நாதஸ்வரம் வாசித்துவந்தார்.
- நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தில் இவர் ஆஸ்தான நாதஸ்வரக் கலைஞராக இப்போதும் இருந்துவருகிறார்.
- இவர்களின் நாதஸ்வரக் கலையின் அசுர வளர்ச்சி கடல்கடந்த நாடுகளான இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், லண்டன் என தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் வியாபித்துநின்றது.
- இந்த சகோதரர்களின் திறமையைப் பாராட்டி சுன்னாகம் - கதிரமலை சிவன் கோவில் 'நாதஸ்வர இரட்டையர்' என்ற பட்டத்தை இவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தது.
- 1972 ஆம் ஆண்டு நாதஸ்வர மேதை அப்புலிங்கப்பிள்ளையின் மகள் ஜெயராணியை திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கும் ஒரு மகளுக்கும் தந்தையானார்.
- நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொழும்புக்கு இடம்பெயர்ந்து சென்ற இவர் அங்கிருந்தும் பல நாடுகளில் உள்ள இந்துக் கோயில்களுக்கும் நிகழ்வுகளுக்கும் சென்று நாதஸ்வரம் வாசித்தார்.
- 2009ஆம் ஆண்டு இவரின் அண்ணன் கானமூர்த்தியின் மறைவு இவருக்குப் பெரும் இழப்பாக அமைந்தது.
- கானமூர்த்தியுடன் சேர்ந்து நாதஸ்வரம் வாசித்துவந்த பஞ்சமூர்த்தி அவரின் மறைவுக்குப் பின்னர் தனது மகன் குமரேசுடன் இணைந்து நாதஸ்வரம் வாசித்து வருகின்றார்.
- யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயங்களின் திருவிழா நிகழ்ச்சிகளில் இவரின் நாதஸ்வரக் கச்சேரியைப் பார்ப்பதற்கு மட்டும் ஒரு தனிக்கூட்டம் கூடும்.
- பஞ்சமூர்த்தி கச்சேரிகளின் போது 'சுபபந்துவராலி' என்னும் கீர்த்தனை ராகத்தில் அமையப்பெறும் சிவபெருமானைப் புகழ்ந்துபாடப்பட்ட பாடல்களையே அதிகமாக விரும்பி வாசிப்பாராம்.
- நீண்டகாலமாக இக்கலைத்துறையில் கோலோச்சும் இவருக்கு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பரிபாலனசபை 'நாதஸ்வர இசைமணி','நாதகானசுரபி', 'நாதஸ்வர கான பூசஷணம்', 'நாதப் பிரம்மஜோதி' போன்ற பட்டங்களை வழங்கிக் கௌரவித்தது.
- 1986 இல் இலங்கை கம்பன் கழகத் தலைவர் ஜெயராஜும் பேராசிரியர் பொன். சுந்தரலிங்கமும் இணைந்து யாழ். பல்கலைக்கழகத்தில் இவர்களுக்கு வெள்ளிவிழாவை நடத்தினார்கள்.
- 2000ஆம் ஆண்டு லண்டனில் இவர் நிகழ்ச்சி செய்யும் போது அதனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த பிரித்தானியப் பிரமுகர் ஒருவர் இவருக்கு 'நாதஸ்வர இன்குழல் வேந்தன்' என்ற பட்டத்தை வழங்கினார்.
- இலங்கை கலாசார அமைச்சினால் 2010 ஆம் ஆண்டு 'கலாபூசஷணம்' விருதும் வீரமணி ஐயரால் 'நாதஸ்வர திரவஞ்ஜம்' என்னும் விருதும் நாதஸ்வரச் சக்கரவர்த்தி என்.கே. பத்மநாதனால் 'நாதஸ்வரக் கேடயமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதை தன் வாழ்வில் மறக்கமுடியாது என்கிறார் பஞ்சமூர்த்தி.
- ஏழு தலைமுறையாக நாதஸ்வரக் கலையுடனேயே வாழ்ந்துவரும் இவர், குருகுலம் என்னும் கலைக்கூடத்தை உருவாக்கி அதன் மூலம் மாணவர்களுக்கு நாதஸ்வரக் கலையை பயிற்றுவித்து தலைமுறை தலைமுறையாக இக் கலையை வளர்த்துவருகின்றார்.

தொகுப்பு - அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1957 ஆம் ஆண்டு பண்டா - செல்வா உடன்படிக்கை பகுதி - 06

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

இக் காலகட்டத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டது. நாடுபூராகவும் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இயற்கை வெள்ளம் ஓயும்வரை இனவாத வெள்ளத்திற்கு அணைபோடுமாறும், தமிழரசுத் தலைவர்கள் பொறுமை காக்க வேண்டும் என்றும் பிரதமர் பண்டாரநாயக்கா கேட்டுக்கொண்டார். அவரது நியாயமான கோரிக்கைக்கு வட இலங்கையோ தென்னிலங்கையோ செவிசாய்க்கவில்லை.

நாடு பெரும் அரசியல் சூறாவளியில் சிக்குண்டது. தென்னிலங்கை பௌத்த குருமார் கொழும்பு - 07, வாட் பிளேஸில் (Ward Place) உள்ள பண்டாரநாயக்காவின் இல்லத்திற்கு முன்னால் பெருமளவில் ஒன்றுகூடினார்கள். பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு கோரி கோஷங்களை எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஒரு அசாதாரணமான அரசியல் சூழ்நிலையை நாடெங்கும் உருவாக்குவதே அவர்களது முழுநோக்கமாகும். பண்டாரநாயக்காவின் அரசுக்கு நெருக்கடி கொடுப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் தேவையாக இருந்தது.

அவர்களே இந்த பௌத்த பிக்குகளினதும் இனவாதிகளினதும் ஆர்ப்பாட்டங்களுக்கு பின்தளமாக இருந்து செயல்பட்டார்கள் என ஆய்வாளர்கள் கணிப்பீடு செய்து கருத்து வெளியிட்டார்கள்.

பௌத்த மதவாதமும் பேரினவாதமும் கைகோர்த்தமையால் இனவாத அரசியல் மிக இலகுவாக நிறுவனமயப்படுத்தப்பட்டது. இதனால், பண்டாரநாயக்கா 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி (09.04.1958) பண்டா - செல்வா ஒப்பந்தத்தைத் தாம் கிழித்து எறிவதாகப் பகிரங்கமாகவே அறிவித்தார். இந்த அறிவிப்பு இனவாதிகளை ஆறுதல்படுத்தியது. ஆனால், நாட்டின் அரசியல் கொந்தளிப்பு தணியவில்லை.

ஒவ்வொரு அரசியல்வாதியும் நாட்டு மக்களை இனவாத சகதிக்குள் தள்ளிச் சென்றார்கள். எவருமே தேசிய நலன் கருதி மக்களை ஆற்றுப்படுத்தவேயில்லை. நாட்டின் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்தன. சட்டவாட்சி சீர்குலையத் தொடங்கியது. சட்டத்தை ஒவ்வொரு குண்டனும் தன் கையில் எடுத்துக் கொண்டான்.

சட்ட வலுப் பெறவேண்டிய பண்டா - செல்வா உடன்பாடு - 1957 எதுவிதமான சட்ட வடிவமும் பெறாது குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டது. இலங்கை அரசியலில் இதுவே முதல் அபசகுனம் ஆகும்.

இதுவே 1958ஆம் ஆண்டு கலவரத்திற்கு ஆணிவேராக அமைந்தது. இன்னும் அரசியல் ஆய்வாளர்களால் கேட்கப்படும் ஒரு கேள்வி உள்ளது. 1958 இனக் கலவரத்திற்கு இந்த நாட்டு மக்களைத் தூண்டிய காரணிகள் யாவை?

1957 இல் உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா உடன்பாடு நிறைவேற்றப்படாமையா? இதனால், பொறுமை இழந்த தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட கொந்தளிப்பா? பண்டாரநாயக்கா அரசைக் கவிழ்க்கும் ஒரேயொரு நோக்கம் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் குறுகிய நலன் கொண்ட சூழ்ச்சிவலைத் திட்டமா? இந்த நாட்டில் இனவாதமும் பௌத்த மதவாதமும் கைகோர்த்து இனங்களுக்கிடையில் நல்லுறவையும் ஒற்றுமையையும் தகர்த்து இணக்கப்பாட்டு அரசியலுக்கு மூடுவிழாவும் இன முரண்பாட்டு அரசியலுக்கு திறப்புவிழாவும் மேற்கொண்ட நயவஞ்சக அரசியலா?

மேலே கூறப்பட்ட கேள்விகள் இன்றும் கேட்கப்படுகின்றன. இக் கேள்விகளுக்கு மத்தியில் தான் 1958 கலவரத்தின் பரிமாணம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## சட்டமும் சமூகமும் 27




சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# பக்தர் கேட்டவை
## பாபா சொன்னவை


**பக்தர்:-** சுவாமி இந்த சமுதாயத்தில் ஒரு தொழிலைப் பிடித்துக்கொண்டு நஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்துபவர்களுக்கு தங்களது அருளுரை யாது?

**பாபா:-** Head in the Forest Hand in the Society என்று நான் அடிக்கடி கூறுவேன், சமுதாயத்தில் வியர்வை சிந்தி பாடுபட்டு உழைத்து வாழ வேண்டும். அதேநேரத்தில் உனது நோக்கம், குறிக்கோள் இறைவனிடத்தில் தான் இருக்க வேண்டும். Forest Means Forest தெய்வ உணர்வில் தான் Rest கிடைக்கும். தாய்க்கு எவ்வளவு வேலை இருப்பினும் தன் குழந்தையை மறக்கமாட்டாள். குழந்தைக்குப் பசிக்கும் வேளைக்கு அந்தத் தாய் எந்த வேலையாக இருப்பினும் விடுத்து குழந்தைக்குப் பாலூட்டுவாள். தலையில் அடுக்கடுக்கான குடங்களுடன் தாளம் தப்பாமல் நடனமாடிக்கொண்டிருக்கும் பெண் தலையில் உள்ள குடங்களின் அடுக்கு அசையாமல் கவனமாகப் பார்த்துக்கொள்வது போல உலகியல் வாழ்வில் எவ்வளவு மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும் நோக்கமும் கவனமும் இறைவன் மீதே இருக்க வேண்டும்.

**பக்தர்:-** சுவாமி! 'நான்', 'தனது' என்கிற தன் முனைப்பை - ஆவண உணர்வை எப்படி விட்டொழிப்பது?

**பாபா:-** இதற்கு ஒரு சிறு உதாரணத்தைக் கவனியுங்கள். பெரிய தனவந்தர் ஒருவர் ஒரு மாளிகையில் இருக்கிறார். அவர் காவலுக்காக ஒரு நாயை வளர்க்கிறார். நீ அந்த மாளிகைக்குள் நுழைய வேண்டுமென்றால் இரண்டே வழிகள் தான் உள்ளன.

ஒன்று, நீ உள்ளே செல்ல அந்த நாயை உனது நண்பனாக்கிக் கொள்ளவேண்டும். இதுவே கா்ம மார்க்கம். இல்லையென்றால்,, அந்த பெரிய தனவந்தர் வெளியே வந்து உன்னை உள்ளே அழைத்துச் செல்லவேண்டும். இல்லையேல் அந்த நாய் உன்னை உள்ளே நுழையவிடாது. மாளிகைக்குள் செல்ல இந்த இரண்டு வழிகளே உள்ளன. இந்த இரு வழிகளே தான் 'தனது' என்ற ஆணவ உணர்வுகள். இந்த வாயிலைக் கடந்து செல்லவேண்டுமென்றால் அவற்றை முதலில் தன்வயப்படுத்த வேண்டும். 'தான்' என்கிற அகப்பற்றையும் 'தனது' என்கிற புறப்பற்றையும் இந்த வழியில் எளிதாக வெல்லமுடியும். கடவுள் என்கிற எஜமானர் வெளியே வந்து உன்னை உள்ளே அழைத்துச் செல்வது தான் பக்தி மார்க்கம். பற்று அழிய இதுவே நல்லவழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 27

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | | 06 | 07 |
| 08 | 09 | | 10 | | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | | 19 | 20 |
| 21 | | 22 | 23 | 24 | 25 | | 26 |
| 27 | 28 | 29 | 30 | | 31 | 32 | |
| | 33 | 34 | | 35 | 36 | 37 | 38 |
| 39 | 40 | 41 | 42 | | 43 | 44 | 45 |
| 46 | 47 | | 48 | | 49 | 50 | |

### இடமிருந்து வலம்

1. சலரோக நோயின் மருந்தான
6. வளர்பிறையின் எதிர் பிறை
8. கிரி (திரும்பியுள்ளது)
11. சகோதரி
14. தலைமுறை
19. விசப்பூச்சி (இறுதி எழுத்து இல்லை)
22. நிழல்
27. ஒலி (திரும்பியுள்ளது)
31. தமது
33. புத்தி
35. 1000 காய் காய்த்தாலும் புறத்தி (திரும்பியுள்ளது)
39. அரசனின் இருக்கை (திரும்பியுள்ளது)
43. காந்தியின் உடை (திரும்பியுள்ளது)
46. எதற்கு
49. பெண் பிள்ளையின் பெயர்

### மேலிருந்து கீழ்

1. குடிநீர் அற்ற பிரதேசம்
2. விவசாயம்
4. கால இடைவெளி (குழம்பியுள்ளது)
6. கறையான் அரிக்காத மரம்
7. பச்சையாகவும் வற்றலாகவும் சமைப்பது (தலைகீழ்)
16. கணவன் உயிரை மீட்டவள்
18. இது சாட்டவோ, வாங்கவோ கூடாது (தலைகீழ்)
25. கந்தசஷ்டி பிரசாதம் (தலைகீழ்)
28. அண்ணா
32. அடுத்தவருக்கு இது செய்யாதே (தலைகீழ்)
38. அரண்மனைக் காவல் (இறுதி இல்லை)
39. குழந்தைகள் இதமாக உறங்குமிடம் (தலைகீழ்)
42. தெரிந்துகொள்

### குறுக்கெழுத்துப் போட்டி 25க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | ம | ரா | வ | தி | | கா | து |
| ச் | | சி | ரி | | தே | | வி |
| சா | தி | | சை | னி | ன் | இ | |
| ணி | ர | ப | | யி | | ர | வி |
| | வ | ர | த | ட் | ச | ணை | |
| கா | ம் | ந் | ர | தா | | | தீ |
| வ | | த | க | சா | ம் | | ங் |
| டி | | ன் | ர் | | நா | ன் | கு |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. நேசராஜ்குமார் வித்தியாசாகர்
கிளி./கிளிநொச்சி ம.வி.

2. திருமதி தி. சிதம்பரநாதன்
டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

3. அ. ஸ்ரீஸ்கந்தராஜா
புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு.

குறுக்கெழுத்துப் போட்டி 27க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




"என்னடா இன்னிக்கு அதிசயமா ஹோம் வேர்க் செஞ்சிக்கிட்டு வந்திருக்கே?"
"எங்க ரீ.வீ ரிப்பேராயிடுச்சி சேர்"




"பயப்படாதீங்க ஊசி போடரப்போ கொசு கடிச்ச மாதிரி இருக்கும்!"
"டெங்கு நோய் வராதிருந்தால் சரி"




"நேற்று கூட்டத்தில் தலைவர் பேசும் போது ஏன் ஜனங்கள் தும்மினார்கள்?"
"தலைவர் 'பொடி' வச்சு பேசினாரில்லே"




"மெகா சீரியல் டைரக்ட் பண்ண நீங்க சரி வர மாட்டீங்க!"
"ஏன் அப்படி சொல்றீங்க?"
"கதாபாத்திரமெல்லாம் வேக வேகமா வசனம் பேசற மாதிரி சீன் சொல்றாரே"




"ஏன் பஸ்ஸிலே மயக்கம் போட்டு விழுந்தீங்க?"
"கண்டக்டர் ஒரு ரூபா மிகுதி காசை தந்து விட்டார்!"




"என்ன அந்த ஓட்டலல்ல அரைச் சாப்பாடு என்பதற்குப் பதில் அழகுச் சாப்பாடு என்று போர்டு போட்டிருக்காங்க?"
"உடம்பு ஸ்லிம்மா இருக்க சாப்பாடு தர்றாங்களாம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்ப்பாணத்தில் பண்பு மிக்க கல்விமான்களை உற்பவித்த உயர் கலைக்கூடமான கல்லூரி ஒன்றின் தற்போதைய நிலையை நினைக்கும் போது எனக்கு நெஞ்சம் கணக்கிறது. முன்னர் ஒழுக்கத்திலும் கல்வியிலும் கீர்த்திமிக்க கல்லூரியாகத் திகழ்ந்தது.

அக் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களால் பட்டைதீட்டப்பட்ட பல மாணவர்கள் இப் பூமிப்பந்தில் பல உயரிய துறைகளில் சிறப்புப் பெற்று துலங்குகின்றனர். நான் கூட அக்கல்லூரியில் பயின்ற பழைய மாணவன் என்றபடியால் எனது வளர்ச்சியில் அக்கல்லூரி பெரும் பங்கை வகித்தது. இக் கல்லூரியின் இன்றைய செல்நெறி பற்றி அக்கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருடன் அண்மையில் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் படித்தபோது கற்பித்த ஆசிரியர் அவர். ''நீ படித்த போது இருந்த பிள்ளைகளோ அல்லது ஆசிரியர்களோ இப்ப இல்லை. எல்லாமே தலைகீழாகத் தான் நடக்கிறது'' என்று பொருமினார்.

''என்ன சேர் இப்படிச் சொல்லுறியள். நான் படிக்கிற காலத்தில் இந்தக் கல்லூரியைப் பற்றியும் முன்னர் படித்த மாணவர்களின் பெருமைபற்றியும் கற்பித்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை பற்றியெல்லாம் கூறினீர்கள். ஆனால், இப்ப....'' என்று இழுத்தேன். ''அதெல்லாம் அந்தக்காலமடாப்பா. இப்பத்த பிள்ளையள் எண்டா சொல்லவே வேணும். இது கலவன் பாடசாலை என்டதாலோ எல்லாம் அந்த மாதிரி நடக்குது. கல்வி கற்றல் என்ற நோக்கத்துடன் வரும் மாணவ, மாணவிகள் தமது நோக்கத்தை மறந்தவர்களாக 'காதல்' பாடத்தைத் தான் ஆர்வமாகக் கற்கிறார்கள்...'' என்று பெருமூச்செறிந்தவாறு கூறினார். அவர் கூறிய எல்லா விடயங்களையும், அப் பாடசாலையில் நடக்கும் திருக்கூத்துக்களை அப்படியே எழுத எனது கை ஓம்பவில்லை. எனவே, அக் கல்லூரிக்கு களங்கம் கற்பிக்க முயலவில்லை.

இருந்தும் ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாடசாலை வளாகத்திற்கு வெளிப்பக்கமாக கூப்பிடு தொலைவில் அப்பாடசாலைக்குரிய விளையாட்டு மைதானம் அமைந்திருக்கிறது. விளையாட்டு மைதானமா விடுகாலிகளின் மைதனமா என்பதை நான் கூற வரும் சம்பவங்களை வைத்து முடிவெடுங்கள்.

அப்பாடசாலை மைதானத்திலுள்ள மதில் சுவர்கள் இடிந்துபோய் இருக்கின்றன. வாயிற்கதவுகள் கூடக் கிடையாது. மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட அம் மைதானத்தை மாணவர்கள் பயன்படுத்து என்பது குறைவு. வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி என்றாலே அம் மைதானத்தைப் பற்றிய கவனம் பாடசாலை நிர்வாகத்திற்கு வரும்.

அம் மைதானத்தின் எல்லையில் பல நிழல் தரும் மரங்கள் நிற்கின்றன. அந்த மரங்கள் தரும் நிழல்களின் குளிர்ச்சியை அனுபவிப்பதற்கென பலர் வருவார்கள். அவ்வாறு வருபவர்களில் 'தண்ணி' அடிக்கும் ஆசாமிகளும் உள்ளடக்கம். மதிய வேளைகள் மற்றும் மாலை வேளைகளில் மைதானத்தில் கூடும் சில இளைஞர்கள் மது அருந்திவிட்டு வெற்றுப் போத்தல்களை உடைத்து எறிந்து விட்டுச் செல்கின்றனர்.

இதனால், மாலை வேளைகளில் விளையாட வருவோர் பெரிதும் சிரமப்படுகின்றனர். போத்தல் ஓடுகள் அவர்கள் கால்களைப் பதம் பார்க்கின்றன. சில இளைஞர்கள் மாலை வேளையளவில் மைதானத்தின் நடுவே குழுமியிருந்து புகைப்பிடித்துவிட்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களை உச்சதொனியில் மேற்கொள்கின்றனர்.

மதியவேளையில் ஆட்களின் நடமாட்டம் சற்றே குறைந்திருக்கும் தருணத்தில் சில காதல் ஜோடிகளும் அந்த மைதானத்திலிருக்கும் மரநிழல்களில் தஞ்சமடைவார்கள்.



மாலை வேளைகளில் அப்பாடசாலையில் கற்காத மாணவர்களும் மைதானத்திற்குள் விளையாடுகின்றனர். அத்துடன், உடற்பயிற்சி செய்யும் இளைஞர்களும் மைதானத்தை நாடிவருகின்றனர். வயதானவர்களும் தமது உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக நடைப்பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இவற்றுக்கும் மேலாக தண்ணியடிக்கும் இளைஞர்களும் அம் மைதானத்தை முற்றுகையிடுவதால் வேண்டத்தகாத குழப்பங்கள் நிகழ வழி சமைக்கின்றன. கடந்தவருட இறுதியில் இவ்வாறு மது அருந்திவிட்டு இரு இளைஞர் குழுக்களிடையே மைதானத்தின் நடுவே ஏற்பட்ட மோதலில் சிக்கிய இளைஞன் ஒருவனின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டதை இங்கு குறிப்பிடுகிறேன்.

அந்தளவிற்கு அந்த இளைஞர்கள் கடுமையாக மோதிக்கொண்டனர். இவற்றுக்கெல்லாம் மது அருந்தவரும் இளைஞர்களே இத்தகைய காடைத்தனத்தைப் புரிகின்றனர்.

இவ்வாறு மது அருந்திவிட்டு ரகளைகளில் ஈடுபடுவோர் பெரும்பாலும் பாடசாலை செல்லும் மாணவர்களாகவே காணப்படுகின்றனர். அண்மையில் காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் சென்ற பாடசாலை மாணவர்கள் சிலர் மது அருந்திவிட்டு தகாத வார்த்தைப்பிரயோகங்களை மேற்கொண்டனர். அத்துடன், அரைகுறை ஆடைகளுடன் நின்று நடனமாடியுள்ளனர். இத்தனைக்கும் இவர்கள் 16 வயதினையுடைய சிறுவர்கள். இவர்கள் விலை உயர்ந்த மதுவகைகளை அருந்துவதற்கான பணம் எங்கிருந்து கிடைக்கிறது? கல்வி கற்பதற்கென பெற்றோரிடமிருந்து பணத்தைப் பெற்று இத்தகைய அநாகரிகச் செயல்களில் ஈடுபடுகின்றனர். பெற்றோரை ஏமாற்றி அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தைக் கொண்டு அநாவசியமான கைங்கரியங்களில் ஈடுபட்டு வருவது அதிகரித்துவருகிறது.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்ற சிந்தனைக்கு உயிர்கொடுக்கவேண்டிய இளம் சந்ததி, திசைமாறிப் பயணிக்கும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. இதற்கு பெற்றோருக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏதோ ஒரு வகையில் பங்கு உண்டென்பதை மறக்கக் கூடாது. ஒரு சமூகத்தில் சிறுவர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்க வேண்டிய முழுப்பொறுப்பும் கடமையும் பெற்றோர் ஆசிரியர்களுக்கு உண்டு.

யாழ். குடாநாட்டில் உள்ள சில பாடசாலைகளில் அண்மைக்காலமாக ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கும் சம்பவங்களால் மாணவர்கள் பாதிப்படைவதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. உண்மையில் மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டியவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் மாணவர்களைத் தண்டிப்பது குற்றமாகாது. இருந்தும் மாணவர்களின் நலன்களிலும் உடல் - உள பிரச்சினைகளிலும் அதீத அக்கறை எடுத்துச் செயற்படுவது நல்லது.

தற்போது 30 வருடகால யுத்தப் பிரளயம் நீங்கி அமைதிச்சூழ்நிலை நிலவும் வேளையில் கடந்த கால யுத்தவடுக்களைச் சுமந்தவர்களாக பல மாணவர்கள் இருக்கின்றனர். எனவே, அவர்கள் தவறுவிடும் சந்தர்ப்பத்தில் விடும் தவறுகளுக்கான மூலகாரணத்தை கண்டறிய வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும்.

இதை விடுத்து, மாணவர்கள் விடும் தவறுகளின் அடிவேரை ஆராயமல் எழுந்தமானமாகத் தண்டனை கொடுக்கமுயலக் கூடாது. ஆசிரியப்பணி என்பது புனிதமானது. ஒவ்வொரு மாணவனின் மனதிலும் புரையோடிப்போயிருக்கும் குறைகளை இனங்கண்டு தகுந்த தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

முற்கால ஆசிரியர்கள் தமது பணிகளை செவ்வனே ஆற்றிவந்தனர். இதற்கு அக்காலத்தில் நிலவிய சமூக அமைப்பு, சூழல் என்பன நிலைக்களன்களாக அமைந்தன. ஆனால், இன்றுள்ள நிலமை வேறு. மாணவர்களை நன்னோக்குடன் தண்டிப்பதும் குற்றமாகும் என அரசசுற்றுநிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒரு ஆசிரியர் மாணவன் ஒருவனைத் தண்டிக்கிறார் என்றால் அந்த மாணவன் சமூகத்தில் நல்லதொரு நிலைக்கு வர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கருதியே ஆகும்.

''நல்ல குருநாதன் எம்மை வருத்துவது கொல்லவல்ல...''என்ற முதுமொழிக்கிணங்க மாணவ சமூகமும் பெற்றார்களும் ஆசிரியர்களின் புனிதப் பணியில் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

பாடசாலைகளுக்கு அருகில் மதுபான சாலைகள் அமைப்பதற்கு எதிர்பை வெளியிடுவோரே இவ்வாறு பாடசாலை மைதானங்களில் வைத்து மது அருந்தி கலகத்தில் ஈடுபடுவது முறையான விடயமா?

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் பூதாகரமாக தலைதூக்கும் காணிப்பிரச்சினை

வன்னியில் யுத்தத்தின் பின்னர் பல்வேறு பிரச்சினைகள் புதிது புதிதாக முளைத்துக்கொண்டிருக்கின்றன. யுத்தம் தந்த வெறுமைக்கப்பால் நட்டாற்றில் விடப்பட்ட அம் மக்களின் வாழ்வில் சொல்லிக்கொள்ளத் தக்கதாக எந்தவொரு வசந்தமும் இதுவரை வீசியிருக்கவில்லை. ஆனாலும், புலிகளது கட்டுப்பாட்டு காலப்பகுதியினில் கைவிட்டு வெளியேறிப் போனவர்கள் பலரும் இப்போது ஊர் திரும்பத் தொடங்கியுள்ளமையே புதிய குழப்பங்களுக்கு வழிகோலியிருக்கின்றது.

வன்னியில் இப்போது பொலிஸ் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் காணிகள் தொடர்பான வழக்குகளும் முறைப்பாடுகளும் பெருமளவில் தேங்கிக்கிடக்கின்றன. சாதாரண காணிப்பிரச்சினைகளிலெல்லாம் இப்போது படையினர் கூடத் தலையிட்டு தீர்ப்புக்கூறும் விசித்திரமும் நடக்கின்றது. மறுபுறத்தில், கொழும்பில் உயர்மட்ட கைங்கரியங்களை முடித்துக் கொண்டு வன்னியில் களமிறங்குபவர்களும் தாராளமாகவே உள்ளனர். அவர்களுக்குத் துணையாக பெரும்பாலும் ஆயுதம் தாங்கிய சீருடையினர் செயல்படுகின்றனர். ஆனாலும், காணிகளுக்கு வேலி போடப்பட்ட பின்னர் அவர்கள் கொழும்பு திரும்பவே விருப்பம் கொண்டுள்ளனர்.

வன்னியில் பெரும்பாலான மாவட்டங்களில் கடந்தகாலங்களில் காடுகள் அழிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்ட குடியேற்றத்திட்டங்களே உள்ளன. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு உள்ளிட்ட சிலபிரதேசங்களிலேயே சொந்த காணிகளை அதற்கான காணி உறுதிகளைக் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்தனர். ஏனைய பகுதிகளில் மக்கள் குடியமர்த்தப்பட்ட போதும் அவர்களுக்கான நிரந்தர காணி உறுதிகள் ஏதும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அரசினால் வழங்கப்பட்ட 'பெமிற்'களை தவிர அம் மக்களிடம் தமது காணிக்கான உரிமை கோர ஏதுமிருக்கவில்லை. யுத்தத்தினால் அனைத்தையும் இழந்துவிட்ட நிலையில் அந்த பெமிற்றுக்கள் கூட அவர்களிடம் இப்போது எஞ்சியிருக்கவில்லை.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வன்னிப் பகுதிகளிலிருந்தும் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் பல பகுதிகளிலும் பெருமளவிலான காணிகளுக்கான பெமிற்றுக்கள் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டே இருந்தன. அவர்களுள் பெரும்பாலானவர்கள் அண்மைய வருடங்களில் மீள் குடியமர்வது தொடர்பான சந்தேகத்தினில் அக் காணிகளை தமிழ் மக்களுக்கு விற்றிருந்தனர். பெமிற் மூலம் வழங்கப்பட்ட காணிகளை வெளியாருக்கு விற்கமுடியாதென்ற நிபந்தனைகள் தூக்கியெறிப்பட்டிருந்தன. வவுனியாவிலும், புத்தளத்திலும் சில சட்டத்தரணிகளூடாக போலியான காணி உறுதிகள் தயாரிக்கப்பட்டு இவ் விற்பனைகள் இடம்பெற்றுள்ளன எனவும் கூறுப்படுகின்றது.

தற்போது சொந்த இடங்களுக்குத் திரும்பக்கூடிய சூழலைய அடுத்து வந்துசேர்ந்த முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் அவ்வாறாக காணிகள் எதனையும் தாம் முன்னதாக விற்றிருக்கவில்லை என்கின்றனர். தம்மிடமிருந்து காணிகளை வாங்கி குடியிருப்பவர்களை அங்கிருந்து வெளியேற அச்சுறுத்துகின்றனர். பலவேளைகளில் படையினரையும் பொலிஸாரையும் அவர்கள் துணைக்கு அழைத்தும் வருகின்றனர். அல்லது புலிகளது ஆதரவாளர்களெனெ குற்றஞ்சாட்டி அச்சுறுத்தவும் அவர்கள் பெரும்பாலும் பின்னிற்பதுமில்லை.

மறுபுறத்தே, விடுதலைப்புலிகள் வசம் இருந்த காணிகள் மற்றும் பண்ணைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் படைத்தரப்பு அவற்றை இப்போது தமக்குரியதென உரிமைகோரிவருகின்றது. விடுதலைப் புலிகள் வசமிருந்தவையெல்லாம் பொது மக்களினுடையவையே என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள படைத்தலைமை எப்போதும் தயாராகவில்லை. இப்போதெல்லாம் அக்காணிகளிலும் உணவகங்களும் ஓய்வுவிடுதிகளும் படைத்தரப்பால் கட்டப்பட்டு திறக்கப்பட்டும் விட்டன.

ஆனால், மறுபுறத்தினில் விடுதலைப் புலிகளால் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களை விரட்டியடிப்பதில் படைத்தரப்பு முனைப்புக் காட்டியே வருகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கில்இருந்து இடம்பெயர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த குடும்பங்களுக்கே பெரும்பாலும் இக் காணிகள்

> **தம்மிடமிருந்து காணிகளை வாங்கி குடியிருப்பவர்களை அங்கிருந்து வெளியேற அச்சுறுத்துகின்றனர். பலவேளைகளில் படையினரையும் பொலிஸாரையும் துணைக்கழைத்து புலிகளது ஆதரவாளர்களென குற்றஞ்சாட்டி அச்சுறுத்தவும் அவர்கள் பெரும்பாலும் பின்னிற்பதில்லை.**

பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. விரட்டியடிக்கப்பட்ட இக்குடும்பங்கள் சொந்த மாவட்டங்களுக்கும் செல்லமுடியாதும், வாழ்ந்த காணிகளிலில் இருந்து வெளியேற்றப்பட்டும் அநாதரவாக விடப்பட்டுள்ளன. அவர்களும் விடுதலைப்புலிகள் குடும்பங்கள் எனவோ அல்லது ஆதரவாளர்கள் எனவோ அடையாளப்படுத்தப்பட்டேயுள்ளனர்.

இதனிடையே, தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கும் சர்ச்சைக்குரிய காணிகள் அவசர அவசரமாக பகிர்ந்தளிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. எனினும், இக்குற்றச்சாட்டுக்களை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மறுதலித்தே வருகின்றது. புதிய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல் எனும் பெயரில் இந்நடவடிக்கைகள் தொடர்வதாக பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன.

மறுபுறத்தே தமிழ் மக்களது பூர்வீக மண்ணான கொக்கிளாய் - மணலாறு பகுதிகளில் மீள்குடியமர்வுகளை அரசு வேகமாக முன்னெடுத்து வருகின்றது. ஐந்து சிங்களக் குடும்பங்களுக்கு ஒரு தமிழ்க் குடும்பமென்ற வகையில் தொடரும் இம் மீள்குடியமர்வில் தமிழ் மக்கள் பொறியினில் சிக்க வைக்கப்பட்ட வண்ணமிருக்கின்றனர். எனினும், இக்குடியமர்வுகள் சுமார் 25 வருடங்களுக்குப் பின்னரே இடம்பெற்றிருக்கின்றது. ஆனால், அரசுக்கோ இக்குடியமர்வின் போது அப்பகுதிகளில் எல்லைப் பிரச்சினைகள் எதுவுமே இருந்திருக்கவில்லை. பெரும்பாலான குடும்பங்கள் மூன்றாவது சந்ததியை சந்தித்துள்ள நிலையில் அவர்களுக்கான புதிய பெமிற்றுக்கள் கூட வழங்கப்பட்டே வருகின்றன.

வன்னியில் பெரும்பாலான கிராமங்கள் யுத்தத்தினால் தடம்மாறிப் போயுள்ளன. காணிகள் எல்லைகள் வீதிகளென எவையுமே தடம்தெரியாத வகையில் இராணுவ மண் அணைகளும் கால்வாய்களும் நிரம்பிப் போயே இருக்கின்றன. இப்போதெல்லாம் அக்கிராமங்களில் எல்லைக் கற்கள் இல்லாதேயுள்ளன. பெரும்பாலும் அரசினால் அப்போது வழங்கப்பட்ட பெமிற்றுக்களோ காணி அளவிடை வரைபடங்களோ இப்போது மக்களிடமில்லை. முள்ளிவாய்க்கால் வரை ஓடிய அவர்களிடம் இறுதியில் எஞ்சியிருந்தது அப்போது உயிர் மட்டும்.

இப்போது மீண்டும் அரச அதிகாரிகள் அனைத்துமே யுத்தத்தினில் அழிந்துபோயுள்ள நிலையில் காணிகளுக்கு எல்லையிட முற்படுகின்றனர். எவரிடமேனும் வரைபடங்களிருந்தால் தந்துதவுமாறு விளம்பரம் செய்கின்றனர். சிலவேளை காணிவிடயங்களுக்காக அமைச்சர்கள் கூட வன்னி வந்து திரும்பியுள்ளனர். யுத்தத்தால் அலைக்கழிக்கப்பட்ட மக்களது எஞ்சியுள்ள வேண்டுதல்தமது குடும்பங்களுடன் சொந்த மண்ணில் வாழ்வது மட்டுமே. தமது எதிர்காலத்தை அவர்களால் பின்னர் பார்த்துக்கொள்ள முடியும்.

வன்னிக் காணி சர்ச்சைகள் தொடர்பில் விஷேட சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டியிருப்பதாக அரசு கூறுகின்றது. கட்சி வேறுபாட்டை மறந்து தமிழ்க் கட்சிகளும் இதற்கு தோள் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

• பாவலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் வெளிப்பாடே சடங்கு ஆற்றுகை



சடங்குகள் மனித வரலாற்றுடன் இணைந்தவையாகும். பண்டைய தமிழர் சமூகத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட கலை வடிவங்கள் சடங்கு சார்ந்தவையாக அமைந்துள்ளன. சடங்கின் அடியாகவே நாடகம் தோற்றம் பெற்றது என்ற கருத்தும் அறிஞர்களிடையே நிலவுகின்றது. ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் இறைசிந்தனையோடு வாழ்வதற்கும் தங்களுடைய அச்ச உணர்வைப் போக்குவதற்காகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காகவும் தொழில்களை செய்யும் போது சடங்குகளை மேற்கொண்டனர். நாகரிகம் வளர வளர சடங்கு முறைகள் பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சியடைந்தன. இச்சடங்குகள் இன்றும் கூட கிராமிய மக்களிடையே பயிலப்பட்டு வருகின்றன.

சடங்கானது சமூக, பொருளாதார வாழ்க்கை முறையுடன் ஒன்றித்தாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்தன்மை கொண்ட சடங்கு உண்டு. சடங்கின் தன்மை செயல் சார்ந்தாக உள்ளது. சடங்கானது புனிதம் சார்ந்தாக நிலைமாற்றம் அருளைப் பெறுவதாக உள்ளது. சடங்கானது சமூக ஒன்றுகூடலுக்கும் நம்பிக்கைக்கும் உரியதாக விளங்குகின்றது.

**தோற்றம்**

உலகம் தோன்றி மக்கள் தோன்றி அவர்கள் வேடுவர்களாகத் திரிந்து தமக்கான வாழ்விடங்களை அமைத்து குலக் குழும வாழ்வை வாழத்தொடங்கினர். இந்நிலையில், வாழ்வாதார தொழிலாக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் வாழ்வது உணவுக்காக என்று வாழ்ந்தவன் பின்னர் சிந்திக்கத் தொடங்கினான்.

தனக்கு இடையூறாக இருக்கும் இயற்கை சக்திகளை இனம் கண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும் இவ் மேலான சக்திகளுக்கு வழிபாடியற்றுவதன் மூலம் அவைதரும் அழிவிலிருந்து தப்ப முடியும் என நினைத்தான். அதற்காக அவன் சில காரியங்களைப் புனிதமாக செய்ய ஆரம்பித்தான். இதன் விளைவாக சடங்குகள் பிறந்தன.

மனிதனால் புனிதத்தன்மை என்றும் பிரமத்தை தோற்றுவித்து அதன் மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வின் இரண்டாம் கட்டமாக சடங்குகள் ஏற்படுத்தப்பட்டன. இச் சடங்குகள் புனிதத்தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும்.

அடுத்த கட்டத்தில் புனிதத்தன்மையை மக்கள், இறைவன் என்னும் பெயரால் மனித உருவமாக்கியோ, மனித உணர்வுகளாக்கியோ வழிபட முற்பட்டதால் இறைவனுக்கும் மனமுண்டு என எண்ணி இறைவனின் மனதை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படும் செயல்களே சடங்குகளாயின.

இச்சடங்கானது காலத்திற்கு காலம் அவனது சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கமைய மாறுபட்டு மாற்றங்களுக்கு உட்பட்டது. அதன் விளைவாக ஒரு பொதுமையை மையப்படுத்திக் கொண்டு நெகிழ்வுடன் வளர்ந்து இது வரை நிகழ்ந்தேறிவருகின்றது.

**சடங்கு யாரால் ஏன் செய்யப்படுகின்றது?**

சடங்கானது பண்டைய ஐதீகங்கள், நம்பிக்கைகளின் அடிப்படையாக ஆற்றப்படுகின்றது. நம்பிக்கையை வேண்டி நிற்கும் மக்களுக்காகவும் நேர்த்திக்கடனை வைத்த மக்களுக்காகவும் இச் சடங்கானது ஆற்றப்படுகின்றது. சடங்கானது சமூக ஒன்றுகூடலுக்கான சாதகனமாக சமூகப்பிரச்சினையை

●எஸ்.ரி.குமரன்

# வீட்டு வைத்தியம்

- துருவிய தேங்காயை வெயிலில் உலர்த்தி டப்பாவில் போட்டு வைத்தால் பல நாட்களுக்குக் கெடமால் இருக்கும். சட்னி அரைக்கும் போது அவற்றைப் பயன்படுத்தலாம்.
- எலுமிச்சை கெடாமல் இருக்க தினமும் ஒரு மணிநேரம் குளிர்ந்த நீரில் முக்கிவைக்கவும்.
- ஈரமான மெல்லிய துணியில் சுற்றி வைப்பதால் கறிவேப்பிலை வாடாமல் இருக்கும். அலுமினிய டப்பாவில் தலைகீழாக வைப்பதாலும் வாடாமல் இருக்கும்.
- காற்றுப் புகாத டின்னில் பச்சை மிளகாயைப் போடுவதற்கு முன் காம்புகளை எடுத்துவிடவும்.
- நாட்பட்ட நெய்யைத் திரும்பவும் சுடவைத்து அதில் முருங்கை இலைகளைப் போடவும். கொதித்த பிறகு இறக்கவும். ஆறிய பிறகு வடிகட்டினால் நெய் நல்ல வாசனையோடு இருக்கும்.
- சர்க்கரைப் பாகைச் சுத்தப்படுத்த சிறிது பால் அல்லது எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கொதிக்க வைக்கவும். மேலாக வரும் அழுக்கை நீக்கவும்.
- சிறிது பாலில் வெண்ணெய் சேர்த்துக் கலந்தால் உடனே கிறீம் ரெடி.
- வீட்டில் கிறீம் தயாரிக்க பாலின் மீது படியும் ஆடையை சேகரித்து உறையும் பெட்டியில் வைக்கவும். தேவையான போது எடுத்து நன்றாகக் கடையவும்.
- ஐஸில் சர்க்கரை தேவையென்றால் 100 கிராம் கேஸ்டர் சர்க்கரையுடன் 10 கிராம் மக்காச் சோளம் கலக்கவும்.
- உபயோகித்த (சுட்ட) எண்ணெயில் ஒரு துண்டு உருளைக்கிழங்கை நறுக்கி போடவும். கசண்டு அடியில் தங்கும். அந்த எண்ணெயை மறுமுறை பயன்படுத்தலாம்.
- பன்னீர் மிருதுவாக இருக்க ஒரு லீற்றர் பாலுக்கு 1/2 கப் கிறீம் சேர்த்துப் பன்னீர் தயாரிக்கவும்.
- பாலாடை கெடாமல் இருக்க அந்த டப்பாவில் ஒரு சிட்டிகை சர்க்கரை போடவும்.
- வீட்டில் பொடிக்கும் மசாலப்பொடி கெடாமல் இருக்க டப்பாவில் போடுமுன் அதில் சிறிது வினிகர் கலக்கவும்.



- புதினா, சீலரி இலைகள் புதிதாக இருக்க சில இலைகளைத் தண்ணீரில் போட்டு அதை ஐஸ் ட்ரேயில் ஊறிய உறையும் பெட்டியில் வைக்கவும். அவசரத் தேவைக்கு ஓரிரண்டு ஐஸ்க்யூப்களை உபயோகிக்கவும்.
- எவர்சில்வர் கத்தியைப் பயன்படுத்தி பழங்களை நறுக்கினால் பழங்களின் நிறம் மாறாது.
- பழுக்கவேண்டிய பழங்களை பழுப்பு நிற காகிதப் பையில் போட்டு வைத்தால் விரைவில் பழுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவாலி ஹேமலதா செல்வராஜா

## ஞாபகார்த்த விருது - 2010

**09.07.1995** இல் நவாலி சென்பீற்றஸ் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் கிராம அலுவலர் செல்வி. ஹேமலதா செல்வராஜாவுமங ஒருவர்.

இவரது ஞாபகார்த்தமாக இரண்டாவது தடவையாக 2010ஆம் ஆண்டுக்கான ஹேமலதா ஞாபகார்த்த விருதை யாழ். செயலகத்தில் வைத்து வழங்க யாழ். அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் ஆகியோர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

நவாலி - சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீதான தாக்குதலில் சேவைசெய்து கொண்டிருந்த சமயம் கொல்லப்பட்டவர் கிராம சேவையாளர் செல்வி. ஹேமலதா செல்வராஜா.

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் (J/134) நவாலி வடக்கு கிராம அதிகாரியாக பணியாற்றிவரும் வேளையில் 'லீப் போர்வேர்ட்' எனும் முன்நோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெற்ற விமானத் தாக்குதலில் பலியானவர் செல்வி. ஹேமலதா.

வலி. வடக்கு, வலி. மேற்கு, வலி. தென்மேற்கு பகுதி மக்கள் 'முன்நோக்கி பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்துகொண்டிருந்தனர்.

அவ்வேளையில் நவாலி - சென். பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் நவாலி - ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயப் பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கு கிராம அலுவலராக இருந்த செல்வி. ஹேமலதா பல்வேறு சேவைகளை மேற்கொண்டிருந்தார் இவ் வேளையில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் செல்வி. ஹேமலதாவும் அவருடன் சேர்ந்து 146 பொது மக்களும் சிறுவர்களும் பலியாகினர்.

இவரது அர்ப்பண சேவையை நினைவுகூரும் வகையில் ஞாபகார்த்த விருதொன்றை வழங்குவதற்கு முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் க. கணேஷ், தற்போதைய மேலதிக அரசாங்க அதிபரும், தற்போதைய வடக்கு மாகாண பிரதமசெயலாளருமான ஆ. சிவசுவாமி ஆகியோர் அயராத முயற்சியினால் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதியைப் பெற்றனர்.

இதனை தொடர்ந்து 2009 ஆம் ஆண்டில் இருந்து செல்வி. ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனை அடுத்து 2009ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் சிறப்பாகவும் - வினைத்திறனாகவும் செயலாற்றி வரும் கிராம அதிகாரிகள் மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டு யாழ். செயலகத்தில் வைத்து விருதும் சான்றிதழும் முதல் தடவையாக வழங்கப்பட்டன.

2010 ஆண்டுக்கான விருது வழங்கலுக்காக 15 பிரதேச செயலாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் இருந்து விருதுக்காக 3 கிராம அதிகாரிகள் மாவட்ட மட்டத்தில் தெரிவாகியுள்ளனர். உடுவில் பிரதேச கிராம அலுவலர் இ.எ. மசனட், கரவெட்டி பிரதேச செயலக கிராம அதிகாரி பா. லலித், தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம அதிகாரி கே. பூபாலசிங்கம் ஆகியோரே இவர்களாவர். இவ் அலுவலர்க்கான விருதையும் சான்றிதழ்களையும் யாழ்.அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் விரைவில் வழங்கவுள்ளார்.

●யாழ். மதி நிருபா

# மூலிகை மருத்துவம்

### உத்தாமணி

**Bin Dalmia estena**

**மறு பெயர்** - வேலிப் பருத்தி, உத்தமாகாணி, உத்தம கண்ணிகை

**உபயோகம்** இலை, பால், வேர்

உத்தாமணி அதிக மருத்துவ குணம் கொண்டது.



இது வேலி ஓரங்களில் கொடி போல் படர்ந்து காணப்படும்.

**சுவை** - கைப்பு

**செய்கை** - கோழையகற்றி புழுக்கொல்லி, வாந்தி உண்டாக்கி

**உபயோகம்** - உத்தமாணிவேர், கொடி, இலை, பால் இவற்றை நீரில் கொதிக்கவைத்து அருந்தி வந்தால் ஜலதோஷத்தினால் உண்டாகும் வாதபித்த மாறுபாடுகள் தோஷவிடங்கள் நீங்கும்.

**ரத்த அழுத்தத்தை தணிக்க**

வேலிப் பருத்தி பித்தத்தைத் தணிக்கும் தன்மைகொண்டது. அதிகாலை அதாவது (காலை 4.30 -6.00) நேரத்தில் வேலிப்பருத்தி இலைகள் 6 எடுத்து அப்போது கறந்த ஆட்டுப்பால் அல்லது பசுப்பால் இரண்டும்கிடைக்காவிட்டால் கொதிக்க வைத்த பால் லீ டம்ளர் சேர்த்து நன்றாக அரைத்து 21 நாட்கள் அல்லது 1 மண்டலம் அருந்தி வந்தால் ரத்தத்தில் கலந்துள்ள பித்த நீர் குறைந்து ரத்த அழுத்தம் குறையும். இம்மருந்து எந்த பக்கவிளைவையும் ஏற்படுத்தாது. ரத்த அழுத்தத்தைக்குறைக்கும் சிறந்த மருந்தாகும்.

**நோஞ்சான் குழந்தைக்கு**

சிறு குழந்தைகள் மார்பெலும்புக் கூடு தள்ளி நோஞ்சான் போல் காணப்படுவார்கள். இவர்களுக்கு வேலிப் பருத்தி இலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து ஒரு கரண்டி அளவு எடுத்து அதனுடன் சீரகம் ஒரு கரண்டி அருகம்புல் பொடி ஒரு கரண்டி சேர்த்து கஷாயம் செய்து பனங்கற்கண்டு சேர்த்து கொடுத்து வந்தால் நோஞ்சான் தன்மை மாறி உடல் வலுப்பெறுவார்கள்.

வயிற்றுப்புழு நீங்க உத்தமாணி இலையைப் பறித்து நீர் விட்டு அலசி குடிநீராகச் செய்து தினமும் காலை 1 சங்களவு கொடுத்து வந்தால் வயிற்றுப்புழுக்கள் நீங்கும். ஒரு மண்டலம் (41 நாள்) கொடுத்தால் வயிற்றில் புழுத்தொல்லை முற்றிலும் நீங்கும்.

**ரி. உமா** *(2 ஆம் வருடம்)*
லங்கா சித்த - ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை ஞானம் உள்ளவர்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

## இசைக்கலைமணி ஜெகனி சண்முகநாதன்



இசைக்கலை என்பது ஆழமான கடல் போன்றது. அதன் ஆழத்தைக் காணமுடியாது. ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் இசை பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இக்கலைக்கு அடிமையாகாதோர் இருக்கமுடியாது என்று கூறும் 'இசைக் கலைமணி' ஜெகனி சண்முகநாதன் தனது வாழ்வில் இசைக் கலை ஏற்படுத்திய மாறுதல்கள், இதனால் ஏற்பட்ட புகழ்பற்றி கூறினார். 'யாழ் ஓசை' வாசகர்களுக்காக அவர் வழங்கிய சிறப்பு செவ்வி.

**கேள்வி:- இசைத்துறையில் உங்களது பிரவேசங்கள் பற்றி கூறுங்கள்.**

**பதில்:-** இசைத்துறையில் நான் வந்தது ஒரு அதிஷ்டம் என்று தான் கூறவேண்டும். ஆரம்பத்தில் நான் முறையாக சங்கீதம் பயிலவில்லை. ஆனால், சிறந்த குரல் வளம் இருந்தது. இதனால், எனது பெற்றோர் தந்த ஊக்குவிப்பினால் பல மேடை நிகழ்ச்சிகளில் பாடியிருக்கிறேன்.

அத்துடன், 18 வயதில் 'வரந்தரும் தெய்வ கீதங்கள்' என்ற பாடல் தொகுப்பை வெளியிட்டேன். இந்த பாடல் தொகுப்பில் 19 பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இப்பாடல்களை கவிமணி ஸ்ரீதரன் ஆக்கியுள்ளார். இவரது பாடல்களை இசையமைத்து பாடியுள்ளமை வாழ்வில் மறக்கமுடியாத சம்பவமாகும். பின்னர் முறையாக சங்கீதம் கற்கவேண்டும் என்று விரும்பினேன். 2003 ஆம் ஆண்டளவில் கனகாம்பரி ஆசிரியையிடம் முறையாக சங்கீதம் கற்றேன்.

எனது ஆரம்பக் கல்வியை அதாவது க.பொ.த. சாதரண தரம் வரை யாழ். கொக்குவில் இந்து கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரியில் கலைப் பிரிவில் கல்வி கற்றேன். க.பொ.த. சாதரண தரம் மற்றும் உயர்தரப் பிரிவுகளில் சங்கீதத்தை ஒரு பாடமாக எடுத்து எனது இசைப்பயணத்தை தொடர்ந்தேன்.

தொடர்ந்து பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதற்கு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இடம் கொடுக்கவில்லை. இதனால், இந்தியா சென்று எனது இசைக் கலையைத் தொடர்ந்தேன். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 3 வருடங்கள் படித்து 'இசைக் கலைமணி' என்ற பட்டத்தைப் பெற்றேன். தற்போது தனியார் வகுப்புக்கள் நடத்தி எனது இசைப் பயணத்தை தொடர்ந்துவருகிறேன்.

**கேள்வி:- நீங்கள் இசைத் துறையில் இந்தியா சென்று பட்டம் பெற்றுள்ளீர்கள். இசைக்கலை பற்றிய தங்களின் மனப் பதிவு என்ன?**

**பதில்:-** இசைத்துறை கடலைப் போன்றது. அதன் ஆழத்தைக் காணமுடியாது. இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை என்ற அளவிற்கு இசை தனித்துவம் பெற்று விளங்குகிறது. இசைக்கலை இறைவனையும் இனிக்கவைத்து மயக்க வைத்தது என புராணங்கள் கூறுகின்றன. இறைவனை 'நாதப் பிரமம்' என்றும் 'இசைவடிவினன்' என்றும் புராண இதிகாசங்கள் செப்புகின்றன. இந் நிலையில், சாதாரண மனிதன் இதற்கு விதிவிலக்காக இருக்கமுடியாது. இசையின் மகத்துவம் கருதியே பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை கலைத்திட்டத்தில் இசைத்துறை அகற்ற முடியாத அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அழகியற் கல்வியில் கர்நாடக சங்கீதம் கற்போர் தொகை பெருகிவருகிறது.

இசை என்பது ஐம்புலன்களுக்கும் இன்பம் தருவது. இசை என்ற சொல்லுக்கு இசைவிப்பது, லயப்படுவது என்று பொருள். உயிரற்ற கல், மண், நீர், காற்றுக் கூட இசையுடன் இசையக் கூடியவை. இதன் பெருமையைச் சொல்ல வார்த்தைகளால் முடியாது.

**கேள்வி:- இத்துறையில் நீங்கள் அடைந்த வெற்றிகள் பற்றி கூறுங்களேன்.**

**பதில்:-** இவ்வாண்டில் இரண்டு இசைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளேன். 'தேசப் பிரார்த்தனி' மற்றும் 'சமாதானத்தின் குரல்' என்ற இரண்டு இசைத்தொகுப்புகளை அண்மையில் கொழும்பு - கண்ணதாசன் மண்டபத்தில் வெளியிட்டு அனேகரது பாராட்டுக்களை பெற்றுள்ளேன். நான் கர்நாடக இசைத்துறையில் பட்டம் பெற்றாலும் ஹிந்துஸ்தானி இசை மற்றும் மேற்கத்தைய இசை ஆகியவற்றிலும் ஈடுபாடுகள் இருக்கின்றது. எனது முதல் இசைத் தொகுப்பை கொக்குவில் - நந்தாவில் அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் வெளியிட்ட பிறகு இதுவரை மூன்று இசைத்தொகுப்புக்களை வெளியிட்டுள்ளேன். அத்துடன் யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் இசைக் கச்சேரி நிகழ்ச்சி நிகழ்த்திவருகிறேன். அத்துடன், வெளி மாவட்டங்களிலும் எனது இசைவேள்வியை நிகழ்த்தியுள்ளேன்.




அண்மையில் நாவலப்பிட்டியில் ஒரு இசைக்கச்சேரியை நிகழ்த்தினேன். அது மட்டுமன்றி 'ரூபவாஹினி' தொலைக்காட்சியிலும் இவ்வாண்டு தை மாதம் எனது இசைக் கச்சேரியை நடத்தினேன். மேலும், இந்தியாவில் இருந்து கல்விபயின்ற காலத்தில் 'கலைஞர் ரீ.வி' யில் 'ரசிகன்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பாடல் பாடியமை எனது வாழ்வில் முக்கியமான தருணமாகும்.

**கேள்வி:- இந்தியாவில் கல்வி பயின்ற காலத்தில் சினிமாத்துறையில் பின்னணிப் பாடல்களில் பாடுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏதேனும் வந்ததா?**

**பதில்:-** ஆம். நிறைய சந்தர்ப்பங்கள் வந்தன. அவற்றில் 'அழுக்கன் அழகாகிறான்' என்ற திரைப்படத்தில் கவிஞர் சினேகனின் 'வாடா வாடா' என்ற படத்தில் 'சென்னைப் பட்டணத்தில் என் பெயர்...' என்ற பாடலை பாடியுள்ளேன். அத்துடன், கபிலனின் ''மதன அழகே..''. என்ற பாடலையும் பாடியுள்ளேன். இப்பாடலுக்கு கிருஷ்ணமாலிக் இசையமைத்துள்ளார். இப்படி பல பாடல்களை பாடியுள்ளமை மறக்கமுடியாதவை.

**கேள்வி:- நீங்கள் சினிமாத்துறையிலும் உங்கள் ஆளுமையைப் பதித்தபடியால் உங்களைக் கவர்ந்த தென்னிந்திய பின்னணிப் பாடகர், பாடகிகள் இருக்கின்றனரா?**

நேர்கண்டவர் - எஸ்.நதிபரன்

**பதில்:-** ஆம். எஸ்.பி. பாலசுப்பிரமணியம், சித்திரா, சுஜாதா, சின்மயி, அனுராதா ஸ்ரீராம், ஹரிகரன் முதலிய பலர் எனக்கு பிடித்த பாடகர், பாடகிகள்.

**கேள்வி:- வளர்ந்துவரும் இளம் பாடகர்களுக்கு நீங்களும் ஒரு இளம் பாடகி என்ற வகையில் யாது கூறுகிறீர்கள்?**

**பதில்:-** இன்று இளம் பாடகர், உருவாகிக் கொண்டு இருக்கின்றனர். தனியாக அறிமுறை (Theory)யில் மாத்திரம் சிறந்துவிளங்காது குரல் வளத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். தனியே கர்நாடக இசையில் மாத்திரமின்றி மேற்கத்தைய இசையிலும் நாட்டம் கொள்ள வேண்டும்.

மேலும், இசைக்கலையை வியாபாரமாக்க முயலாமல் சமூகத்திலுள்ள மாற்றுவலுவுடையவர்களின் தேவைக்காக எமது திறமையை பயன்படுத்தி அவர்களின் தேவையை பூர்த்திசெய்ய முயலவேண்டும். பார்வையற்றவர்கள் போன்ற மாற்றுத்திறனாளிகளின் வளர்ச்சிக்காக எனது சேவையைப் பயன்படுத்தலாம். மாற்றுத்திறனாளிகளுக்காக இலவசமாக கச்சேரிகளை நடத்தவும் தயாராக இருக்கிறேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

முற்காலத்தில் பெண்களின் நிலை தொடர்பில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பலவாறாக விளக்கப்பட்டுள்ளது. பெண் என்பவள் குடும்பத்தில் காத்திரமான இடத்தை வகித்து வந்தாள். கணவனுக்கு நன் மனையாளாகவும் பிள்ளைகளிற்குச் சிறந்த தாயாகவும் சமூகத்தில் மிக்குயர் பொறுப்பான பெண்ணாகவும் விளங்குகிறாள். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண்களின் சிறப்பு குறித்து சிலாகித்துக் கூறப்படுகின்றது.

பெண் என்பவள் போற்றுதற்குரியவளாக திகழ்ந்தாள். சங்க மருவிய காலத்திலே தோன்றிய காரைக்கால் அம்மையாரின் வரலாறு பற்றி அனேகருக்குத் தெரிந்திருக்கும். பெண் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் பத்தினித் தெய்வமான காரைக்கால் அம்மையார் தன் கணவனான தனதத்தனுடன் குடும்ப வாழ்க்கை நடத்தப் புறப்பட்டது முதலே அவள் அனுபவித்த சோதனைகள், வேதனைகள் அதிகம்.

இறுதியில் குடும்ப வாழ்வையே வெறுத்து தனது இறுதிப் பயணத்தை தலையால் நடந்து கைலயங்கிரியில் வீற்றிருக்கும் இறைவனை நோக்கிச் செல்கிறார். காரைக்கால் அம்மையாரின் பக்தித் திறத்தை கண்ட சிவபெருமான் "அம்மையே" என்று அழைத்து தனது வலப்பாகத்தில் இருத்தி அருள் பாலித்ததாக பக்தி இலக்கியங்கள் செப்புகின்றன.

அத்தோடு மட்டுமல்லாமல், சங்க மருவிய காலத்தில் கோவலன் - கண்ணகி வரலாற்றை செப்புகின்ற சிலப்பதிகாரத்திலே கண்ணகி தனது கணவனுக்கு எப்படி விசுவாசமாகத் திகழ்ந்தாள்? சிற்றின்பத்திற்கு ஆட்பட்ட கோவலன் தன் அன்பு மனைவியையும் பிரிந்து கணிகைப் பெண்ணான மாதவியுடன் வாழ்க்கை நடத்தி தனது அனைத்து செல்வங்களையும் இழந்த போது தன் நிலையை எண்ணி வருந்துகிறான். அப்போது தான் அவளது அன்பு மனைவியின் ஞாபகம் வருகிறது. உடனடியாக தனது மனைவியின் வீட்டுக்கு விரைகிறான். மனைவியைக் கண்டு நாணிக் கோணி பயத்தினால் நடுங்கியபடி அவள் முன் நிற்கிறான். ஆனால், கண்ணகியோ தனது பாசத்துக்குரிய கணவனின் மனம் நோகாதபடி உபசரித்து அவனுக்குரிய பணிவிடைகளை நிறைவேற்றுகிறாள்.

தற்காலத்தில் இப்படியொரு நிலை ஆண் ஒருவனுக்கு ஏற்பட்டால் நிலையின் விபரீதத்தை கூறத்தேவையில்லை. ஆனால், அக்காலப் பெண்கள் தனது கணவன்மாரின் களங்கத்திற்கு ஊறுவிளைவிக்காமல் கணவனே தனது கண்கண்ட தெய்வமாகக் கருதி வழிபட்டதனை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.

இறுதியாக, திருவள்ளுவரது மனைவியின் சிறப்பை திருவள்ளுவரே செப்புகிறார். அரும் பெரும் பொக்கிசத்தை உலகுக்களித்த திருவள்ளவரின் மனைவி உடல்நலக்குறைவினால் இறந்துவிட்டாள். இதனால், மனம் வெதும்பிய திருவள்ளுவர் பின்வரும் பாடல் மூலம் தனது அன்பு மனைவியின் பிரிவுத்துயரை ஆற்ற முயல்கிறார்:

*"அடிசிற்கினியாளே அன்புடைய மாதே*
*படி சொற்தவறாத பாவாய்*
*பின்தூங்கி முன் எழும்*
*பேதையே*
*நீ போறியோ*
*என் தூங்கும் என்கண் இரா'*

இப்பாடலிலிருந்து தனது மனைவி தன் மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தாள் என்பதை விளக்குகிறார். இதன் பொருள் யாதெனில்,

உணவுக்கு இனியவளே, அன்புடைய பெண்ணே! எனது சொற்படி கேட்டு கீழ்ப்படிந்து நடக்கும் பெண்ணே! இரவில் நான் தூங்கிய பின்பு தூங்கி விடிகாலையில் நான் எழுவதற்கு முன்னரே எழுந்து எனது கடமைகளை தவறாமல் செய்த என் தெய்வமே! நீ என்னை விட்டுப் போறியோ! எப்படி நான் இரவில் நிம்மதியாக தூங்குவேன்? உன்னை விட்டு ஒரு கணமும் பிரிந்திருக்க மாட்டேனே! என்று புலம்புகிறார். இதிலிருந்து ஒரு பெண்ணானவள் எத்துணை சிறப்புப் பெற்று விளங்குகிறாள் என்பதற்கு அக்கால இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

பண்டைத் தமிழர் காலத்தில் ஒரு பெண் கற்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தாள். ஒரு ஆணைத்தவிர வேறொருவரையும் மனதினால் கூட விரும்பாத சிறந்த ஒழுக்கம் மிகுந்தவளாக விளங்கியதாக கூறப்பட்டுள்ளன. ஆனால், ஆண் ஒருவன் பிறன் மனைவியை விரும்பினாலும் அந்த ஆணுடைய மனைவி மன்னித்து மறப்பவளாக விளங்கினாள்.

எது எப்படியோ, ஆணொருவனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்பதையும் குடும்பத்தில் குலவிளக்காக அக்காலப் பெண்கள் சித்திரிக்கப்பட்டு உள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.

ஒரு பெண்ணின் சிறப்பை விளங்கமுனைந்த திருவள்ளுவர் வருமாறு குறிப்பிடுகிறார்:

*"தெய்வம் தொழா(அ)ள்*
*கொழுநன் தொழுதெழு*
*வாள்*
*பெய்யெனப் பெய்யும்*
*மழை"*

என்ற திருக்குறள் மூலம் ஒரு பெண்ணின் சக்தியை சிறப்பை பெருமையை விளக்குகிறார்.

**எஸ். நதிபரன்** B.A. (Hons)

# ஊர்ப் புதினம்

அரச, தனியார் நிறுவனங்களின் வளாகங்களில் சேரும் இலை, குழை, சருகுகளை கூட்டி எரிப்பததையோ, வெளிகளில் கொண்டு போய் போடுவதனையோ கண்டிருப்பீர்கள். அவற்றைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்யும் அரச திணைக்களமொன்றை இங்கு பார்ப்போம்.



அது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள வளாகம். மரங்கள் அடர்ந்த சோலையின் நடுவே கம்பீரமாக அக்கட்டடம் வீற்றிருக்கின்றது. அத் திணைக்கள வளவில் நாளாந்தம் சேரும் இலை, குழைகள் பெரும் பிரச்சினையாக இருக்கும்.

அவற்றைக் கூட்டித் துப்புரவு செய்யும் பணியில் நாளாந்தம் ஈடுபடும் சிற்றூழியர்களும் மிகவும் சலிப்படைவர். அவர்கள் உற்சாகமாக வேலைசெய்யவும் வளவு துப்புரவாக இருக்கவும் அத் திணைக்களத் தலைவர் ஓர் உத்தியைக் கையாண்டர்.

வளவில் சேரும் இலை, குழை, சருகுகளை, பிளாஸ்ரிக், பொலித்தீன், ஆணி, கல் இல்லாமல் தனியாகச் சேகரித்து விவசாயிகளுக்கு விற்றால் அதில் முக்கால் பங்கு பணம் வழங்கப்படுமென்றார். உத்தியோகபூர்வமற்ற இந் நடைமுறை அவ் சிற்றூழியர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. வளவில் சேரும் இலை குழைகள் உடனுக்குடன் கூட்டித் துப்புரவுசெய்யப்பட்டது. இதனால், வளவு எப்போதும் 'பளிச்' என்று துப்புரவாக இருக்கிறது.

குறைந்த மாதாந்த வருமானத்தைப் பெறும் அச்சிற்றூழியர்களுக்கு இந்த மேலதிக வருமானம் வாழ்க்கைத் தர உயர்விற்கு உதவியது. விவசாயிகளுக்கும் சிறந்த இயற்கைப் பசளை கிடைத்தது.

சருகுகள், பொலித்தீன்,பிளாஸ்ரிக் எரித்து அதனால் சூழலுக்கு நிகழும் மாசடைதல், வெப்பமடைதல் என்பன தவிர்க்கப்பட்டன.விற்றுவந்த பணத்தின் காற்பங்கு அத் திணைக்கள வளாகத்திலுள்ள கோயிலின் பூசைக்கும் அதற்குரிய பொருட்களை வாங்குவதற்கும் பயன்பட்டது.

இந்த நடைமுறையை ஏனைய அலுவலகங்களும் பின்பற்றிப் பார்க்கலாம். அல்லவா?


● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம்

## கணனிச் சொற்கள்

01. OLED Organic Light-Emitting Diode
02. LED Light Emitting Diode
03. VDU Visual Display Unit
04. RGB Red, Green, and Blue
05. CD Compact Disc
06. DVD Digital Versatile Disc/Digital Video Disc
07. GUI Graphical User Interface
08. BD Blu_ray Disc
09. FAT File Allocation Table
10. NTFS New Technology File System
11. RAM Random Access Memory
12. ROM Read Only Memory
13. DDC Display Data Channel
14. VGA Video Graphics Array
15. SVGA Super VGA
16. XGA Extended Graphics Array
17. UXGA Ultra Extended Graphics Array
18. SXGA Super Extended Graphics Array
19. UXGA Ultra Extended Graphics Array
20. QXGA Quantum Extended Graphics Array
21. EGA Enhanced Graphics Adapter
22. CGA Color/Graphics Adapter
23. DRAM Dynamic Random Access Memory
24. MDRAM Multibank DRAM
25. SDRAM Synchronous DRAM
26. RDRAM Rambus DRAM
27. DDRS Double Data Rate - Synchronous DRAM
28. SGRAM Synchronous Graphic Random Access Memory
29. VRAM Video RAM
30. WRAM Windows RAM
31. DTD Document Type Definition
32. DHCP Dynamic Host Configuration Protocol
33. DCCP Datagram Congestion Control Protocol
34. SCTP Stream Control Transmission Protocol
35. TCP/IP Transmission Control Protocol / Internet Protocol
36. IIS Internet Information Services
37. SMTP Simple Mail Transfer Protocol
38. IMAP Internet Message Access Protocol
39. POP Post Office Protocol
40. ISDN Integrated Services Digital Network
41. MODEM MOdulate and DEModulate
42. PLC Power Line Communication
43. PLN Power Line Networking
44. ADSL Asymmetric Digital Subscriber Line
45. SDSL Symmetric Digital Subscriber Line
46. DSL Digital Subscriber Loop
47. WIMAX Worldwide Interoperability for Microwave Access
48. ATM Asynchronous Transfer Mode
49. DTM Dynamic synchronous Transfer Mode
50. FDDI Fiber Distributed Data Interface



கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.

முகவரி
'வீரகேசரி' கிளைக் காரியாலயம்
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

# கவிதைகள் மாதிரி

எத்தனை முறை
வில்லை உடைத்து உடைத்து
களைத்து விட்டேன்
இதுவரை இல்லையே
எனக்காக ஒரு சீதை

நிர்வாணமாய்
நின்று
வரைந்துகொண்டிருக்கிறேன்
ஆடை அணிந்ததான
ஓவியங்களை

கண்ணே!
என் கவிதைகளை
மெதுவாகப் படி!
உன் உதடுகளுக்கு
நொந்துவிடப்போகிறது

பிச்சைக்காரர்களை
பாராட்டவேண்டும்
பிச்சை எடுக்கும் போது
''அம்மா தாயே!'' என்று
பெண்களை
கௌரவப்படுத்துகிறார்களே!

வட்ட மேசைகளில்
'மினரல் வாட்டர்'
இருக்கையில்
ஞாபகமாவது வருமா...?
நமது குடிநீர் பிரச்சினை

கணவன் மனைவியை
''மலடி'' என்று
திட்டுகிறான்
வாசலில் நின்றவாறு
பிச்சைக்காரன்
''அம்மா'' என்கிறான்.

கல்யாணக் கனவோடு
கை நீட்டி வாங்கும்
சம்பளமும்
மாதம் இருமுறை
'டை' அடிக்கவே
பத்தாது.

உறக்கம் தான்
எனக்குப் பிடித்த
தபால்காரன்
அவன் தானே - உன்
கனவுகளை
கொண்டுவந்து
தருகிறான்.

ஒருத்தி
தன்வயிற்றை
இடைவிடாது
தடவிப்பார்க்கிறாள்
இதுவும் பெண்
குழந்தைதானா...என்ற
பதற்றத்தோடு...

தேர்தல்
கேட்டுப்பார்!
உதடுகளை விட
புன்னகைக்கே
ஓட்டுக்கள்
அதிகமாகும்.

கொடியில்
காய்கிறது
பூ அலங்காரம்
போட்ட உனது
சேலை
அதற்குள்ளும்
மொய்க்கின்றன
தேனீக்கள்.



நெடுந்தீவு முகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியாகின

தெல்லிப்பழை,

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் பெண்கள் பிரிவில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் வெற்றி பெற்று மாவட்ட சம்பியன்களாகியுள்ளன.

யாழ். புனித பரியோவான் (சென். ஜோன்ஸ்) கல்லூரியின் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற போட்டியில் ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை உடுவில் மான்ஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டுள்ளன.

பெண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது.

# மெய்வல்லுநர் போட்டியில் கலைப்பீடம் முதலாமிடம்

அரியாலை,

யாழ் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்கும் இடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வாரம் பல்கலைக்கழக பிரதான விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத் துறைத் தலைவர் சி. கோபிநாத் தலைமையில் நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற போட்டிகளின் இறுதியில் விஞ்ஞான பீடம் மூன்றாம் இடத்தினையும், முகாமைத்துவக் கற்கைகள் பீடம் இரண்டாம் இடத்தினையும், கலைப்பீடம் 251 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

சுவட்டு நிகழ்ச்சியில் சிறந்த வீரனாக கே. ஐங்கரனும் சிறந்த வீராங்கனையாக எ. அனுசியாவும் தெரிவாகினர். மைதான சிறந்த வீரனாக ரிறோன்கொடுதோரும் சிறந்த வீராங்கனையாக எஸ்.துஷியாவும் தெரிவாகினர். 2011ம் ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரராக ரிறோன்கொடுதோர் தெரிவானார்.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் ம. நடராஜசுந்தரமும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் துறைப் போதனாசிரியர் திரு. ம. பத்மநாதனும் கலந்து சிறப்பித்தனர்.

# வட மாகாண கரப்பந்தாட்ட அணிக்கு 50 வீர, வீராங்கனைகள் தெரிவாகினர்

அரியாலை,

வட மாகாண கரப்பந்தாட்ட அணியினைத் தெரிவுசெய்வதற்கான தெரிவுப் பரீட்சையானது யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி துரையப்பா விளையாட்டு அரங்கில் வட மாகாண விளையாட்டுத்துறையினரால் நடத்தப்பட்டது.

இதில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 80க்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்.

இவர்களில் ஆண்கள் அணிக்கு 25 பேரும், பெண்கள் அணிக்கு 25 பேருமாக 50 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்கான பயிற்சிகள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன எனவும் இதில் இருந்து வட மாகாண அணியானது போட்டிகளின் போது தெரிவு செய்யப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டப் பயிற்றுனரும் இதன் இணைப்பாளருமான சதீஸ்குமார் தெரிவித்தார்.

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு யாழ் வீரர்கள் நால்வர் தெரிவு

அரியாலை,

19 வயதிற்கு உட்பட்ட இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களின் தெரிவுப் பரீட்சைக்கு யாழ். மாவட்ட வீரர்கள் 04 பேர் தெரிவாகியுள்ளனர் என வட மாகாண கிரிக்கெட் பயிற்றுனர் ரவீந்திர புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

ரியூட்டன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), சிலோவின் (கொக்குவில் இந்துக் கல்லூரி), மதுஷன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜனந்தன்(மகாஜனக் கல்லூரி) ஆகிய நால்வரும் கடந்த திங்கட்கிழமை என்.சி.சி. விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற முதலாவது தெரிவுப் போட்டியில் பங்குபற்றியுள்ளனர்.

மிகநீண்ட காலத்திற்குப் பின்னர் இவ்வாறானதொரு சந்தர்ப்பம் யாழ்.வீரர்களுக்குக் கிடைத்துள்ளமை யாழ். கிரிக்கெட் வீரர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாய்ப்பை அவர்கள் நன்கு பயன்படுத்தி யாழ் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பார்கள் என நம்பலாம்.

# பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி முதன் முறையாக யாழ். பல்கலைக்கழகத்தில்

அரியாலை,

முதன் முறையாக அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 50 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை 07ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு விஞ்ஞான அலகு பணிப்பாளர் கணேசநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வுக்கு கணித புள்ளிவிபரவியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளை ஆரம்பித்துவைத்தார்.

முதலாவது போட்டியில் கொழும்பு பல்கலைக்கழக அணியும், பேராதனை பல்கலைக்கழக அணியும்மோதிக்கொண்டன.

கொழும்பு பல்கலைக்கழக அணி 02 விக்கெட்டுக்களால் முதல் போட்டியில் வெற்றி பெற்றது. நாணய சுழற்சியில் வென்ற கொழும்பு பல்கலைக்கழக அணி முதலில் களத்தடுப்பினைத் தெரிவுசெய்தது. துடுப்பெடுத்தாடிய பேராதனை பல்கலைக்கழக அணி 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக விஜயசேகரவும் தசநாயக்கவும் தலா 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொழும்பு பல்கலைக்கழக அணி வீரர் முனிதாஸ 19 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டினை வீழ்த்தினர்.

192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கிய கொழும்பு பல்கலைக்கழக அணி சற்றுத் தடுமாற்றத்துடன் ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இவ் அணியின் வீரர் விஜயகுணவர்த்தன ஆட்டமிழக்காமல் பெற்ற சதத்தின் மூலம் 30.5 ஓவர்களில் 08 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியினைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இப்போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்திலும் ஏனைய பல்கலைக்கழகங்களின் மைதானங்களிலும் நடைபெறவுள்ளன என விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் கே. கணேசநாதன் தெரிவித்துள்ளார்.

# யாழ். மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள்

அரியாலை,

2011 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்டப் பாடசாலைகளின் பெரு விளையாட்டுப் போட்டிகள் கடந்த 02 ஆம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் வலிகாமம் வலயம், யாழ். வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம், வடமராட்சி வலயம் ஆகிய 05 வலயங்களில் நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் இதில் மோதுகின்றன.

இதுவரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

கிரிக்கெட் (மென்பந்து): ஆண்கள் பிரிவு (19 வயது)

முதலாம் இடம் - நெல்லியடி மகாவித்தியாலயம், இரண்டாம் இடம் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, மூன்றாம் இடம் - யாழ். மத்திய கல்லூரி.

**கிரிக்கெட் (மென்பந்து): பெண்கள் பிரிவு (19 வயது)**

முதலாம் இடம் - சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, இரண்டாம் இடம் - வட இந்து மகளிர் கல்லூரி, மூன்றாமிம் இடம் - வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

**எல்லே : ஆண்கள் பிரிவு (19 வயது)**

முதலாம் இடம் - ஹார்ட்லிக் கல்லூரி, இரண்டாம் இடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் கொக்குவில் இந்துக் கல்லூரி.

எல்லே: பெண்கள் பிரிவு (19 வயது)

முதலாம் இடம் - சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, இரண்டாம் இடம் - வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, மூன்றாம் இடம் - மணற்காடு றோ.க.த.க. வித்தியாலயம்.

**கூடைப்பந்தாட்டம்: ஆண்கள் பிரிவு(19 வயது)**

முதலாம் இடம் - யாழ். மத்திய கல்லூரி, இரண்டாம் இடம் - யாழ். இந்துக் கல்லூரி

கூடைப்பந்தாட்டம்: பெண்கள் பிரிவு (19 வயது)

முதலாம் இடம் - யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம், இரண்டாம் இடம் - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

# சர்வதேச மெய்வல்லுநர் போட்டிக்கு தெரிவானார்

அரியாலை,

2011 ஆம் ஆண்டுக்கான சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் ஜூலை மாதம் சீனாவில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக வீரான ரிறோன்கொடுதோர் 4 x 400 மீற்றர் ஓட்டப்போட்டிக் குழுவில் தெரிவாகியுள்ளார். இவர் கடந்த வருடம் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் தனது திறமையை வெளிக்காட்டியமையால் இவ்வாய்ப்பு அவருக்குக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்புசாமி திருவிழாவும் நிபந்தனைகளும்

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது விராலிப்பட்டி கிராமம். அங்குள்ள காட்டுக்குள்தான் கோட்டக் கருப்புசாமி கோயில் உள்ளது. குதிரையில் அமர்ந்தபடி 10 அடி உயரத்தில் கையில் அரிவாள், துப்பாக்கியுடன் நிற்கும் கோட்டக் கருப்புசாமியை பார்த்தாலே குலைநடுங்கும். ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் இங்கு பண்டிகை நடக்கும்.

''கோட்டக் கருப்புசாமி நோம்பு தொடங்கிடுச்சு.. யாரும் கோக்குமாக்குத்தனமா ஏதும் பண்ணிப்புடாதீங்க.. அப்புறம் சாமிக்கு கோபம் வந்துச்சு.. தாங்க மாட்டீங்க.. ஊரும் தாங்காது.. எல்லாம் உங்க நன்மைக்கும் ஊர் நன்மைக்கும்தான் சொல்றோம். ஜாக்கிரதை... ஜாக்கிரதை'' இப்படி ஓர் எச்சரிக்கை குரல் அந்த கிராமத்தில் ஓங்கி ஒலிக்கும். இதை சாதாரண தண்டோரா குரலாக யாரும் கருத மாட்டார்கள். தெய்வ வாக்காகவே ஆகிவிடும். யாரும் தப்பித்தவறி கூட கட்டுப்பாட்டை மீற மாட்டார்கள். அப்படி மீறியவர்கள் அனுபவித்த அவஸ்தைகளின் கதைகள் அதிகம்.

எதற்காக இந்தக் கட்டுப்பாடுகள், அதை மீறியவர்களுக்கு கோட்டக் கருப்புசாமி கொடுத்த தண்டனைதான் என்ன, சம்பிரதாயங்களை மீறினால் சாமிக்கு ஏன் கோபம் வருகிறது என்பதெல்லாம் இன்னும் விளங்காத மர்மமாக கிராம மக்களுக்கு இருக்கிறது.

கோட்டக் கருப்புசாமி பண்டிகை தொடங்கிவிட்டாலே ஊருக்குள் மயான அமைதிதான். சங்கிலியால் பிணைக்கப்பட்ட கோட்டக் கருப்பு ஆவேசமாக நள்ளிரவில் வேட்டைக்கு கிளம்புவதை உச்சகட்டமாக கூறலாம். அப்போது தப்பித்தவறி யாராவது எதிர்பட்டு விட்டால் அவர்கள் கதி, அதோ கதிதான். இந்த பண்டிகையில் பங்கேற்பவர்கள் லுங்கி கட்டக்கூடாது.

பண்டிகை முடியும்வரை ஊருக்குள் நுழையும் வாகனங்களில் விளக்கு எரியக்கூடாது ஊருக்குள் ஒலிபெருக்கி போடக்கூடாது, வீட்டில் டி.வி போடக்கூடாது. வெளியூருக்கு சென்றால் கிராமத்தினர் யாரும் இரவில் தங்கக்கூடாது. இருட்டுவதற்குள் ஊருக்கே வந்துவிட வேண்டும். கருப்புசாமி வேட்டைக்கு செல்லும் போது பிராணிகளோ, மக்களோ குறுக்கே செல்லக்கூடாது என்று கட்டுப்பாடுகளை அடுக்குகின்றனர். கன்னங்கரேலென்று இருக்கும் ஆட்டைதான் சாமிக்கு பலி கொடுப்பர். சாமிக்கு நேர்ந்துவிடும் ஆட்டை திருடிச் சென்று சமைத்து சாப்பிட்டால், மரணத்தில் இருந்து தப்பிக்க முடியாது என்று மிரட்டுகின்றனர் கிராம மக்கள்.

ஆகாய பூஜை நடுநிசியில்தான் ஆரம்பமாகும். பன்றிக்குட்டி ஈரல், உப்பு பொங்கல், சக்தி கிடா மூன்றையும் மண் கலயத்தில் செய்து இரவு பூஜையில் படைத்து பக்தர்களுக்கு தருவார்கள். இந்த வைபவத்தை யாரும் படம் பிடிக்க முடியாது. திருட்டுத்தனமாக கேமராவை கிளிக் செய்தாலும் படம் விழாதாம். இதை உறுதிப்படுத்துவதுபோல 'கிழக்குச்சீமையிலே', 'கருத்தம்மா' படங்களை இயக்குனர் பாரதிராஜா இங்கு எடுக்க வந்தபோது படம் பதிவாகவில்லை என்ற பேச்சும் உலவுகிறது.

இரவு முழுவதும் பூஜை நடக்கிறது. பூஜை துவங்குவதற்கு முன்பு 2 மணி நேரம் ஊரில் உள்ள விளக்குகள் அனைத்தும் அணைக்கப்படுகிறன. அந்த இருட்டை கிழித்துக் கொண்டுதான் சங்கிலியால் உடல் முழுவதும் இறுக்க கட்டியபடி வேட்டைக்கு கிளம்புவார் கோட்டக் கருப்பு. நோன்பு சாட்டுவதற்கு 15 நாள் முன்பு அரை கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சாவடியில் நேர்த்திக்கடன்களை பெண்கள் செலுத்துவர். சாமி சாட்டுவதற்கு 15 நாளுக்கு முன்பிருந்தே ஊருக்குள் யாரும் இரவில் விளக்கு போட மாட்டார்கள். பண்டிகை நேரத்தில் ஊருக்குள் வந்து செல்லும் பஸ் சாரதிகளிடமும் முகப்பு விளக்கை அணைக்குமாறு கிராமத்தினர் கேட்டுக்கொள்வர். அதையும் மீறி விளக்கை எரிய விட்டுச் சென்ற ஒரு சாரதி, விபத்தில் சிக்கி 2 கால்களை இழந்த சம்பவமும் நடந்துள்ளது.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [13.05.11 முதல் 19.05.11 வரை]

கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

### ★ மேஷம்



மேடராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலனே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலையில் சிறு சிறு அலைச்சல் நிலைகள் இருக்கும். குடும்பத்தில் சுமாரான மத்திமமான பலன்களே அமையும். பண வரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும். குடும்பத்தில் சிறு சிறு மருத்துவ செலவுகள் ஏற்பட்டு மறையும் பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும் மாணவர்கள் முயற்சி தேவை.

### ★ இடபம்



இடபராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். தொழில் விடயங்களில் செலவீனம் ஏற்படும் குடும்பத்தில் எதிர்பாராத வகைச் செலவீனங்கள் அமையும் எடுக்கின்ற முயற்சிகள் சிறு இழுபறியின் பின்னர் வெற்றி தரும்.

கடன் நிலைகளில் இழுபறி நிலைகள் தொடரும் பெண்களுக்கு நன்மை உண்டு.

### ★ மிதுனம்



மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியுண்டு. தொழில்நிலைகளில் முன்னேற்றமான பலன் அமையும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். குடும்பத்தில் நல்ல சிறப்பும் அனுகூலமான பலனும் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலன் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கும் சிறப்புமுண்டு.

### ★ கடகம்



கடகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில்சார்ந்த பிரயாணங்கள் ஏற்படும் நிலையுண்டு. தேவையற்ற அலைச்சல் நிலை இருக்கும் குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். தொழில் நிலையில் ஏதேனும் மாற்றங்கள் அமையலாம். கடன் நிலையில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ சிம்மம்



சிம்மராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான பலா பலன் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மிகவும் அனுகூலமான பலன்கள் அமையும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையே அமையும். எதிர்பார்க்கின்ற விடயங்களில் வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ கன்னி



கன்னிராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் தடை, தாமத நிலைகள் இருக்கும். தொழில் நிலையில் அலைச்சல் வேலைப்பளு ஏற்படும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும் குடும்பத்தில் சிறு மந்தமான பலா பலன்கள் அமையும். கடன் நிலைகளில் இழுபறி நிலைகள் தொடரும் பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ துலாம்



துலாராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் ஓரளவிற்கு வெற்றிகள் அமையும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் சிறு இழுபறியின் பின் வெற்றி தரும். கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலனே ஏற்படும்.

### ★ விருச்சிகம்



விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலை முன்னேற்றம் அமைந்திருக்கும். வழக்கு விவகாரங்களில் தலையீடு ஏற்படும் பலனுண்டு.

குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். பண வரவு சற்று சற்று மத்திமமான பலன்களே அமையும். கடன் நிலைகளில் இழுபறி மந்த நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.

### ★ தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன் ஏற்படும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் அமையும். நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலையும் அமையும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் அமையும்.

பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ மகரம்



மகரராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திம பலனே அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் சற்றுமத்திமமான சுமாரான பலனே ஏற்படும். எதிர்பாராத வகை சுகயீனங்கள் ஏற்படும் நிலையுண்டு. பண வரவு சற்று சுமாராகவே அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் இருக்கும்.

பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ கும்பம்



கும்பராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் உண்டு. தொழில் நிலையில் முன்னேற்றம் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலனுண்டு. சகோதரர் வழியில் செலவீனங்கள் அமைய இடமுண்டு. கடன் நிலைகளல் சற்று இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

### ★ மீனம்



மீனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் அமையும் எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றியுண்டு. தொழில் நிலையில் முன்னேற்றங்கள் அமையும். நிலையுண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். குடும்பத்தில் நல்ல முன்னேற்ற நிலைகள் இருக்கும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன் உண்டு.

பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தனது மாணவர்களின் விளையாட்டு மைதானத்திற்கென மட்டும் பல ஏக்கர் காணியினை கொண்டிருந்த மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம் தற்போது ஒரு சிறிய காணியில் அதன் அனைத்து செயற்பாடுகளும் முடக்கப்பட்ட நிலையில் உள்ளது.**

# இடப்பற்றாக்குறையுடன் இயங்கும் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்



1816 ஆம் ஆண்டுகளில் இலங்கை வந்து சமயத்தொண்டுடன் கல்வித் தொண்டினையும் இணைத்து வளர்க்க ஆரம்பித்த அமெரிக்கன் மிஷனரியினர்களால் 1818 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் திகதி டானியல் பூவர் என்பவரால் மயிலிட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை எனும் பெயருடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலையே தற்போதைய மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம் ஆகும்.



**யாழ்.மாவட்டத்திலேயே இயற்கையான பெரியளவிலான விளையாட்டு மைதானத்தை சொந்தமாகக் கொண்ட பாடசாலையானது தற்பொழுது சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இற்றைக்கு 21 வருட காலத்திற்கு மேலாக சிறிய இடத்தில் அரை நிரந்தரக் கட்டிடங்களில் பல்வேறு நெருக்கடிகளுடன் இயங்கி வருகின்றது.**

மயிலிட்டியில் சுமார் 45 பரப்பு விசாலமாகக் கொண்ட தேவாலயப் பகுதியில் உள்ள தேவாலயப் போதகரின் இருப்பிட விறாந்தையில் 33 மாணவர்களுடனேயே அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு இயங்க ஆரம்பித்தது.

இப்பாடசாலையில் நாளுக்கு நாள் மாணவர் தொகை அதிகரிக்கத்தொடங்கியது. இதனால், மேற்படி விறாந்தை தெற்குப் பக்கமாகவும் மேற்குப் பக்கமாகவும் விஸ்தரிக்கப்பட்டது.

இப்பாடசாலை பல ஆண்டுகளாக 5 ஆம் வகுப்புடன் மட்டுமே இயங்கிவந்தது. தொடர்ந்து 1965 இல் 6ஆம் வகுப்பும் 1974 இல் 8ஆம் வகுப்பும் தொடங்கப்பட்டு படிப்படியாக 10ஆம் வகுப்பு வரை உயர்ந்தது.

தொடர்ந்து 1963 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதியன்று இப் பாடசாலை கல்விப்பணிப்பாளரால் பொறுப்பேற்கப்பட்டது. பின் 1963 ஜூலை 03 இல் இப்பாடசாலை அரசுடைமை ஆக்கப்பட்டது. பின் 1975 இல் இப்பாடசாலை அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் வி. செல்வநாயகத்தால் 'மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப்பாடசாலையானது மயிலிட்டியில் அதன் அமைவிடமாக மயிலிட்டி வடக்குப் பகுதியில் நிறைந்த பனந்தோப்பையும், மேற்கே மயிலிட்டி - கட்டுவன் வீதியையும், தெற்கே ஐயனார் வீதியினையும், கிழக்குப் பக்கமாக பெரிய அளவிலான விளையாட்டு மைதானத்தையும் கொண்டு சிறப்புற இயங்கிவந்தது.

இவ்வாறு சிறப்பான இயற்கை வளங்களும் அதற்கு மேலாக பௌதீக வளங்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டமைந்து கல்வியில் மட்டுமன்றி ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்புற இயங்கிய பாடசாலையினை நிலைகுலைய வைக்கவென உருவாகிய 1990 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் தன்னுடைய அனைத்து வளங்களையும் இழந்து கூனிக்குறுகி மற்றவர்கள் வளத்தினை நம்பி இயங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

யாழ். மாவட்டத்திலேயே இயற்கையான பெரியளவிலான விளையாட்டு மைதானத்தை சொந்தமாகக் கொண்ட இப் பாடசாலையானது தற்பொழுது சுன்னாகம்- சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இற்றைக்கு 21 வருட காலத்திற்கு மேலாக சிறிய இடத்தில் அரை நிரந்தரக் கட்டடங்களில் பல்வேறு தேவைகளுடன் இயங்கிவருகின்றது.

200 வருடங்களுக்கு மேற்பட்ட வகை ii ஐச் சேர்ந்த இப் பாடசாலையானது இடம்பெயர்ந்த நிலையில் அமைந்தாலும் ஏனைய பாடசாலைகளைப் போல் அடிக்கடி இடம் மாறாமல் 21 வருட காலமாக ஒரே இடத்தில் இயங்குவதற்குக் காரணம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் அவரைக் காப்பாளராகக் கொண்டியங்கும் வேலஸ் அறக்கட்டளை நிதியமும் ஆகும்.

இப்பாடசாலையில் பல்வேறுபட்ட பல அதிபர்கள் சிறப்பாக கடமையாற்றியுள்ள நிலையில் தற்போதைய அதிபராக 2009ஆம் ஆண்டு முதல் வே. உதயமோகன் அவர்கள் சிறப்புற பாடசாலையினை நடத்திச்செல்வதனை அவதானிக்க முடிகின்றது.

இப்பாடசாலையில் 300 இற்கு மேற்பட்ட மாணவர்களும் 18 ஆசிரியர்களும் தமது கல்விச் செயற்பாட்டை திறம்பட மேற்கொண்டு வருகின்றனர். இப்பாடசாலை ஓர் இடம்பெயர் பாடசாலையாக இருப்பினும் ஏனைய இடம்பெயர் பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக குறையாத மாணவர்கள் தொகையையும் கோட்ட மட்ட, மாவட்ட மட்டத்தில் பல்வேறு சாதனைகளையும் நிலைநாட்டி வருகின்றது.

பல வளப் பற்றாக்குறைகளுடன் இப்பாடசாலை இயங்கிவந்தாலும் தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர பரீட்சை ஆகியவற்றில் முடிந்தவரை தனது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றது.

இங்கு புலமைப்பரிசில் பரீட்சையில் 2009 இல் செ. பிறின்சிகா என்ற மாணவி 147 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு புகழைத் தேடித்தந்துள்ளார். அதேபோல், க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் 2005ஆம் ஆண்டு 50% உம், 2009ஆம் ஆண்டில் 72% உம், 2010ஆம் ஆண்டிலும் 2009 இற்கு சமனான வீதத்திலும் சித்தி பெற்று பாடசாலை தனது திறமையினை வெளிக்காட்டி வருகின்றது.இப்பாடசாலையில் தற்போது ஆரம்பக் கல்வி ஆசிரியர், ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோர் போதியளவு இல்லாமல் காணப்படுவதை அவதானிக்க முடிவதுடன் இத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டால் இப்பாடசாலை இன்னும் மிளிர்ந்து நிற்கும் என்பது திண்ணம்.

கே. ஆனந்தன் (B.com.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



யாழ். மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் புதிய கொள்வனவு விற்பனை சேவை நிலையத் திறப்பு விழாவின்போது திருநெல்வேலி விவசாய திணைக்கள பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் மங்களவிளக்கேற்றுவதையும் அருகில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிற்பதனையும் படத்தில் காணலாம்.
(படம்: யாழ்.மேலதிக நிருபர்)



கல்விச் சுற்றுலாவினை மேற்கொண்டு தென்னிலங்கை சென்ற முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியினை பார்வையிட்டபோது.... (படம்: மானிப்பாய் நிருபர்)



கோப்பாயைச் சேர்ந்த சிறிசாந்தனின் சிறுநீரக சிகிச்சைக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தை வழங்கியபோது அருகில் சிறுவனின் பெற்றோரும் ஆளுநரின் செயலாளர் என். நாகராஜனும் நிற்பதைப் படத்தில் காணலாம்.




கொக்குவில் இந்து விளையாட்டுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த இரத்ததான நிகழ்வில் இளைஞர் ஒருவர் இரத்ததானம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: யாழ். மேலதிக நிருபர்)



உடுவில் தூபவி தையல் பயிற்சி நிலையத்தின் கண்காட்சி நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட உடுவில் மனிதவள அபிவிருத்தி உதவியாளர் எஸ். ரஞ்சீன்ராஜ் கண்காட்சிக் கூடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் நிருபர்)



ஏ.ஏ.ஏ சர்வதேச திரைப்பட நிறுவனத்தினால் முல்லைத்தீவு அலம்பில் அ.த.க பாடசாலையில் அமைத்துக் கொடுக்கப்பட்ட சிறுவர் பூங்காவை நிறுவனத்தின் தலைவர் க.செவ்வேள் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டை விழுங்கும் சூதாட்டம்...

உதைபந்தாட்டத்துக்கு அடுத்தபடியாக கோடிக்கணக்கான ரசிகர்களைக் கட்டிப்போட்டுள்ள விளையாட்டாக கிரிக்கெட் காணப்படுகின்றது. மரியாதைக்கும் போற்றுதற்குமுரிய விளையாட்டுக்களில் ஒன்றாகவுள்ள கிரிக்கெட், உலகில் ஆதிக்கத்தினை செலுத்தி வருகிறது. இந்நிலையில் இத்தனை மேன்மைமிக்க கிரிக்கெட்டில் களங்கம் விளைவிக்கும் ஒன்றாக ஒட்டிக்கொண்டுள்ள சூதாட்டம் கிரிக்கெட்டை விழுங்கும் அளவிற்கு உருவெடுத்துள்ளமை ஒரு வித அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

விளையாட்டு என்பது தனியே திறமை அடிப்படையில் அமைந்த ஒன்றல்ல. ஒழுக்க விழுமியம் கண்ணியமான செயற்பாடுகள் நேர்மை போன்ற அனைத்து நற்பண்புகளையும் உள்ளடக்கிய ஒன்றாகவே உள்ளது. இவைகள் அனைத்தும் ஒருங்கே சேரும் பொழுதே விளையாட்டின் தூய்மை, மேன்மை பேணப்படும் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் தற்போது விளையாட்டில் இவை அனைத்தையும் மறந்து பணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றமை விளையாட்டின் தூய்மையை களங்கப்படுத்துவதாக அமைந்து விடுகின்றது. இது அதிகமாக கிரிக்கெட்டில் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மெல்ல மெல்ல நகர்ந்து வந்த சூதாட்டம் தற்போது கிரிக்கெட் உலகினை ஆட்டம் காணும் வகையில் தாக்கத்தினை ஏற்படுத்தி நிற்பது கிரிக்கெட்டின் எதிர் காலம் குறித்த கேள்வியை உண்டு பண்ணியுள்ளது. அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இந்த ஆட்ட நிர்ணயம் என்ற சூதாட்டம் வீரர்களின் எதிர்காலம் குறித்த கேள்வியை ஏற்படுத்தி உள்ளதுடன் அணிகளுக்கும் களங்கத்தையும் ஏற்படுத்தி வருகின்றது.

சூதாட்டத்தில் சிக்கி தனது கிரிக்கெட் வாழ்வை சூன்யமாக்கிக் கொண்ட கிரிக்கெட் ஜாம்பவான்களை அறிந்திருக்கிறோம். இந்நிலையில் அண்மையில் நடந்துமுடிந்த 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரினையடுத்து அதில் பங்குபற்றிய அணிகள் சிலவற்றில் தற்போது சூதாட்டப்புயல் எழுந்துள்ளது. இது தற்போது கிரிக்கெட் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நடந்து முடிந்த 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் 40 ஆயிரம் கோடி இந்திய ரூபாவுக்கு சூதாட்டம் இடம்பெற்றுள்ளதாக ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன.

கிரிக்கெட் உலகில் கடந்த ஆறுமாதமாக இடம்பெறும் சூதாட்டங்களை 'அன் கோயிங் ஆப்ரேஷன்' என்ற பெயரில் செய்திகளாக சேகரித்துள்ள பத்திரிகை ஒன்று சூதாட்டம் தொடர்பில் பல செய்திகளை வெளியிட்டுள்ளது. அதில் 10 ஆவது உலகக்கிண்ணத் தொடரில் மட்டும் 40 ஆயிரம் கோடி இந்திய ரூபாவுக்கு சூதாட்டம் இடம்பெற்றுள்ளதாகவும் தொடரில் இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான அரையிறுதியில் அப்ரிடி சூதாட்டத்தில் ஈடுபட மறுத்தார். ஆனால் 4 பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் அத்தோடு இந்திய வீரர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும்(புக்கிகள்) இடையிலான உரையாடல்கள் பதிவாகியுள்ளன. போன்ற பல தகவல்களை வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கையில் இலங்கை கிரிக்கெட்டில் அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி நிற்கின்றது முன்னாள் வீரர் ஹசான் திலகரட்ண வெளியிட்டுள்ள சூதாட்ட புகார். அதாவது இலங்கை கிரிக்கெட்டில் 1992 ஆம் ஆண்டு



முதல் சூதாட்டம் இடம் பெற்று வருவதாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை இலங்கை கிரிக்கெட்டிலும் சூதாட்டப் புயலை உண்டு பண்ணியுள்ளது.

அதேவேளை, தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் 4 ஆவது ஐ.பி.எல். தொடரில் வீரர்களை சூதாட்டத்தில் ஈடுபட வைக்குமாறு தன்னை சூதாட்டத் தரகர்கள் வலியுறுத்தியதாக அண்மையில் பிரபல மொடல் அழகியான லீசா மலிக் பொலிஸில் புகார் செய்துள்ளமை 4 ஆவது ஐ.பி.எல். தொடரிலும் சூதாட்டம் ஊடுருவலாம் அல்லது ஊடுருவியுள்ளதா ஏன்ற சந்தேகத்தினை உண்டு பண்ணியுள்ளது.

இவ்வாறு அண்மைக்காலமாக சூதாட்டப்புயல் கிரிக்கெட் உலகில் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளமை கிரிக்கெட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

அதிக பணப்புழக்கத்தைக் கொண்ட இந்த விளையாட்டை சூதாட்டத் தரகர்கள் கருவியாக பயன்படுத்திக்கொள்கின்றனர். அதிக பணத்தை காண்பித்து வீரர்கள் மற்றும் அணிகளை அடிமையாக்கி வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளில் ஆட்ட நிர்ணயம் தொடர்பாக அண்ணளவாக 14 வீரர்கள் தண்டனைகளைப் பெற்றுள்ளனர். குறிப்பாக 2000 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் சலீம் மலிக், ஆதர் ரஹ்மானன் இந்தியாவின் அஸாருடீன், தென்னாபிரிக்காவின் ஹென்ஸி குரோஞ்ஞே ஆகியோர் ஆயுட்கால போட்டித்தடையைப்பெற்றனர். 2001 இல் இந்தியாவின் அஜே ஜடேயா (5 வருடம்) 2004 ஆம் ஆண்டு கென்யாவின் மொரிஸ் உடும்பே (5 வருடம்), 2006 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் ஹென்றி வில்லியம் (6 மாதம்), 2010 பாகிஸ்தானின் முஹமட் அமீர் (5வருடம்), முஹமட் ஆஷிப், சல்மான் பட் (7 வருடம்) அகியோர் போட்டித்தடைகளை பெற்றுள்ளனர்.

இந்தவகையில் பார்க்கும் போது கிரிக்கெட்டில் சூதாட்டத்தின் ஆதிக்கம் அதிகரித்துக்கொண்டே செல்வது தெளிவாகின்றது. எனவே கிரிக்கெட்டை மெல்ல மெல்ல விழுங்கும் இந்த சூதாட்ட த்தினை முற்று முழுதாக அதிலிருந்து விடுவிப்பதற்கு வீரர்கள் உட்பட அணிகள் நா[illegible]கள் என்பன விழிப்புடன் செயற்படுவது அவசியமானதாகவுள்ளது.

அத்துடன் ஐ.சி.சி. இதில் மழு மூச்சாக இறங்கி மாற்றுத்திட்டங்களை ஏற்படுத்துவதற்கு வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday May 13, 2011